In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆத்ம குஹா

சிதானந்த மயம்

ஸ்ரீ வித்யை பற்றிய ஒரு கையேடு



நஜன்

பிரதிபா பிரசுரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரதிபா பிரசுரம்

2017–ல் வெளிவந்த புத்தகங்கள்

ஸ்ரீவித்யா மகாயாகக்கிரமம்

(தேவி நவாவரண பூஜை)

ஒன்பது ஆவரணங்கள் கொண்டது

கண்கண்ட தெய்வம் கருமாரி

(வைசூரி அம்மை பற்றி முழு விவரங்களுடன்)

ஜகன்மாதா லலிதா

(மந்திர, யந்திர, தந்திர விளக்கம்)

தேவி புவனேஸ்வரி

புவனேஸ்வரி ஜபம், பூஜை, திரிசதி

புதுக்கோட்டை அதிஷ்டான மகான்களின் வரலாறுகளுடன்)

விவரங்களுக்கு

பிரதிபா பிரசுரம்

'லலிதாலயா'

95/1, ஆடம் தெரு, மயிலாப்பூர்,

சென்னை–600 004. போன் : 99413 82852

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆத்ம குஹா சிதானந்த மயம்

(ஸ்ரீ வித்யை பற்றி ஒரு கையேடு)

ஆசிரியர்
ஸ்ரீ வித்யா ஞானபாஸ்கரா
நஜன்
(எஸ். நடராஜன்)



பிரதிபா பிரசுரம்
தோற்றம் : நவராத்ரி 1973

நிறுவனர் :
என். லலிதாம்பாள்

பிரதிபா பிரசுரம்
"லலிதாலயா"
95/1, ஆடம் தெரு, மயிலாப்பூர்
சென்னை – 600 004 Mobile : 9941382852

உரிமையுள்ளது) (விலை ரூ. 60–00

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆத்ம குஹா சிதானந்த மயம்
(Atma Guha Sidananda Mayam)

முதற் பதிப்பு : ஜனவரி 1979
மறு பதிப்புகள் : 1983, 2000
நான்காம் பதிப்பு : ஜனவரி 2019

பிரதிபா பிரசுரம்
35

விலை : ரூ. 60–00

குருநாதர் ஸ்ரீ சிதானந்த நாதரின் நூற்றாண்டு விழாவையொட்டி காஞ்சி காமாட்சி அம்மன் விசேஷ பூஜையின் சிறப்பு மலராக வெளியிடப்பட்டது

பொருளடக்கம்

1. சிதானந்த மயம்
2. குரு மிக மிக அவசியம்
3. சிதானந்த நாதர் வரலாறு
4. குரு மண்டலம்
5. தேவி உபாசனை
6. ஸ்ரீ சக்ர வழிபாடு
7. உபாசனா மார்க்கத்தில் பல படிகள்
8. பஞ்சதசியும், ஷோடசியும்
9. தேவியின் மந்தர ஜபம்
10. பிந்து தர்ப்பணம்
முடிவுரை

Typeset by MADURAM LASER PRINT - Chennai - 4.
Printed by Chellam offset Printers - Chennai - 4.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சமர்ப்பணம்



ஸ்ரீ சிதானந்த நாதரின்
முக்கியமான சிஷ்யர்களில் ஒருவரும்
ஸ்ரீ வித்யா உபாஸகருமான

ஸ்ரீ ராஜாமணி அய்யர்

(ஸ்ரீ சம்வித்தானந்த நாதர்)

அவர்கள் நினைவிற்கு
இந்நூலை பக்தியுடன் சமர்ப்பிக்கிறோம்

- பிரதிபா பிரசுரத்தினர்.

நடுவிலுள்ளது ஸ்ரீ குஹானந்த நாதர் படம். இடது கோடியில் ஸ்ரீ சிதானந்த நாதர், வலது கோடியில் ஸ்ரீ ராஜாமணி அய்யர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முகவுரை

ஐம்கார ஹ்ரீம்கார ரஹஸ்ய யுக்த
ஸ்ரீம்கார கூடார்த்த மஹா விபூத்யா
ஓம்கார மர்ம ப்ரதிபாதினீப்யாம்
நமோ நம: ஸ்ரீ குரு பாதுகாப்யாம்!!

எங்கள் குருநாதர் ஸ்ரீ சிதானந்தர் அவர்களின் முயற்சி காரணமாக ஸ்ரீ வித்யை என்ற அம்பிகை வழிபாடும், சுவாஸினிகள் அம்பிகையை பூஜிப்பதும் நன்கு பரவியுள்ளன. அவருடைய சிஷ்யர்கள் அப்பணியை பல விதங்களில் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள்.

எனது பெற்றோர்களான ஸ்ரீமதி மங்களாம்பாள் ஸ்ரீ ராமசுப்பிரமணிய அய்யர் அவர்களால் முடிந்த அளவுக்கு சிஷ்யர்கள் கூட்டத்தை பெருக்கி வந்தனர். ஸ்ரீ பத்மானந்த நாதர் (ஸ்ரீ ராமமூர்த்தி அய்யர்) ஆண்டு தோறும் குருநாதர் பூஜையையொட்டி திரய திரிசதி (900) சுவாஸினிகள் பூஜையை நடத்தி வருகிறார்.

ஸ்ரீமதி லலிதாம்பாளும், ஸ்ரீ நஜனும் அம்பிகை பற்றியும் ஆன்மீக விஷயங்களைப் பற்றியும் ஏராளமான புத்தகங்களை வெளியிட்டு அரும் தொண்டு செய்து வருகிறார்கள். இவ்வளவு முயற்சிகள் இருந்தும் ஸ்ரீசக்ரம் வைத்து பூஜிக்கலாமா? எங்களுக்கு ஷோடசி உபதேசம் செய்து வையுங்கள் இப்படியெல்லாம் விஷயம் தெரியாமல் பலர் கேட்கிறார்கள்.

படிப்பு எப்படி அரிச்சுவடியில் ஆரம்பித்து பி. எ. எம். ஏ. என்றெல்லாம் படிக்கிறோமோ அதுபோல ஸ்ரீ வித்யை தேவி வழிபாட்டிலும் பல படிகளுண்டு. ஸ்ரீ வித்யை என்ன என்று தெரிந்துக் கொள்ள விரும்பு பவர்களுக்கும், தீக்ஷை என்றால் என்ன?. எப்படி ஜபம் செய்வது? எப்படி பூஜை செய்வது? இவை எல்லாம் ஓரளவுக்கு புரிய வைக்கவே இப்புத்தகம் வெளியிடப்படுகிறது.

அம்பிகையை வழிபடவும் ஸ்ரீ வித்யை தீக்ஷை பெறவும் பூர்வ ஜென்ம புண்ணியம் பெற்றிருக்க வேண்டும். "நஜன்" அவர்கள் புத்தகம் ஒவ்வொன்றையும் படித்தாலே ஏராளமான விஷயங்களை தெரிந்துக்கொள்ளலாம். துர்வாஸர், பரசுராமர், தத்தத்ரேயர், அகஸ்தியர் போன்ற தேவி உபாசகர்கள் எழுதிய நூல்கள் எல்லாம் இப்போது அச்சில் இல்லை. அவைகளை எல்லாம் எங்கிருந்தோ தேடிக் கண்டு பிடித்த "நஜன்" தன் புத்தகங்களில் கொண்டு வருகிறார், அவரும் அவர் மனைவியும் செய்யும் இத்தொண்டு நீடிக்க அம்பிகையை பிரார்த்திக்கிறேன்.

"புவனேஸ்வரி"
12 நரசிம்மபுரம்
சென்னை - 4.

சாவித்திரி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள்
ஸ்ரீ மடம், காஞ்சீபுரம்

ஸ்ரீ முகம்

முகாம் காஞ்சீபுரம் தேதி 25-11-1978



அனேக தெய்வீக நூல்களை இயற்றியிருக்கும் ஸ்ரீ நடராஜன் (நஜன்) தான் உள்பட அனேக தேவி பக்தர்களுக்கு குருநாதரும் குஹானந்த மண்டலியின் ஸ்தாபகருமான சுப்ரமணிய அய்யர் என்னும் சிதானந்த நாதரைப் பற்றி எழுதியுள்ள "ஆத்ம குஹா சிதானந்ம மயம்" என்னும் நூலில் குருவின் பெருமை குரு உபதேசத்தின் முக்யத்வம் அம்பிகையின் உபாஸனா விவரங்கள் முதலிய விசேஷங்கள் விளக்கப்பட்டிருக்கின்றன.

ஆஸ்திகர்கள் இந்நூலின் மூலம் குரு பக்தியின் மேன்மையை உணர்ந்து அவரவர்களின் குருநாதர்களுடைய சாஸ்த்ரீயமான உபதேசங்களை அனுஷ்டித்துக்கொண்டு அதன் மூலம் எல்லா மங்களங்கிளையும் அடைவார்களாக.

நாராயண ஸ்மிருதி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதிப்பாசிரியர் நன்றி

ஸ்ரீ வித்யை பற்றிய ஒரு கையேடு என்று சொல்லக்கூடிய "ஆத்ம குஹா சிதானந்த மயம்" என்ற புத்தகம் பிரதிபாவின் 35 வது வெளியீடாகும் இப்போது ஸ்ரீ சிதானந்தரின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் இந்நேரத்தில் இப்புத்தகத்தின் மறுபதிப்பு வெளியிடப்படுகிறது. ஸ்ரீ சிதானந்தரின் சிஷ்யர்களான மந்திரமூர்த்தி ஸ்ரீ என். நரசிம்ம சாஸ்திரிகள் ஸ்ரீ சூர்ய நாராயண தம்பதிகள் ஸ்தானிகம் ஸ்ரீ காமகோடி சாஸ்திரிகள் நடத்தும் குருநாதரின் 100-வது ஆண்டு வழாவில் இப்பதிப்பு வெளியிடப்படுகிறது. இவர்களுக்கு எங்கள் நன்றி.

குருநாதர் ஸ்ரீ சிதானந்தர் நம்மிடம் இல்லையே என்பது தான் மிக வருத்தமாக இருக்கிறது. ஆனால் மகான்களுக்கு மரண மேது? ஸ்ரீ வித்யையை பரப்ப அவர் விரும்பியதெல்லாம் இப்போது நிறைவேறி வருகிறது. அவர் தன் இறுதி நாட்களில் ஸ்ரீ வித்யையை பரப்பவே ஸ்ரீ வித்யா என்று ஒரு பத்திரிகை ஆரம்பித்தார். அவர் ஸித்தி அடைந்ததால் அது நின்று போயிற்று. அப்பணியை பிரதிபா பிரசுரம் மேற்கொண்டுள்ளது.

. திரிசதி பூஜையில் முக்கியம் சுவாஸினி பூஜைதான் என்பதை எடுத்து விளக்கி சுவாஸினி பூஜையைத். துவக்கியவர் குருநாதர் அவர்கள்தான். சகஸ்ரநாம பூஜையில் பிராம்மண போஜனம் முக்கியம் என்று குருநாதர் தெரிவித்ததின் பேரில் சகஸ்ர போஜனம் என் தகப்பனாரின் சஷ்டியப்த பூர்த்தியின் போது நடத்தப்பட்டது. குருநாதரிடம் தீக்ஷை பெற்று மந்திர ஜபத்தையும் பூஜையையும் விடாமல் செய்து வருபவர் ஸ்ரீமதி சாவித்திரி அவர்கள் அவர் வாழ்க்கையில் ஏற்பட்ட சோதனைகள் அவரை அம்பிகையிடம் அதிகமாக ஈடுபடுத்தியதே தவிர தளர்வடையச் செய்யவில்லை. ஆகவே இந்நூலுக்கு அவரையே முகவுரை எழுதச் சொன்னோம்.

எங்கள் குருநாதருக்கு மிக முக்கியமான சிஷ்யர்களில் ஒருவர் ஸ்ரீ ராஜமணி அய்யர் இன்று அவர் உயிருடன் இருந்திருந்தால் இப்புத்தகத்திற்கு அவரே முன்னுரை எழுதியிருப்பார். இவருக்கு இந்நூலை காணிக்கையாக்கியிருக்கிறோம். ஸ்ரீ ராமமூர்த்தி அய்யர் ஸ்ரீ பத்மானந்த நாதர்) விடாமல் திரய திரிசதி சுவாஸினி பூஜையை நடத்தி வருபவர். எங்கள் முதல் புத்தகமான "அன்னை பராசக்தி"க்கு முகவுரை எழுதிய கைராசிக்காரரர் அவருக்கும் எங்கள் நன்றி.

மயிலாப்பூர் **என். லலிதாம்பாள்**
01.01.1979. **(பதிப்பாசிரியர்).**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீமத் சத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள் அருளாசி செய்தி

ஸ்ரீ வித்யா ஞானபாஸ்கரரான "நஜன்" "சிதானந்த மயம்" என்ற நூலை வெளியிடுவது அறிந்து உள்ளம் பூரித்து சந்தோஷமடைந்துள்ளது.

ஸ்ரீ சிதானந்தர் என்கிற தேவி உபாஸகரை நினைக்கும்போது அவதார புருஷரான ஸ்ரீ. ஸ்ரீ. ஸ்ரீ. பாஸ்கரராயர் அவர்களை எவரும் நினைக்காமலிருக்க முடியாது. ஸ்ரீ சிதானந்தநாதர் அவர்களால் எழுதப்பட்ட தேவியின் தத்துவ நூல்களால்தான் இன்றுள்ள தேவி உபாசகர்கள் சாக்த மகத்தை நன்கு புரிந்து கொண்டு பின்பற்றி வருகிறார்கள் என்று சொன்னால் மிகை யாகாது.

அத்வைத கொள்கைகள் சாக்த மதத்தில் பொங்கித் ததும்புகின்றது என்பதை புரிந்து கொண்டு தேவியை உபாஸிப்பவர்கள் மிகவும் குறைந்து விட்டார்கள்.

அத்வைத நிலையை அடைவதற்காகவே சாக்தமதம் ப்ரகாசித்து கொண்டிருப்பதை உண்மையான சாக்தோபாஸர்கள் நன்கறிவார்கள்.

அத்வைதக் கொள்கையில் கூறப்படுவது போலவே திரும்பவும் மரணத்தை அடையாமல் பிரும்மத்தினிடம் லயமடையவ தொன்றே சாக்த மதத்தின் பலனாகும். புருஷார்த்தமெனப் போற்றப்படும் மோக்ஷம் என்பதுதான் சாக்தமத ஸாரமென்பதை கவனத்தில் ஒவ்வொரு உபாஸகர்களும் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஸ்ரீ வித்யா ஞானபாஸ்கரராகிய "நஜன்" எழுதியுள்ள "சிதானந்த மயம்" என்ற இந்த நூல் நஜனுடைய ஸத்குருநாதரவர்களான ஸ்ரீ சிதானந்த நாதர் அவர்களைப் பற்றியும் அன்னார் தமிழகத்தில் பரப்பி உள்ள ஸ்ரீ வித்யைப் பற்றியுமானதாகும்.

குருவின் அத்யாவசியம், பரம்பரா ஞானம் தீக்ஷை என்றால் என்ன, உபாஸகனின் லக்ஷணம், எப்படி உபாசிப்பது. ஸ்ரீ வித்யை என்பதின் தத்துவம், உபாசனையில் பல படிகள் சுருங்கக்கூறின் ஸ்ரீ வித்யையைப் பற்றிய சந்தேகம் கேட்பவர்களுக்கெல்லாம் பதிலளிக்கும் வகையில் நஜன் அவர்கள் இந்த நூலை தமிழக மக்களுக்கு அமைத்துத் தத்துவத்தை நினைத்துப் பார்க்கும்போது நல்லறிவு மிக்க தேவி உபாஸகர்களுக் கெல்லாம் சிந்தைக்கு நல்ல விருந்தாக அமைந்துள்ள தென்றுதான் சொல்லவேண்டும். ஸ்ரீமான் "நஜன்" அவர்களுடைய சத்குருவாகிய சிதானந்த நாதர் அவர்களைப்பற்றி குரு சரித்திரமான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த நூல் வரலாற்றிலேயே பொன்னேட்டில் பொறிக்க வேண்டியவையாகும்.

மாபெரும் புண்ணியபலத்தினால் தான் ஒரு மாணாக்கனுக்கு நல்ல சத்குருவானவர் கிட்டுவர். நஜனுக்கு அப்பாக்கியம் கிடைத்துள்ளது. சிஷ்யர்கள் செய்த மாபெரும் புண்ய வசத்தினால்தான் ஸ்ரீ சிதானந்த நாதர் சிறந்த ஆசார்யனாக காணப்பட்டார் என்று தான் சொல்ல வேண்டும்.

சிஷ்யர்களின் புண்யங்களின் திரட்டாக உருவம்கொண்டு எளிதாயும், இனியதாயும், பொருள் பொதிந்த பேச்சுக்களையும் உடைய ஸ்ரீ சிதானந்த நாதரின் பல நூற்றுக்கணக்கான சிஷ்யர்களில் குருபக்தியிலும் மற்றும் யாவற்றிலும் திறமை பெற்ற ஸ்ரீமான் நடராஜன் என்கிற நஜன் எழுதும் நூல்கள் யாரைத்தான் மகிழ்விக்காது? ஸ்ரீவித்யோபாஸனையினால் உண்மையை உணர்ந்தவரும் யாதொருவரையும் வெருக்காதவரும் யாவருக்கும் ஹிதத்தை உபதேசித்துக்கொண்டு "அஜாதசத்ரு"வாகவும் அடக்கத்தை உடையவருமான ஸ்ரீ சிதானந்த நாதரின் சரித்திரத்தையும் அன்னார் சிஷ்யர்களுக்காகச் செய்துள்ள தொண்டினையும் பற்றியும் விரிவாகத் தெரியப்படுத்தியுள்ள ஸ்ரீ சிதானந்த நாதரின் சிஷ்யர் நஜன் புகழ் மேன் மேலும் எல்லாத் திக்குகளிலும் பரவி தமிழகத்தை அலங்கரிக்கட்டுமென மேலும் அனுக்ரஹிக்கிறோம்.

ஸ்ரீ சிதானந்த நாதர் அவர்கள் ஸ்ரீ வித்யையை தமது பேச்சும் மூச்சுமாகக் கொண்ட உத்தமர். இப்பெரியாரைப்பற்றி ஒவ்வொரு தேவி உபாஸகர்களும் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமாகும்.

நல்ல புண்ணிய சீலரின் பாரம்பரியத்தில் வந்துள்ள நஜன் என்கிற புண்ணிய சீலரின் கைங்கர்யத்தில் நமது தமிழகத்தில் ஸ்ரீ மாதா புவனேசுவரி தேவியின் ஸ்மரண பூர்வகமாக விசேஷ ஆசிகளுடன் நஜன் அவர்களை இடைவிடாமல் அனுக்ரகிக்கிறோம்.

நஜன் தந்துள்ள இந்தப் புத்தகம் ஸ்ரீ வித்யைப் பற்றிய கையேடு என்றுதான் சொல்லவேண்டும். கிடைக்கக்கூடாத அருமையும் பெருமையும் நிறைந்த விஷயங்களைக் கொடுத்துக் கொண்டேயிருக்கும் நஜன் அவர்களுக்கு தமிழகம் என்றென்றும் கடமைப் பட்டுள்ளது.

12-11-78

சேலம்

ஸ்வாமி சாந்தானந்தா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆசிரியர் முகவுரை

ஊர்த்வாம்னாய குரோ: த்ரிபுவனம் ஓங்காராக்ய ஸிம்ஹாஸனம்
ஸித்தாகார ஸமஸ்த வேத படிதம் ஷட்சக்ர ஸஞ்சாரணம்
அத்ளை ஸ்புரதக்னி மேக மமலம் பூர்ணப்ரபா ஸோபிதம் சாந்தம்
ஸ்ரீ குரு பாதுகாம் பஜ மனஸ் சைதன்ய சந்த்ரோதயம் ll

குகை என்பது நமது இருதயம் அதில்தான் இறைவன் ஒரு சிறு ஜோதியாக விளங்குகிறார் என்று உபநிஷத்துக்கள் கூறுகின்றன. இந்த இருதயாகாசம் தான் தகராகாசம் என்று சொல்லப்படுகிறது. அம்பிகைக்கு "தகராகாச ரூபிணி" என்ற ஒரு பெயரும் உண்டு. இந்த இருதய குகையிலுள்ள ஆத்மாவை அறிந்து அதுவே சித் சக்தி என்பதை உணர்ந்தால் சிதானந்தம் ஏற்படும். சித், குஹா, ஆத்மா என்ற இம்மூன்று பெயர்களுமே எங்கள் குரு, பரம குரு, பரமேஷ்டி குருவுக்கு அமைந்தது ஒரு பொருத்தமில்லையா?

அக்குருநாதர்களைப் பற்றியும், அவர்கள் உபாசித்த ஸ்ரீவித்யை பற்றியும் எழுதப்படும் இப்புத்தகத்திற்கு "ஆத்ம குஹா சிதானந்தமயம்" என்ற பெயர் அமைந்தது பொருத்தமே. அம்பிகையை வழிபடுவது மிகவும் அதிகரித்து வருவது நல்ல சூசகமே. இக்கலியில் அம்பிகை ஒருத்தி தான் கருணை காட்டி நமக்கு அருளும் தயாநிதி.

நாம் செய்துள்ள பாபங்களுக்கு நாம் இன்றுள்ள நிலையில் இருப்பதற்கே எவ்வித யோக்யதையும் கிடையாது. அம்பிகையின் கருணா விலாசத்தால் நாம் இந்த மட்டுமாவது வாழ முடிகிறது. பிரதிபா புத்தகங்களைப் படிக்கும் அன்பர்கள் தங்களுக்கு தீக்ஷை செய்விக்க வேண்டும். ஷோடசி மந்திரம் உபதேசிக்க வேண்டும். எங்கள் கஷ்டங்கள் தீர ஏதாவது வழி சொல்லுங்கள் என்றெல்லாம் எழுதுகிறார்கள். இவர்களுக்கெல்லாம் ஒன்று சொல்கிறேன் தேவியினிடம் இதைக் கொடு, அதைக் கொடு என்று பிரார்த்திப்பதை விட எப்பேர்ப்பட்ட கஷ்டமானாலும் அதைத் தாங்கும் சக்தியைக் கொடு என்று பிரார்த்தித்தால் நிச்சயம் கஷ்டம் குறையும்.

இத்தகையவர்கள் அம்பிகையினிடம் அசைக்க முடியாத நம்பிக் கையை வைக்கவேண்டும். கஷ்டங்களையும் அவள் ஏதோ காரண மாகவே ஏற்படுத்தியிருக்கிறாள் என்ற நம்பிக்கை வேண்டும்.

இவர்களுக்கு ஸ்ரீ வித்யை பற்றி ஓரளவுக்காவது' தெரியவேண்டும் என்பதே இப்புத்தகம் வெளியிட்டதின் நோக்கம் எல்லோருமே ஸ்ரீ வித்யை உபாசகர்களாகி ஒரே குடும்பபமாக விளங்க வேண்டும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்பதே எங்கள் நோக்கம். இதற்காகவே ஏற்படும் நஷ்டத்தையும் பொருட்படுத்தாமல் கஷ்டங்களையும் லட்சியம் செய்யாமல் இப்பணியை மேற்கொண்டு இருக்கிறோம்.

ஸ்ரீ வித்யை சில மந்திரங்கள், சில ஜப முறைகள் மிகவும் ரகசிய மானது. இதைப்பற்றி எல்லாம் எழுதாலாமா என்று சிலர் புருவத்தை உயர்த்துகிறார்கள். இவைகள் எல்லாம் பரம ரகசியம் என்பது உண்மையே. இதற்கு குப்த (ரகசிய) சாஸ்திரம் என்றே பெயர். முன்பெல்லாம் குரு சிஷ்யன் தொடர்பாகவே காதால் கேட்டு சகல வித்யைகளும் கற்பிக்கப்பட்டு வந்தன. ஆகவே ஒருவர் மற்றொருவருக்கு ரகசியமாக உபதேசிக்கலாம்.

உபதேசம் பெற்றவரும் ரகசியத்தைக் காப்பாற்ற முடியும். ஆனால் காலம் மாறிவிட்டது. ரகசியம் என்பது விஷயமே தெரியாத அளவுக்குப் போய்விட்டது. எவ்வளவோ அருமையான நூல்கள் சுவடிகள் செல்லரித்தும் ஆற்றில் எறிந்தால் புண்ணியம் என்று எறியப்பட்டு கவனிக்கப்படாமலும் இழக்கப்பட்டுவிட்டன. இருக்கின்ற செல்வத்தையாவது காப்பாற்ற வேண்டும் என்பதே எங்கள் குருநாதர் கருத்து.

ராமானுஜர் அஷ்டாக்ஷர மந்திரத்தை மிக ரகசியம் என்று அவர் குரு உபதேசித்திருந்தும் கோபுரத்தின் மேல் ஏறி எல்லோரும் அறிய எடுத்து விளங்கினார். அதனால் எல்லோரும் பயன்பட்டதாக சொல்ல முடியாது. அதை அனுபவிக்க பூர்வீக வாசனை உள்ளவர்களே அதனால் பயனடைந்தார்கள். சிலர் கோபுரத்தின் மீதேறி ஏதோ கூப்பாடு போடுகிறார் என்று சொல்லிவிட்டு வேடிக்கை பார்த்தார்கள் விதைகள் நிறைய விதைக்கிறோம் எல்லாமா முளைத்து விடுகிறது?

ஆகவே எல்லோரும் ஸ்ரீ வித்யையை உபாசிக்கலாம். ஸ்ரீ சக்ரத்தில் அம்பிகையை வழிபடலாம் எங்கள் குருநாதர் பாடுபட்டதும் இதற்கே. குருநாதர் அவர்களுடைய அனுக்கிரஹத்தாலும், ஸ்ரீ காமகோடி பெரியவர்கள் ஸ்ரீ சத்குரு சுவாமிகள் ஆகியோர்களின் ஆசீர்வாதத்தாலும் அம்பிகையின் அருட் கடாக்ஷத்தாலும் இப்புத்தகத்தை எழுதி வெளியிட்டிருக்கிறேன். இது எல்லோருக்கும் பயன்பட வேண்டும் என்பதே என் ஆசை.

அம்பிகையின் அருள் எல்லோருக்கும் கிடைக்கட்டும்.

மயிலாப்பூர் **எஸ். நடராஜன்**
01-01-1979. **(நஜன்)**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆத்ம குஹா சிதானந்த மயம்

ஹம்ஸ ஸோஹம்

ஹம்ஸஸ் ஸோஹம் ஹம்ஸஸ் ஸோஹம்
ஹம்ஸஸ் ஸோஹம் ஹம்ஸஸ் ஸோஹம் ll

பரமாத்மாஹம் பரிபூர்ணோஹம்
ஆனத்தோஹம் பிரஹ்மைவாஹம்
சின்மய போதானந்த கனோஹம்
தன்மய நித்யானந்த கனோகம்
தேஹோ நாஹம் ஜிவோ நாஹம்
பிரத்யகபின்ன பிரஹ்மை வாஹம் ll 1

குருசரணம் பஜபவஹரணம்
ஸத்குரு சரணம் பவஹரணம்
நாகம் யோஹே நசவா மந்த்ரே
நைவ ஞானே ஸாதன தக்ஷ:
ப்ராப் தோஹம் த்வாம் சரணம்
பவமே பாலயக்ருபயாக தமபிதேவ ll 2

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

த்வம்மே நாதோ மாதா மித்ரம்
ஸர்வம் த்வம் மே பரமோபந்து:
ஸத்குருநாத ஸ்ரீ குருநாத வர்த்தய
பக்திம் தவ பதபத்யே ॥

பிரஹ்மை வாஹம்

பிரஹ்மைவாஹம் பிரஹ்மைவாஹம்
ஸத்குரு க்ருபையா பிரஹ்மைவாஹம் ॥

கர்மாகர்ம விகர்ம விதூரம்
நிர்மல ஸம்வித கண்டம பாரம்
ஆசாபாச விநாசதூரம் கோச
பஞ்சகாதீத மனந்தம் ॥

காரண காரண மேகமநேகம்
காலகால கவி தோஷவிஹீனம்
அப்ரமேய பதமகிலாதாரம்
நிஷ்பிரபஞ்ச நிஜ நிஷ்க்ரிய ரூபம் ।
ஸ்வப்பிகாச சவ மத்வய மபயம்
நிஷ் ப்ரதர்க்ய மநபாயமகாயம் ॥

தினமும் அனுசரிக்க வேண்டியவை

ஒவ்வொருவரும் தினம் தூக்கத்திலிருந்து எழுந்தவுடன் படுக்கையிலேயே உட்கார்ந்துகொண்டு உள்ளங்கைகள் இரண்டையும் கையோடு கை தேய்த்து பிறகு விரிந்து கண்களுக்கு முன்னே வைத்துப் பார்க்க வேண்டும். அப்போது கிழ்க்கண்டவாறு மனதில் தியானம் செய்து கொள்ளவேண்டும்.

இரண்டு உள்ளங்கை நுனிகளிலும் லக்ஷ்மியும், மத்ய பாகத்தில் சரஸ்வதியும், கைகளின் அடிப்பாகத்தில் பார்வதியும் இருப்பதாக பாவனை செய்து கொள்ள வேண்டும். பிறகு கிழ்க்கண்ட சுலோகத்தை கைகளைக் கூப்பிக் கொண்டு சொல்ல வேண்டும்.

ஸமுத்ர வஸநே தேவி பர்வத ஸ்தன மண்டலே
விஷ்ணுபத்நி நமஸ்துப்யம் பாத ஸ்பர்சம் க்ஷமஸ்வமே ॥

சமுத்திரத்தை ஆடையாக உடையவளும். பர்வதங்களை ஸ்தலங்களாக கொண்டவளும், விஷ்ணுவின் பத்தினியுமான பூமாதேவியே நான் பூமியின் மேல் கால் வைப்பது முதல் செய்யும் அபசாரங்களை எல்லாம் பொறுத்து மன்னித்து விடு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காலையில் எழுந்ததும் சொல்ல வேண்டிய சுலோகங்கள்

பிரஹ்மா முராரி, திரிபுராந்தகச்ச
பானு: சசி பூமி ஸுதோ புதச்ச
குருச்ச சுக்ர: சனி ராகு கேதவ:
குர் வந்து ஸர்வே மம சுப்ரபாதம் ॥

பிரும்மா, விஷ்ணு, சிவன், சூரியன், சந்திரன், அங்காரகன், புதன், குரு, சுக்கிரன், சனீஸ்வரன், ராகு, கேது இவர்கள் எல்லோருக்கும் எனக்கு இன்று நல்ல நாளாகச் செய்யட்டும். 1

ப்ருகுர் வசிஷ்ட: க்ரது அங்கிராச்ச
மனு: புலஸ்த்ய புலஹச்ச கௌதம:
தால்ப்யோ மரீசி: ச்யவன: அத தக்ஷ:
குர்வந்து ஸர்வே மம சுப்ரபாதம் ॥

ப்ருகு, வசிஷ்டர், அங்கிரஸர், மனு, புலஸ்தியர், புலஹர், கௌதமர், தாலப்யர், மரீசி, ச்யவநர், இம்மகரிஷிகள் இன்று நல்ல நாளாக இருக்கும்படி ஆசிர்வதிக்கட்டும். 2

ஸநத்குமாரஸ்ச ஸனந்தனஸ்ச
ஸனாதனோ அப்யாஸுரி ஸிம்ஹகௌச
ஸப்த ஸ்வரா: ஸப்த ரஸாதலானி
குர்வந்து ஸர்வே மம சுப்ரபாதம் ॥

நைத்குமாரர், ஸநந்தனர், ஸநாதனர், ஆஸுரி, ஸிம்ஹகர், ஏழு ஸ்வரங்கள், ஏழு பாதாளாதி லோகங்கள் அனைத்தும் எனக்கு நல்ல நாளாகும்படி செய்யட்டும். 3

ஸப்தார்ணவா ஸப்த குலாசலாச்ச
சைப்தரிஷயஸ்ச உபவனானி சப்த:
பூராதிலோகா புவனானி ஸப்த:
குர்வந்து ஸர்வே மம சுப்ரபாதம் ॥

ஏழு சமுத்திரங்கள், ஏழு குலபர்வதங்கள், ஏழுரிஷிகள், ஏழு உபவனங்கள் இவைகள் நல்ல தினமாகும்படிச் செய்யட்டும். 4

பிருத்வீஸகந்தா ஸரஸாஸ் ததாப:
ஸ்பர்சச்ச வாயு: ஜ்வலிதம் ச தேஜ:
நம: ஸசப்தம் மஹதா ஸஹைவ
குர்வந்து ஸர்வே மம சுப்ரபாதம் ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மணமுள்ள பூமி, ரசமுள்ள ஜலம், மந்தமான வாயு, ஜ்வலிக்கின்ற தேஜஸ் சப்தத்துடன் கூடிய ஆகாசம் இவைகள் எல்லாம் எனக்கு நன்னாளாகும்படிச் செய்யட்டும். 5

மகாபாரத மாக்யானம் க்ஷீதிம்
காம்ச சரஸ்வதீம்
பிராஹ்மணான் கேசவம் சைவ
ப்ராத்ருந்தாய கிர்த்தயேத்

மகா பாரதம், பூமி, பசு சரஸ்வதி, பிராம்மணர் கேசவன் இவர்களை காலையில் எழுந்ததும் நினைக்கவேண்டும். 6

பிரஹ்மாணம் சங்கரம் விஷ்ணும்
யமம், ராமம் தனும் பலிம்
ஸப்தைதான் ஸம்ஸ்மரேன்
நித்யம் துஸ்ஸ்வப்னம் தஸ்யநச்யதி ll

பிரும்மா, விஷ்ணு, சிவன், யமன், ராமன், தநு, பலி இந்த ஏழுபேரையும் நித்யம் ஸ்மரிக்க வேண்டும். துஸ்வப்னம் அகலும் 7

புண்ய ச்லோகா நளோ ராஜா
புண்ய ச்லோகா யுதிஷ்டிர:
புண்ய ச்லோகா ச வைதேஹீ
புண்ய ச்லோகா ஜனார்த்தன: ll

புண்ய சுலோகனான நளன், தர்ம ராஜன், விஷ்ணு சீதை இவர்களை நினைக்கவேண்டும். 8

கார் கோடகஸ்ய நாகஸ்ய
தமயந்த்யா நளஸ்ய ச
ருது பர்ணஸ்ய ராஜர்ஷே:
கிர்த்தனம் கலிநாசனம் ll

கார்கோடகம் என்ற நாகம், தமயந்தி, நளன், ரிதுபர்ணன் என்ற ராஜரிஷி இவர்கள் பெயரைக் கூறினால் கலி அழியும். 9

அகஸ்யா திரௌபதீ ஸீதா
தாரா மண்டோதரீ ததா
பஞ்ச கன்யா ஸ்மரேன் நித்யம்
மகாபாதக நாசனம் ll

அகல்யை, த்ரௌபதி, சிதை, தாரை, மண்டோதரி இவர்களை நித்யம் ஸ்மரிக்கவேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



குருநாதரின் ஜன்ம தினத்தன்று நடைபெற்ற குரு பூஜை அங்கமாக சண்டி ஹோமம் ஸ்ரீ லலிதா சகஸ்ரநாம ஹோமம் "நஜன்" கிருஹத்தில் 1956-ல் நடைபெற்ற போது எடுத்த படம். குருநாதர் அருகில் நஜன் காணப்படுகிறார்.

ஸ்ரீ வித்யையை பரப்புவதில் குருநாதருக்கு உதவிய ஸ்ரீமதி மங்களம் அம்மாள், ஸ்ரீ ராமசுப்ரமணிய அய்யர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஓம்

ஆத்ம ஸமர்ப்பணம்

ஸ்வரூப நிரூபண ஹேதவே
ஸ்ரீ சிதானந்த குருவே நம:

குருவந்தனம்

ஓம் நமோ பிரஹ்மாதிப்யோ பிரஹ்ம
வித்யா ஸம்ப்ரதாய கர்த்ருப்யோ
வம்ச ரிஷிப்யோ மஹத்ப்யோ நமோ குருப்ய:

ஓம் பிரும்மா முதலாக பிரம்ம வித்யா சம்பிரதாயத்தை அருளிச் செய்தோருக்கும் வம்ச ரிஷிகளுக்கும் நமஸ்காரம்.

"தத்வமஸி"

அகண்ட மண்டலாகாரம் வ்யாப்தம் ஏன சராசரம்
தத் பதம் தர்சிதம் ஏன தஸ்மை ஸ்ரீ குரவே நம: ll

சராசரம் இதம் ஸர்வம் ஜகத் ஸ்தாவர ஜங்கமம்
த்வம்பதம் தர்சிதம் ஏன தஸ்மை ஸ்ரீ குரவே நம: ll

சச் சின்மயம் சதாபூர்ணம் சச்சிதானந்த மத்வயம்
அஸிபதம் தர்சிதம் ஏன தஸ்மை ஸ்ரீ குரவே நம: ll

பிரார்த்தனை

தனுர் க்ருஹீத் வெளபநிஷதம் மஹாஸ்த்ரம்
சரம் ஹ்யுபாஸா நிசிதம் ஸந்தயீத
ஆயம்ய தத்பாவ கதேன சேதஸா
லக்ஷ்யம் ததேவாக்ஷரம் ஸோம்ய வித்தி - முண்டோபநிஷத்

சித்தம் அழகியவனே உபநிஷத்திலுள்ள மஹா அஸ்திரமாகிய (ஓம்கார) வில்லை எடுத்து உபாஸனையால் கூர்மை பெற்ற (ஜீவனாகிய) அம்பைத் தொடுத்து (தியானத்தால்) தன்மயமான சித்தத்தால் அதை இழுத்து அந்த அக்ஷரப் பிரும்மமாகிய லக்ஷ்யத்தில் லயமடையச் செலுத்துவாய்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிதானந்த மயம் 1

குரு மண்டலம்

சிதானந்த மயம்; சச்சிதானந்த மயம்;
குகானந்த மயம்; குரு சரணாரவிந்த மயம்;
ஆத்மானந்த மயம்; பரமாத்மானந்த மயம்;
பிரகாசானந்த மயம்; பிரதிபானந்த மயம்;
விமலானந்த மயம்; ஸ்ரீ வித்யானந்த மயம்;
ஞானானந்த மயம்; பிரேமானந்த மயம்;

உலகிலுள்ள எல்லா ஜீவர்களும் ஆனந்தத்தை விரும்புகிறார்கள். அதுவும் துக்க கலப்பற்ற ஆனந்தத்தைத்தான் இந்த ஆனந்தம் தமக்கு எட்'படிக்கிட்டும் என்பதை அறியாமல் தவிக்கிறார்கள்.

நாம் இருக்கும் இவ்வுலகம் நன்மை - தீமை, பாவம் - புண்ணியம், சுகம் - துக்கம் இவைகளால் நிரம்பியவை நாமும் புண்ணியம் பாபம் கலந்த கர்மாக்களை அனுபவிப்பதற்காகவே ஜன்மம் எடுத்திருக்கிறோம். ஆகையால் சுகம், துக்கங்கள் இரண்டையும் கலந்து அனுபவிக்கிறோம். இந்த சுக துக்கங்கள் இவ்வுலகப் பொருள்களிலிருந்தே கிடைப்பதாக நினைக்கிறோம். உண்மையில் நாம் எப்பொருள் மீது ஆசை கொள்கிறோமோ அப்பொருளால்தான் நமக்கு சுக துக்கங்கள் ஏற்படுகின்றன. நாம் பொருளின்மேல் வைக்கும் ஆசைக்குத் தக்கபடி சுக துக்கங்களில் அளவும் இருக்கும்.

நாம் விரும்பாத பொருள் கிடைத்தாலும் அழிந்தாலும் சுகமோ துக்கமோ ஏற்படுவதில்லை. நமக்கு முதலில் ஒரு பொருளின் மேல் விருப்பம் உண்டாகிறது. பின் அப்பொருளை எப்படியடைவது என்று கவலை உண்டாகிறது. அப்பொருளுக்கு மற்றொருவன் போட்டியாக வந்தால் அவன் மீதுகோபம் வருகிறது கடைசியில் விரும்பிய பொருள் கிடைத்தபோது மனம் திருப்தியடைகிறது. அந்த மனத்திருப்திதான் ஆனந்தத்திற்குக் காரணம்.

அடைந்த பொருளை பத்திரமாகக் காப்பாற்ற வேண்டுமே! அதைக் காப்பாற்றும் கவலை வந்து விடுகிறது. ஆகவே அடைந்த ஆனந்தம் நிலையானதல்ல.

நாம் விரும்பியடைந்த பொருளிலிருந்து தானே சுகத்தை அடைகிறோம். விரும்பாத பொருளிலிருந்து சுகத்தை அடையவில்லையே என்று கேட்கலாம். ஆமாம். நாம் ஒரு பொருளை எதற்காக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விரும்புகிறோம்? உலக போகங்களில் ஒன்றை விரும்புவது அப்பொருளுக்காவே இல்லை. அதைக் கொண்டு அதைக் காட்டிலும் தனக்குப் பிரியமான வேறொன்றைப் பெறவே விரும்புகிறோம். இப்படிப் படிப்படியாகப் போனால் ஆத்மாவே எல்லாவற்றையும் விட பிரியமானது என முடிவாகிறது.

உதாரணத்திற்கு பணம் கஷ்டப்பட்டு சம்பாதிக்கிறோம். அதனைக் கொண்டு மனைவி மக்களைக் காப்பாற்ற முடிகிறது. மனைவி மக்களுக்கு உடம்புக்கு வந்தால் பணத்தை அளவுக்கு மீறியாவது செலவழித்து பிழைத்தால் போதும் என்று வைத்தியம் செய்கிறோம். ஆகவே பணத்தை விட மனைவி மக்கள் பிரியமானவர்கள். தனக்கு ஏதாவது நோய் நொடி வந்தால் மனைவி மக்களை விட்டு விட்டு தான் மட்டும் விசேஷ சிகிச்சை செய்து கொள்கிறான் ஒரு பெரும் ஆபத்து என்று வரும்போது தான் முதலில் தப்பிக்க நினைப்பது இயல்பு, தன் வயதான காலத்தில் தன்னை சம்ரக்ஷிக்க வேண்டும் என்று மக்களிடம் எதிர்பார்க்கிறான். ஆகவே மனைவி மக்களைவிட உடம்பு பிரியமானது.

விபத்தில் கை ஒடிந்து விடுகிறது. இந்த கையை எடுத்துவிட வேண்டும் என்கிறார் டாக்டர். கை போனால் போகிறது என்று அதை நீக்க சம்மதிக்கிறோம் இப்படி ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள் இவைகளை இழக்க சித்தமாக இருக்கிறோம்.

மனம் நிம்மதியாக கவலைகளை மறப்பதற்காக இந்த சப்த ஸ்பர்ச ரூபரஸ கந்தங்களின் உணர்ச்சிகளை இழக்க தயாராக இருக்கிறோம். ஆகவே தர்மேந்திரிய, ஞானேந்திரியங்களைக் காட்டிலும் மனதில் அதிகப் பிரியம் என்று ஏற்படுகிறது. ஆனால் ஆத்மாவை அறிய வேண்டுமானால் மனதை அடியோடு நாசம் செய்யவேண்டும்.

மனம் இருக்கும் வரை எண்ணங்கள் தோன்றிக் கொண்டே இருக்கும். மனோலயம் ஏற்பட்டால் எண்ணங்கள் நாசமாகும். ஆகவே மனதைக் காட்டிலும் ஆத்மாவே எல்லா ஜீவன்களுக்கும் பிரியமானது.

இந்த ஆத்மாவின் மேலுள்ள பிரியம் காரணமாகவே வெளிப் பொருள்களில் அன்பு வைத்தோம். நாமாக வைக்கும் அன்பு மாறும் குறையும். ஆனால் இயற்கையாக ஆன்மாவில் உள்ள அன்பானது மாறாது, குறையாது இயற்கையை மாற்ற யாராலும் முடியாது.

ஆகவே ஆனந்தம் என்பது ஆத்மாவினிடத்தில் தான் இருக்கிறது. வெளி வஸ்துக்களில் இல்லை. நெருப்பின் சூடு ஆத்மாவும் ஆனந்தமும் கலந்து இருக்கிறது. ஆகவே ஆன்ம ஸ்வரூபமே ஆனந்தம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாம் நம்மிடமுள்ள ஆனந்தத்தை வெளிப் பொருள்களிலிருந்து வருவதாகக் கருதி அனுபவிக்கிறோம். இதற்கு ஒரு உதாரணம். ஒரு நாய் மிகப் பழமையான எலும்புத் துண்டைக் கடித்து சுவைத்துக் கொண்டிருந்தது. அந்த எலும்பில் கொஞ்சம் கூட சத்தில்லை. நாயோ அந்த எலும்பை விடமாட்டேன் என்கிறது. காரணம் நாய் எலும்பைக் கடிக்கையில் அதன் ஈறிலிருந்து ரத்தம் வருகிறது. தன் வாயிலிருந்து வந்த ரத்தத்தையே நாய் எலும்பிலிருந்து வந்ததாகக் கருதுகிறது. அதனால் அந்த நாய்க்கு அந்த எலும்பைவிட மனம் இல்லை. இதுபோல நாமும் நிஜ வடிவை மறந்து ஆனந்த ஸ்வரூபம் என்பதை உணராது வெளி வஸ்துகளில் இருப்பதாக எண்ணி படாதபாடு படுகிறோம்.

நாம் நம் உண்மை வடிவை அதாவது நம்மை நாம் அறிந்தால் ஆத்மா ஆத்மானந்தத்தில் மூழ்கி ஆனந்தமாக விளங்குவோம். இந்த ஆனந்த மடையாமல் நாம் எப்படி வாழ்கிறோம்?

மனிதன் சுகத்தை அனுபவிக்காமல் இல்லை. அவன் அனுபவிக் கிறான். ஆனால் பன்மடங்கு துக்கங்களையும் கலந்து அனுபவிக்கிறான். நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளால் எவ்வளவோ வசதிகள் செய்துக் கொண்டிருக்கிறோம். அனுசக்தியால் எவ்வளவோ ஆக்க வேலைகைள் நடைபெறுகிறது. அந்த அணுசக்தியாலே நாட்டையே சில நிமிடங்களில் பஸ்மமாக்கி விடவும் முடிகிறது. மனிதனின் மனப்பான்மை பல துன்பங்கங்களுக்கிடையே கிடைக்கும் அற்ப சுகத்தையே பெரிதும் போற்றி மயங்குகிறான்.

ஒரு காட்டின் வழியாக ஒருவன் போய்க் கொண்டிருந்தான். அக்காட்டில் முள்ளும், கல்லும், பாம்பும், புலியும் இருந்தன. அவைகளைக் கண்டு பயந்து ஓட்டம் பிடித்தான். ஆனால் காட்டின் எல்லையில் ஓர் அரக்கி அவனை விரட்டினாள். மனிதன் கதிகலங்கி அங்குமிங்கும் ஓடும் போது ஒரு ஆழமான கிணற்றில் விழுந்து விட்டான். கிணற்றில் முளைத்திருந்த சில செடிகளை பிடித்துக் கொண்டு தொங்கினான். கீழே கிணற்றுக்குள் ஒரு பாம்பு மேலே ஆறு முகங்களுடன் 12 கால்களுடன ஒரு வித்தியாசமான யானை கிணற்றை நோக்கி வந்து கொண்டிருந்தது. மனிதன் பிடித்துக் கொண்டிருந்த செடிகளின் வேர்களை கருப்பும் வெளுப்புமான ஒரு எலி கடித்து அறுத்துக்கொண்டிருந்தது.

அப்போது அவனுக்கு ஒரு பெரியவர் கூறியது நினைவுக்கு வந்தது.

பெருவழியிருக்க கொடிவழி போகாதே
போனாலும், பாழ்கிணத்தில் விழாதே
விழுந்தாலும் பிடித்த கொம்பை விடாதே!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இச்சமயத்தில் அவன் அண்ணாந்து பார்த்தான். மேலே இருந்த தேன் கூட்டிலிருந்து ஒரு சொட்டுத்தேன் அவன் வாயில் விழுந்தது.

அந்நிலையிலும் ஆகா? என்ன ஆனந்தம் இன்னும் ஒரு சொட் தேன் வாயில் விழாதா? என்று வாயைத் திறந்துக் கொண்டே இருந்தான். இந்த மனித சுகமும் இம்மாதிரியானதே.

இந்த உதாரணத்தின் தத்வ விளக்கம்

காடு	-	உலகம்
இவன் செல்லும் வழி	-	ஆயுட்காலம்
முள், கல், துஷ்ட மிருகங்கள்	-	துன்புறுத்தும் வியாதிகள்
அரக்கி	-	மூப்பும் தளர்வும்
கிணறு	-	மனித உடல்
சர்ப்பம்	-	மரணம்
மேலே வந்த யானை	-	12 மாதம் ஆறு ருதுக்கள் கொண்ட வருஷம்
செடி	-	மனிதனுக்குள்ள தேகாபிமானம்
செடியைக் கடிக்கும் எலி	-	இரவும் பகலும் சேர்ந்த ஒரு நாள்
தேனீக்கள்	-	மனிதனுக்கு ஏற்படும் பல தொல்லைகள்
வாயில் விழுந்த தேன் சொட்டு	-	அனுபவிக்கும் அறப் சுகங்கள்

இந்த அற்ப சுகத்தையே பெரிதாக எண்ணி மனிதன் மயங்குகிறான்

இவற்றில் மயங்காமல் பேரின்பத்தை பெற முயற்சிக்க வேண்டும். அதை விரைவிலேயே செய்ய வேண்டும் எனப்தை நம் சாஸ்திரங்கள் வற்புறுத்துகின்றன.

அறிவுடன் (ஞானத்துடன்) பார்த்தால் எல்லாவற்றையும் ஆனந்தமாகவே பார்ப்போம். ஆனந்தம் முடிவில்லதது. அது இல்லாத இடமில்லை. ஞானமும் முடிவில்லாதது. அதுவும் இல்லா இடமில்லை. எல்லையில்லாத எங்கும் நிறைந்த பொருள் இரண்டு இருக்க முடியாது. ஆகவே ஆனந்தமும் ஞானமும் ஒன்று. உபநிஷத்தில் ஆனந்தம்தான் பிரும்மம் என்று சொல்லியிருக்கிறது. ஆனந்தம், ஞானம், பிரும்மம் எல்லாம் ஒன்றே.

"கைவல்ய நவநீதம்" நூலில் அதன் ஆசிரியர் தாண்டவராய சுவாமிகள் ஆனந்தம் மூன்று வகை என்றும், அவை விஷயானந்தம் வாசனானந்தம், பிரும்மானந்தம் என்றும் கூறுகிறார். பிரும்மானந்தத்தின் வேறு பெயர்கள் முக்யானந்தம் ஆன்மானந்தம் அத்துவிதானந்தம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இம் மூவகை ஆனந்தங்களையே ஸ்ரீ வித்யாரண்யர் தன் "பஞ்சதசி" என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

விஷய ஆனந்தம்:- தர்மம் செய்வதாலும், பொருள்களை ஈட்டி அவைகளை செலவிட்டு அடையும் சுகங்களாலும், சிற்றின்ப சுகங்களாலும் ஏற்படும் ஆனந்தம். பசித்தவனுக்கு உணவிட்டு அவன் திருப்தியடைவதைக் கண்டு ஆனந்திப்பது. மனைவி மக்களுக்கு அணி மணிகளை வாங்கிக் கொடுத்து அவர்கள் அடையும் மகிழ்ச்சியைக் கண்டு ஆனந்திப்பது இவை எல்லாம் தன்னல மற்றவை. ஆனால் விஷயானந்தத்தில் அடங்கியவை.

கண், மூக்கு, காது, நாக்கு, உடல் ஆகிய கர்மேந்திரியங்கள் அனுபவிக்கும் தன்னல ஆனந்தம் இந்த விஷயானந்தத்தைச் சேர்ந்தவையே. "இந்த ஆனந்தத்தை தாராளமாக அனுபவி ஆனால் எல்லாவற்றையும் தர்மத்துக்கு விரோதமில்லாமல் செய்" என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

வாஸனானந்தம்:- இந்த ஜன்மத்தில் ஒருவன் பல சுகங்களை அனுபவிப்பது அவன் பூர்வ ஜன்மத்தில் செய்த புண்ணியம் காரணமாகவே, மூகர் ஊமையாக இருந்தும் வாக்கு வன்மை பெற்று அம்பிகை மீது 500 சுலோகங்களைப் பொழிந்தார் என்றால் அது அவர் பூர்வஜன்மத்தில் செய்த பூஜாபலனுடன் அம்பிகையின் அருளும் சேர்ந்ததால் ஏற்பட்ட பாக்கியமே.

நம் முன்னோர்கள் செய்த தவப்பயன், புண்ணியமும் அவர்கள் சந்ததிகளுக்கு நற்பலனைக் கொடுப்பதும் வாசனானந்தமேயாகும். இந்த வாசனானந்தம் மிக முக்கியமானது. இது இருந்தால் விஷயானந்தமும் கிடைக்கும், ஞானானந்தமும் கிடைக்கும்.

ஞானானந்தம்:- மோக்ஷத்தை அடைவதே இதன் லக்ஷ்யம். மனிதானாகப் பிறந்தவன் இம்மையில் மட்டுமின்றி மறுமையிலும் உய்வடைய இந்த பேரின்பம் அவசியம். இதை அடைய அவன் முயற்சிக்க வேண்டும். விஷயானந்தத்தை விரும்புவதை "பிரேயன்" என்றும், மோக்ஷானந்தத்தை விரும்புவதை "சிரேயன்" என்றும் சொல்வார்கள்.

யமதர்மன் நசிகேதனிடம் இது பற்றிக் கூறுகையில் சிரேயஸ், பிரேயஸ் இவைகளை மனிதன் தீர ஆலோசிக்கவேண்டும். விவேகி பிரேயஸ்ஸை விட்டு சிரேயஸ்ஸையே விரும்புவான். மந்த புத்தியுள்ளவனோ சிரேயஸ்ஸை விட்டு விட்டு சிற்றின்பங்களில் ஆசை கொண்டு பிரேயஸ்ஸையே விரும்புவான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"யச் ச காமசுகம் லோகே யச் சதிவ்யம் மஹத் சுகம் I
திருஷ்ணாக்ஷய ஸுகஸ்யைதே நார்ஹத: ஷோடசிம் கலாம் II

எது இவ்வுலகில் காம சுகமோ, எது தேவலோகத்தில் பெரிய சுகமோ அது எல்லாம் ஆசை நசித்தவனுடைய சுகத்தின் வீசம் பங்குகூட ஆகாது என்கிறது மஹாபாரதம்.

இந்த ஞானானந்தம் பெற வழிகாட்டக் கூடியவர் குருநாதர் ஒருவரே.

குருநாதர்களுக்கு ஆனந்தா பெயர் ஏன்?

மகான்கள் பெயரைப் பார்த்தால் ஆனந்தா என்ற பெயர் அதில் இருக்கும். தீக்ஷா நாமம் ஆனந்தா என்ற பெயருடனேயே விளங்கும். அக்ஞானத்தை ஒழித்து ஞானம் பெற்று பிரும்ம நிலையை அடைய அதாவது பேரானந்த நிலையை அடைய வழி செய்வதால் ஆனந்தம் என்பது தீக்ஷா நாமத்துடன் சேர்க்கப்படுகிறது.

விவேகானந்தா - விவேகம் காரணமாக ஆனந்தமடைபவர். சிதானந்தா "சித்" என்கிற சித்தி மூலம் ஆனந்தமடைபவர். இந்த "சித்" என்பது அம்பிகையின் சக்தி. இதனால்தான் தேவியின் ஸ்ரீவித்யையை பரப்புவதில் ஈடுபட்ட குருநாதர் சிதானந்தருக்கு "சித் ஆனந்தர்" என்று அவர் குரு தீக்ஷா நாமம் வைத்திருக்க வேண்டும். "சத்" என்றால் உண்மை சிவம். இதன் மூலம் ஆனந்தமடைபவர் சத்யானந்தர். சத், சித், மூலம் ஆனந்தம் பெறுபவர் சச்சிதானந்தர் குகை என்பது இருதய கமலம், தகராகாசம் என்றும், பிலாகாசம் என்றும் அதற்கு பெயர். இந்த இருதயகுகையில் இறைவனைக் கண்டு ஆராதித்து ஆனந்தம் பெறுபவர் குகானந்தர். ஆத்மாவிலேயே ஆனந்தத்தைக் கண்டவர் ஆத்மானந்தர்.

இந்த மகான்கலெல்லாம் ஆனந்தத்தை எப்படி ஆனுபவித்தனர்? நாம் ஒரு ரோஜாப் பூவைப் பார்த்து ரோஜா என்கிறோம். சப்பாத்திக் கள்ளியை சப்பாத்திச்செடி என்கிறோம்.

ஞானம் என்ற அறிவால் பார்த்தால் அப்பொருள்தான் ஆனந்த மாகவே தெரியும். நமக்கு ஞானம் இல்லாமலிருப்பதால் ஒன்றை ரோஜாவாகவும், மற்றொன்றை இன்னொரு பொருளாகவும் பார்க்கிறோம். உண்மையில் எல்லாம் ஆனந்தம் தான். உண்மை நமக்குப் புலப் படாததற்கு காரணம் நமக்கு அந்த ஞான பக்குவம் ஏற்படாததே.

ஒரு கண்ணாடி முன் நிற்கிறோம். நம் உருவம் அதில் தெரிகிறது. கண்ணாடியில் அழுக்கு இருந்தால் நம் உருவம் தெரியாது அழுக்குடன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கண்ணாடியும் ஆடிக்கொண்டிருந்தால் ஒன்றுமே தெரியாது. அது போல நம் மனக்கண்ணாடி அழுக்கடைந்திருப்பதுடன் ஆடிக்கொண்டும் இருக்கிறது. மனம் ஒரு நிலைபட்டு விட்டால் உண்மைப் பொருள் தெரியும். சில மகான்களின் செய்கை அவர்கள் பைத்தியமோ என்று நிலைக்கும்படி இருக்கும்.

நம் செய்கைகளும் அவர்களுக்கு பைத்தியம் செய்கைகளாகவே படும். மனம் கட்டுப்படும் வரையில் எல்லோரும் ஒருவகைப் பைத்தியங்களே.

சதாசிவ பிரும்மேந்திரர் பெரும் ஞானி அவருடைய குரு காமகோடி பீடத்தை அலங்கரித்த பெரியவர் ஒருவர். சில சிஷ்யர்கள் அவரிடம் சென்று "சதாசிவம் இப்படி பைத்தியம் போல அலைகிறானே" என்று தெரிவித்தார்கள். அக்குரு, ''எனக்கு அம்மாதிரி பைத்தியம் பிடிக்கவில்லையே'' என்றாராம்.

ஞானிகள் அனுபவிக்கும் இத்தகைய ஆனந்தத்தை வேதம் பின் வருமாறு வருணிக்கிறது.

> ஸைஷா நந்தஸ்ய மீமாம்ஸா பவதி
> யுவா ஸ்யாத் ஸாது யுவா த்யாயக:
> ஆசிஷ்டோ த்ருடிஷ்டோ பலிஷ்ட:
> தஸ்மைவம் ப்ருத்வீ ஸர்வா வித்தஸ்ய பூர்ணாஸ்யாத்
> ஸ ஏகோ மானுஷ ஆனந்த: ll

இந்த பிரும்மானந்தத்தை அளக்க ஒரு கணக்கு வேண்டும்.

வாலிபனாகவும், சத்வ குணமுள்ளவனாகவும், கற்றவனாகவும், நல்லொழுக்க முள்ளவனாகவும் உள்ள ஒருவனுக்கு உலகிலுள்ள சகல பொருள்களும் அனுகூலங்களும் கிட்டினால் அந்த மனிதனின் ஆனந்தத்தை ஒன்று என்று வைத்துக்கொள்வோம் என்கிறது வேதம்.

> தேயே சதம் மானுஷா ஆனந்தா:
> ஸ ஏ கோ மனுஷ்ய கந்தர்வானா மானந்த: ll

அப்பேர்ப்பட்ட மனித ஆனந்தத்தை 100 மடங்கு அதிகரித்தால் அது மனித கந்தர்வர் ஆனந்தம் ஒன்றுக்கு ஈடாகிறது.

> ச்ரோத்ரியஸ்ய சா காமஹ தஸ்ய
> தேயே ஸதம் மனுஷ்ய கந்தர்வானா மானந்தா l
> ஸ ஏ கோ தேவ கந்தர்வானாமானந்த: ll

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன் விளக்கப்பட்ட ஆனந்தத்திலும் 100 பங்கு அதிகமான இந்த மனுஷ்ய கந்தர்வ ஆனந்தத்தை கேட்கக்கூட இச்சையில்லாதவன் எத்தசைய உயர்ந்ததை அனுபவித்துக்கொண்டிருக்க வேண்டுமோ அதை 100 மடங்கு அதிகரித்தால் அது தேவ கந்தர்வ ஆனந்தத்திற்கு ஈடாகும்.

கேட்கக்கூட இச்சைப்படாதவன் என்றால் என்பதைக் கவனிக்க வேண்டும்.

இம்மாதிரிப் படிப்படியாக நூறு நூறு மடங்கு அதிகரித்ததான பித்ருக்களானந்தம் அஜான ஜானானந்தம் கர்மதேவானானந்தம், தேவானானந்தம், இந்திரானானந்தம், பிருகஸ்பதியானந்தம், பிரும்ம தேவானானந்தம், முடிவில் ஹிரண்ய கர்பனானந்தம் என்று கடைசி அளவைக் கூறுகிறது.

இந்த ஆனந்தத்தையும் மிஞ்சியது பரஆனந்தம்.

இந்த பர ஆனந்தம் சுகம் கிடைக்கவே பட்டினத்தடிகள் கோவணதாரியாகி எல்லாவற்றையும் துறந்தார். இந்த ஆனந்தத்திற்காகவே புத்தர் தன் மனைவி மக்களைத் துறந்து தவ வாழ்க்கையை மேற்கொண்டார்.

இந்த ஆனந்தத்தில் திளைத்திருந்ததால் தான் கோரகும்பருக்கு தன் குழந்தையையே மிதித்து விடுகிறோமே என்ற உணர்வு ஏற்படவில்லை.

இந்த சுகத்தைப் பெறவே அடக்கம், ஒழுக்கம், ஜபம், நியமம், சுத்தம், அஷ்டாங்க யோகம் முதலியன உள்ளன.

வழிகாட்டி குருவே

இதற்கு வழிகாட்டி ஒருவர் வேண்டுமல்லவா? அவர்தான் குரு என்ற ஆசார்யன். குருவின் பாதகமலத்தில் குறையாத பக்தி வைத்தால் பிறவிச் சிறையிலிருந்து எளிதில் மீளலாம் என்று ஆதிசங்கரர் தன் "பஜகோவிந்தம்" நூலில் குறிப்பிடுகிறார்.

குரு சரணாம்புஜ நிர்பர பக்த:
ஸம்ஸாரத் அசிவாத் பல முக்த:
ஸேந்திரிய மானஸ நியமாத் ஏவம்
திரக்ஷ்யஸி நிஜஹ்ரி தயஸ்தம் தேவம்

குருவை நம்பு, முற்றிலும் நம்பு, வாழ்க்கை துயரத்திலிருந்து விடுதலையடைவாய் என்கிறார் ஆதிசங்கரர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''பழங்குடில் தொறுமெழுந் தருளியே பரனே'' என்கிறார் மாணிக்கவாசகர். பழங்குடில் என்றால் நம் சீர் கெட்ட இதயம். அதில் குடியிருக்கிறான் இறைவன். அவனையே இறைவனாக கொள்ளலாமே என்கிறார்.

ராமகிருஷ்ண பரமஹம்ஸர் இது விஷயமாக ஒரு கதை கூறியிருக்கிறார். குடிசையில் லாந்தர் விளக்கு வைத்துக்கொண்டிருந்த கிழவன் ஒருவனுக்கு நடு இரவில் சுருட்டு பிடிக்க வேண்டும்போல் இருந்தது. அவன் அடுத்த குடிசையில் தூங்கிக் கொண்டிருந்த ஒருவனை எழுப்பி தீப்பெட்டி கேட்டான். "என்ன ஆளய்யா நீ, லாந்தர் விளக்கை வைத்துக்கொண்டு என்னிடம் தீப்பெட்டி கேட்கிறாயே அதிலேயே பற்றவை'' என்றான் தூக்கத்திலிருந்து எழுப்பப்பட்டவன்.

அடடே மறந்துட்டேனே என்றான் கிழவன்.

உள்ளத்தில் உள்ள விளக்கையே ஆதிசங்கரர் இந்த சுவோகத்தில் குறிப்பிடுகிறார். உள்ளத்திலுள்ள குருவை அறிய பக்குவம் வேண்டும். அதற்கு வழி காட்ட வெளியில் ஒரு குரு அவசியம் தேவை.

ஸ்ரீ வித்யா மஹா யாகக்ரமம் தேவி நவாவரண பூஜை

என்ற இப்புத்தகம் அம்பிகையின் அருள் பெற்றவரும் ஸ்ரீ வித்யையின் பலரை ஈடுபடுத்தி நல்வழிக்கு கொணர்ந்தவரும் ஸ்ரீ சிதானந்த நாதர் அவர்களின் ஆன்மீகப் பணிக்கு வலது கை போல பக்க பலமாக இருந்தவருமான மாதுஸ்ரீ ''மங்களாம்பாள்'' (சாந்தம்மா) அவர்களின் ஏட்டுப் பிரதிகளிலிருந்து பிரதி எடுக்கப்பட்டு புத்தக வடிவில் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஸ்ரீ வித்யா மங்கள மண்டலி

ஸ்ரீ வித்யைப் பரப்புவதில் அரும்பாடுபட்ட ஸ்ரீமதி "மங்களம்மாள்'' நினைவாக இம்மண்டலி 1983 சித்திரை மூலம் அன்று துவங்கப்பட்டது.

பிரதி ஆங்கில மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை ஸ்ரீ வித்யா நவாவரண பூஜை சம்பந்தமாக விளக்கங்கள் கூறப்படும்.

இடம் : 39, ஆடம் தெரு, மயிலாப்பூர், சென்னை - 600 004. என்ற இல்லத்தில் நடைபெறும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அஞ்ஞான இருள் உள்ள நமக்கு
ஒரு வழிகாட்டி வேண்டாமா?

குரு மிக மிக அவசியம் 2

குகாரச்ச அந்தகார: ஸ்யாத்
ருகாரஸ் தந்திரோ தக:
அந்தகார நிரோதித் வாத்குரு ரித்ய பிதீயதே II

ஞானியே குரு, அக்ஞானத்தைப் போக்கடிப்பவர்.

ஸ்ரீ வித்தையை உபாசிக்க வழிகாட்டி குரு தான். சாதாரணமாக எந்த மந்திர உபதேசமும் ஒரு குரு மூலமே தான் செய்துக்கொள்ளப் படவேண்டும்.

இந்த குருவின் மகிமையை ஐயம், திரிபு அற விளக்கமாக காட்டியவர் ஆதிசங்கரர் தான்.

ஒருவனுக்கு ஆரோக்கியமுள்ள செல்வம் இருக்கலாம். அழகுள்ள மனைவி "புருஷன்" இருக்கலாம். கீர்த்தி, செல்வம் எல்லாம் இருக்கலாம். அவன் உள்ளம் குருவின் பாத கமலங்களில் இணைந்து இல்லையானால் அதனால் என்ன பிரயோஜனம்? என்று தன் குரு அஷ்டகத்தில் கேட்கிறார் ஆதி சங்கரர்.

தியானத்திற்கு மூலம் குரு வடிவம்
பூஜைக்கு மூலம் குருவின் திருவடிகள்
மந்திரத்திற்கு மூலம் குருவின் திருவாக்கியம்
முக்திக்கு மூலம் குருவின் கிருபையே

குரோர் அனுக்கிரக தேவ புமான பூர்ணக பிரஜாயதே

குருவின் அருளால் தான் மனிதன் பூர்ணனாக ஆகிறான்.

குரு பக்தி என்ற படியில்லையேல் ஸ்ரீ வித்யை என்ற மேடை மீது ஏற முடியாது. ஆகவே எந்த மந்திர உபதேசத்தையும் ஒரு குரு மூலமே பெற வேண்டும்.

எவ்வாறு ஞானம் பெற்றாலும் பெற்ற ஞானத்தை விடக்கூடாது. இது பயன் பெற குரு அனுக்கிரகம் வேண்டும். எந்த அளவில் குருவினிடம் சிஷ்யனுக்குப் பக்தியுண்டோ அந்த அளவுக்கு குருவின் அனுக்கிரகம் நிச்சயம் கிடைக்கும்.

குருவின் அனுக்கிரகம் பெற்றவனுக்கு குரு உபதேசிக்காத விஷயங்களும் தானே புலனாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குருவினிடம் அதிகமாக நெருக்கவும் கூடாது. தூர விலகிப் போகவும் கூடாது. குருவை நேரில் வணங்கும்போது முத்திரை காட்டுவது தேவையில்லை. குரு வேறு கவனமாக இருக்கும்போது அல்லது படுத்துக் கொண்டிருக்கும் போது வணங்கக் கூடாது.

குரு உயிருடன் இருக்கும் போது சிஷ்யன் பிறருக்கு மந்திரோபதேசம் செய்வது கூடாது.

குரு பரம்பரா ஞானம் மிக அவசியம். அறிவு ஒரே விதமாக இருந்தாலும் பக்குவத்திற்கு ஏற்றபடி ஒவ்வொன்றிலும் பிரகாசிக்கிறது. இந்த அறிவாகிய ஆத்ம ஜோதியை பூரணமாகப் பிரகாசிக்கச் செய்ய வழிகாட்டுவது ஆசார்ய பரம்பரை. ஒருவர் பிற்காலத்தில் இதைச் செய்ய மற்றொருவருக்கு இந்த அதிகாரத்தைக் கொடுக்கிறார். இப்படி வருபவர் வரிசையே ஆசார்ய பரம்பரை. ஆத்ம ஜோதியை அடையும் மார்க்கமான நிதியைக் காப்பாற்றித் தந்தவர்கள் இவர்களே. யார் யார் மூலமாக இந்த நிதி இன்று வரை நிலைத்திருக்கிறதோ அவ்வளவு பேரையும் தியானித்தால் அதிக அனுக்கிரகம் உண்டாகும்.

தனது குரு	-	ஸ்வகுரு
குருவின் குரு	-	பரமகுரு
பரமகுருவின் குரு	-	பரமேஷ்டி குரு

சிலர் குருவைத் தேடிச் செல்வர். மற்றும் சிலரைக் குருவே தேடி வருவர். சிஷ்யன் விவேகானந்தன் எப்போதும் தன்னை நாடி வருவான் என்று துடித்துக் கொண்டிருந்தார். ராம கிருஷ்ண பரமஹம்ஸர். ஆதி சங்கரர் என்ற சிஷ்யன் வரவு நோக்கி காத்துக் கிடந்தார் கோவிந்த பகவத் பாதர்.

குரங்குகள் ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்திற்குத்தாவும். குரங்குக் குட்டி தன் அன்னையின் வயிற்றை கெட்டியாகப் பிடித்துக் கொள்ளும். அம்மாதிரி நாம் கிடைக்கும் குருவைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ள வேண்டும். இதற்கு "மர்க்கட கிசோர நியாயம்'' என்று பெயர். பூனைக் குட்டிகளை தாய்ப் பூனை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கௌவிக் கொண்டு போகும். இது போன்றே குரு நற்சீடனைத் தேடி வருவது. இதனை "மார் ஜால கிசோர நியாயம்'' என்பர். நாமெல்லோரும் மர்க்கட நியாயத்தைச் சேர்ந்தவர்களே.

மந்திரங்களை குருவினிடமிருந்து உபதேசம் பெறுவதற்கு ஒருவனுக்கு பாக்கியம் வேண்டும். அதாவது அவனது பூர்வீக வாசனை அனுகூலமாக இருக்க வேண்டும். குரு விஷயம் தெரிந்தவராக இருக்க வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நற் குணம் நல்லெண்ணமுடையவர்களே பிறருக்கு உபதேசிக்கத் தகுதியுடையவர்கள். சிஷ்யனும் தான் உபதேசமாகப் பெற்ற மந்திரத்தை முறைப்படி சகல அங்கங்களுடன் ஜபம் செய்து முயற்சியில் ஊக்கமுடையவனாக இருக்க வேண்டும்.

குரு ஹயக்ரீவர் போலவும், சிஷ்யன் அகஸ்தியர் போலவும், இருக்க வேண்டும். விஷயம் தெரியாத குருவாக இருந்தால் குருடன் குருடனுக்கு வழிகாட்டுவதாக ஆகும்.

மனிதர்களுக்குள் இருக்கக் கூடிய நான்கு முறைகள் மித்ரன், சத்ரு, பிருதயன் (சேவகன்), உதாஸீனன். இப்பாவங்களில் சிஷ்யன் பிருத்ய பாவத்தில் அடங்கியவன். அதாவது குருவுக்கு பணி விடைகள் செய்து அவர் கருணையைப் பெரும் மனப்பான்மை இருக்க வேண்டும்.

சிஷ்யனுக்கு உபதேசம் பெறும்படியான யோக்யதையை குரு தருபவராக இருக்க வேண்டும். கேட்காத சிஷ்யர்களுக்கு விஷயத்தை சொல்லக் கூடாது. கேட்பதற்கு சாமர்த்தியமில்லாத போதும் சிரத்தையுள்ளவனாக இருந்தால் அத்தகைய சிஷ்யனுக்கு அவன் கேட்காமலேயே உபதேசிக்கலாம்.

சிரத்தை இல்லாதவனுக்கு உபதேசம் செய்வது கேடு விளைவிக்கும்.

சிரத்தயா அக்னி: ஸமித்யதே
சிரத்தயதா ஹுயதே ஹவி: ll - ச்ருதி

சிரத்தை இல்லாதவன் கேட்டாலும் சொல்லக் கூடாது. அப்படிப்பட்டவன் கேட்காமலே இருந்தால் சொல்லவே கூடாது. சிரத்தை இருக்கும் சிஷ்யனுக்கு அவனுக்கு கேட்க சாமர்த்திய மில்லாத போதும் குரு அவனிடம் கேள்வியை எதிர்பார்க்காமலேயே உபதேசம் செய்யலாம்.

இறைவனே குருவாக வந்து ஞானத்தை ஊட்டுகிறான் என்பது நம்முடைய சமயக் கொள்கைளின் அடிப்படையாகும். ஆசாரியனைத் தெய்வமாகவே கண்டு வழிபடுவது ஒன்றே பூட்டைத் திறப்பதற்குரிய திறவு கோல். இதைத் திருமூலர்.

தெளிவு குருவின் திருமேனி காணல்
தெளிவு குருவின் திரு வார்த்தைக் கேட்டல்
தெளிவு குருவின் திருநாமம் சொல்லல்
தெளிவு குருவுரு சிந்தையில் தானே ll

என்கிறார். இங்கு தெளிவு என்றால் ஞானம் என்று அர்த்தம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உபாசகனின் முதல் பிரவேசம்
குரு பாதுகை பற்றி அறிந்துக் கொள்வதே

குருபாதுகை

குரு தேவார்ப்பணம் வஸ்து தேனதுஷ்டோஸ்மி ஸுவ்ரதே
ஸ்ரீ குரோ: பாதுகாம் முத்ராம் மூல மந்த்ரஞ்ச கோபயேத் I
- குரு கிதை

குரு தேவருக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட வஸ்துவால் இறைவனே சந்தோஷமடைகிறான். ஸ்ரீ குருவின் பாதுகையையும், முத்திரையையும், மூல மந்திரத்தையும் இரகசியமாக வைத்திருக்க வேண்டும்.

ஸ்ரீமத் பரம் பிரஹ்ம குரும் ஸ்மராமி
ஸ்ரீமத் பரம் பிரஹ்ம குரும் பஜாமி
ஸ்ரீமத் பரம் பிரஹ்ம குரும் வதாமி II
ஸ்ரீமத் பரம் பிரஹ்ம குரும் நமாமி II

(மகிமை வாய்ந்த பரப்பிரும்மமான குருவை சிந்திக்கிறேன், சேவிக்கிறேன், பேசுகிறேன், நமஸ்கரிக்கிறேன்).

குருவின் சின்னம் பர்துகைகளே. பாதுகைகளைப் பூஜிக்கக்கூட வேண்டாம். ஸ்மரித்தாலே போதும்.

குரு பாதுகை நான்கு மஹா வாக்கியங்களில் ஸ்வரூபமாக உள்ளது. அவை,

ஹம்ஸ: சிவ: ஸோஹம் I ஸோஹம் ஹம்ஸ: சிவ: I
ஹம்ஸ: சிவ: ஸோஹம் ஹம்ஸ: II
இவை "அஹம் பிரஹ்மாஸ்மி" என்பதைக் குறிப்பதாகும்.

குரு பாதுகா மந்திரம் அனுசந்தானம் செய்யா விட்டால் வேறு மந்திரங்கள் பயன் அளிக்க மாட்டா. எந்த மந்திர ஜபத்திற்கு முன்பும், பூஜைக்கு முன்பும் குரு பாதுகையை ஸ்மரிக்க வேண்டும்.

குரு பாதுகையை ஸ்மரிக்கு முன் ம்ருஹி முத்திரையை தலையில் வைத்துக் கொள்ள வேண்டும்.

சிரஸில் குரு சரணங்கள் பிரம்மரந்திரத்தில் விளங்குகிறது. அதில் 12 தள (துவாதச)க் கமலம். அதன் கர்ணிகையில் பிரகாகிக்கும் திரிகோணம். அதில் ஒளி தரும் நாத பிந்துமய மண்டலம். அதன் மீது விளங்கும் ஹம்ஸ சிம்மாதனத்தில் குரு சரணங்கள் இருப்பதாக குரு பாதுகையை ஸ்மரிக்க வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதை ஸ்மரித்து குரு பாதுகா மந்திரம் கூறிய பின் சுமுகம் முதலிய நான்கு முத்திரைகளைக் காட்டி யோனி முத்திரையால் குருவை இடது புஜத்தில் வணங்க வேண்டும்.

குருவை வரவேற்று ஆசனம் கொடுத்து உபசரிப்பதே இந்த நான்கு முத்திரைகளை காட்டுவதன் அர்த்தம். ஈஸ்வரனே குருவாக எழுந்தருளி யிருக்கிறார் என்பதைக் காட்டுவதே யோனி முத்திரை.

(முத்திரைகளை போடும் முறை, குரு பாதுகா மந்திரம் முதலியவைகளை குரு மூலமே அறிய வேண்டும்).

குரு பாதுகைகள் பற்றி அறிய ஆம்னாயங்கள் பற்றி தெரிந்துக் கொள்ள வேண்டும். ஆம்னாயம் என்றால் வேதம், ஆகமம், அப்பியாசம், உபதேசம் முதலியவை. ஆறு ஆம்னாயங்கள் - பூர்வ, தக்ஷிண, பச்சிம, உத்தர, ஊர்த்துவ, அனுத்தர ஆம்னாயங்கள். முதல் நான்கு ஆம்னாயம் நான்கு வேதங்கள். ஊர்த்வாம்னாயம் - உபநிஷத்துக்கள். அனுத்தராம்னாயம் - ஆகமங்கள்.

ஒவ்வொரு ஆம்னாய ஆரம்பத்தில் குரு மண்டல தேவதைகள் இடம் பெறுகின்றனர்.

குரு பாதுகை எல்லா ஆம்னாயங்களில் ஸ்வரூபமாக உள்ளது. குரு பாதுகையில்,

"ஸ்வரூப நிருபண ஹேதவே"
"ஸ்வச்சப் பிரகாச விமர்ச ஹேதவே"
"ஸ்வாத்மா ராம பஞ்சர விலீன தேஜஸே"

என்று மூன்று வாக்கியங்கள் உள்ளன. இது குரு பரம்பரையை உணர்த்தும்.

முதல் நான்கு ஆம்னாயங்கள் ஸ்வகுரு பாதுகையில் அடங்கும். ஐந்தாவது ஆம்னாயம் பரம குரு பாதுகையிலும், ஆறாம் ஆம்னாய பரமேஷ்டிகுரு பாதுகையிலும் அடங்கும்.

ஆகையால் குரு பாதுகா மந்திரத்தை ஒரு தரம் ஸ்மரித்தால் எல்லா ஆம்னாயங்களையும் ஸ்மரித்த பலன் உண்டு. (ஸ்ரீ சக்கிரத்திலுள்ள தேவதைகள் எல்லோருமே ஆம்னாய தேவதைகளே).

மற்றும் ஒரு பாதுகையில் ஆனந்த பைரவ, ஆனந்த பைரவி மந்திரங்களும் பிரகாச விமர்சப் பிரணவங்களும், கேசரீ பீஜமும், பிரசாத பரா, பராப்பிரசாத பீஜங்களும், சிவா பின்னமான ஹம்ஸ மந்திரங்களும் உண்டு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஞான ஸ்வரூபம்: ஹஸக்ஷமல வரயூம்

ஹ - ஈஸ்வரன், ஸ - சக்தி, க்ஷ - சப்த பிரபஞ்சம், ம - ஜீவன், ல வ ர ய - ஐம்பூதங்கள் கொண்ட பிரபஞ்சம், ஊம் - நிவர்த்தி மார்க்கம்.

அக் ஞானம் அழிந்த நிலை: ஸஹக்ஷமல வரயீம்

ஸ - சித் சக்தி, ஹ - பரமாத்மா, க்ஷ - அவித்தையின் அழிவு, ம - ஆத்மானந்தம், ல வ ர ய - போக்கியத்தன்மை நீங்கிய பிரபஞ்சம் ஈ - பராகாம நிலையாக விளங்குவது.

இக் காம கலையே பிரக்ஞானம் என்ற மஹா வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குரு பாதுகா மந்திரங்களில் தலை சிறந்தது மஹா பாதுகா மந்திரம். இதற்கு மேற்பட்ட மந்திரமே கிடையாது. மஹா பாதுகையிலும் லகு மஹா பாதுகை, மஹா மஹா பாதுகை என்று குரு வடிவங்கள் உண்டு. இவ்விரு வடிவங்களிலும் மஹா வாராஹியின் இரண்டு பீஜங்கள் தொடக்கத்திலும் இறுதியிலும் இருப்பதைக் கவனிக்கும்போது மஹா வாராஹியின் சிறப்புத் தெரியலாகும்.

மஹா மஹா பாதுகையில் மஹா வாராஹியின் மந்திரமே இடையில் வருகிறது.

சின்ஜன் நூபுர பாத கங்கண மஹா முத்ரா ஸலாக்ஷார
ஸாலங்காராங்த் பாத பங்கஜ யுகம் ll
உத்யா ஸ்வந்நக சந்திரகண்ட ருசிரம் ராஜஜ்ஜ ஸந்நிபம்
பிருஹ்மாதி த்ரிதஸாஸரார்ச்சித மஹம் மூர்த்தி ஸ்மராம் பிகே ll

- ஸ்ரீ வித்யா ஸ்தோத்திரம்

குரு பாதுகையின் மீது அம்பிகையின் சரணங்களை பாவித்து தியானிக்கச் சொல்கிறது இந்த ஸ்துதி.

உபாசகர்கள் தங்கள் சிரஸில் "மிருஹீ" முத்திரையை வைத்து குருவை தியானிப்பது பற்றி ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. இந்த முத்திரைக்கே ''மஹா முத்திரை'' என்று பெயர். இதன்மேல் பரதேவதையின் சரணங்கள் விளங்குகின்றன. அம்பிகையின் சரணங்களைத் தாங்கும் பாதுகைகள் சிந்தாமணி என்னும் நவரத்தினக்களால் இழைக்கப்பட்டு விளங்குகின்றன.

அட்டையிலுள்ள குரு பாதுகையைச் சுற்றி எட்டுதள கமலம் இருப்பதைக்காணலாம். இந்த எட்டு தளமும் எட்டு ஆத்ம

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குணங்களைக் குறிக்கின்றன. இந்த ஆத்ம குணங்களைப் பெற குருவின் உதவி அவசியம் தேவை.

அந்த ஆத்ம குணங்களாவன:- தயை (கருணை), க்ஷமா (பொறுமை), அனசூயா (அசூயையயின்மை), சௌசம் (உடல், வாக்கு, மன சுத்தம்), அநாயாஸம் (சக்திக்கு மீறி செய்யாமை), மங்களம் (சுபம்), அகார்ப்பணயம் (கஷ்டத்தை தாங்கும் தைரியம்), அஸ்பருஹா (பற்றின்மை) இதன் விவரங்கள் பிரதிபாவின் "வாழ்க்கை தத்துவம்" பார்க்கவும்.

குருவினிடம் உபதேசம் பெற்றதற்கு காணிக்கை அளிப்பது மிக அவசியம். அது பணமாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை பொன் வைக்கும் இடத்தில் புஷ்பம் வைக்கலாம்.

தீக்ஷை என்று செய்ய வேண்டும் என்றால் கடம் வைத்து பூஜித்து அதனால் சாதகளை அபிஷேகித்து, பின்பே உபதேசிக்க வேண்டும்.

குரு மூலம் முறைப்படி உபதேசம் பெற்று அதன் பின் ஜபம் செய்து வராவிடில் அந்த பாவம் குருவையே சேரும்.

ரகஸ்யங்களை ஆசார்யர் தக்க சிஷ்யர்களுக்கே உபதேசிப்பார்கள். ஆகவே தத்துவத்தை உணர வேண்டும் என்கிற அபேக்ஷயுடையவர்கள் நல்ல சிஷ்யர்களாக விளங்க வேண்டும். சிஷ்யர்களிடம் திருப்தி ஏற்பட்ட பின்பே குரு சிஷ்யனுக்கு தீக்ஷை அளிப்பார்.

குரு என்பவரை தெரிந்தெடுக்கு முன் நன்கு யோசித்து முடிவு எடுக்க வேண்டும். குருவாக வரித்துவிட்டால் பின்னர் அவரை நிந்திப்பதோ சட்டையை மாற்றுவது போல குருவை மாற்றுவதோ இவைகள் செய்வது கூடாது.

பெண்கள் உபதேசம் செய்யலாமா? இது இப்போது கேட்கப்படும் கேள்வி. ஸ்ரீவித்யையின் முதலிடம் சுவாஸினிகளுக்கே. அவர்கள் தீக்ஷை பெற்று உபாசனையில் தேர்ந்தவர்களாக இருந்தால் தாராளமாக எடுத்து வைக்கலாம். பார்க்கப்போனால் அம்பிகை உருவான சுவாஸினிகளிடம் உபதேசம் பெறுவது சிலாக்கியம் என்றும் கூறலாம்.

தீக்ஷைகள்

தீக்ஷை என்பது அக்ஞானத்தை ஒழித்து பிரும்ம ஞானத்தைப் பிரகாசிக்க செய்வதேயாகும். பின்னர் சிஷ்யன் சாதனையில் முனைதல் வேண்டும். சாதனைகள் பலவகைப்படும். மந்திர ஜபம், பூஜை, யந்திரம், முத்திரை, ஸந்தி, ஹோமம், விரதம், தவம் முதலியன. இவைகளுடன் கூடி விளங்குவது உபாசனை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தியானத்தினால் இஷ்ட தேவதையின் சாக்ஷாத்கரமும் உண்டாகும். தீக்ஷைகளில் பல வகைகள் உண்டு. குரு சிஷ்யனின் தலையிலோ அல்லது உடலிலோ தொட்டுக்கொண்டு மந்திர உபதேசம் செய்வது ஸ்பர்ச தீக்ஷை.

குரு, இறைவனையோ, அம்பிகையையோ கண்களை மூடித் தியானித்து பின் கண்களைத் திறந்து சிஷ்யனை நன்றாகப் பார்ப்பது த்ருக் தீக்ஷை. குருவை தரிசித்து மாத்திரத்தாலும், அவருடன் பேசுவதாலும், அவரை தொடுவதாலும் உடனே ஞானம் உண்டாகும். இது சாம்பவீ தீக்ஷை.

நயன தீக்ஷை:- மீன் தன் முட்டைகளைக் கண்ணால் பார்த்த மாத்திரம் ரக்ஷிப்பதுபோல் ஆசார்யர் நயனத்தால் கடாக்ஷிப்பது.

ஸ்பரிச தீக்ஷை:- கோழி தன் முட்டைகளை சிறகால் தடவி காத்தல் போல் ஆசார்யர் தன் கரத்தால் தொட்டு அனுக்கிரகிப்பது.

மானஸ தீக்ஷை:- ஆமை தன் முட்டைகளை நினைத்த மாத்திரத்தில் இரட்சிப்பது போல் அனுக்கிரகிப்பது.

வாசக தீக்ஷை:- மந்திரங்களை உபதேசிப்பது.

சாஸ்திர தீக்ஷை:- ஆகமார்த்தங்களை போதிப்பது.

யோக தீக்ஷை:- யோக மார்க்கத்தால் சிஷ்யனின் இருதயத்தில் பிரவேசித்து உபதேசிப்பது.

அவுத்திரி தீக்ஷை:- ஹோமம் சம்பந்தமுள்ளது. இது இரண்டு விதம் ஞான தீக்ஷை (மனத்தால் செய்வது), கிரியா தீக்ஷை (குண்டல மண்டலாதிகள் போட்டுச் செய்வது).

தேவியின் சரீரம் போலவே குருவின் தேகமும் இருக்கிறது. குருவின் அருளால் சிஷ்யனுக்கு தேவி வடிவினன் ஆகிறான்.

நீண்ட காலம் சிஷ்யன் செய்த பணிவிடையால் சந்தோஷமடைந்த குரு மௌனமாக சிஷ்யனுக்கு அனுக்ரகம் செய்ய சங்கல்பம் செய்தால் அது மானஸீக தீக்ஷை எல்லா தீக்ஷையிலும் இதுவே மிக உத்தமமானது. முதலில் கிரியா தீக்ஷை செய்துக்கொள்ள வேண்டும். சுக்ல பக்ஷத்தில் சுபமான தினத்தில் சுத்த மனதுடன் தீக்ஷை ஆரம்பமாக வேண்டும். ஸ்நானம் செய்து மடியுடுத்தி குருவின் உடலில் தேவியை தியானிக்க வேண்டும்.

குரு சம்பந்தமான முழு விவரங்களையும் ''பிரதிபா''வின் "குரு தத்துவம்'' என்ற நூலில் காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவி ஸூக்தத்துடன் கூடியதும், மாத்ருகையுடன் கூடியதுமான வித்யா ந்யாஸத்தைச் செய்து புருஷ ஸூக்தத்திலுள்ள 16 ரிக்குகளால் ஆவாஹனம், ஆஸனம், பாத்யம், அர்க்கியம், ஆசமனம், ஸ்நானம், வஸ்திரம், ஆபரணம், கந்தம், புஷ்பம், தூபம், தீபம், நைவேத்தியம், தாம்பூலம், பிரதக்ஷிணம், நமஸ்காரம் என்ற 16 உபசாரங்களால் அம்பிகையை வழிபட வேண்டும். ஸஹஸ்ராக்ஷர வித்தையால் புஷ்பாஞ்சலி அளிக்கவேண்டும்.

(இந்த ஸகஸ்ராக்ஷர வித்யையால் தேவிக்கு புஷ்பாஞ்சலி செய்வதை அம்பிகை மிகவும் விரும்புகிறாள். இது கட்கமாலா நாமாக்களே).

கோமயத்தால் பூமியை சுத்தம்செய்து அதில் சுத்தமான ஆறுபடி அரிசியை பரப்பி அதன்மீது ஆறுபடி ஜலம் நிறைந்த கலசத்தை வைத்து அதனுள் பஞ்ச ரத்னங்களையும், ஆல், அரசு, மா, நாவல், அத்தி இம்மரங்களில் பட்டைகளையும் தளிர்களையும் போட்டு, மாவிலை தேங்காய் மேல் வைத்து அலங்கரிக்க வேண்டும். குரு இதில் அம்பிகையை தியானித்து தர்ப்பையால் கலசத்தைத் தொட்டுக் கொண்டே மாத்ருகையுடன் சிந்தாமணி மந்திரத்தை ஜபிக்க வேண்டும். 108 முறை ஜபமான பின் தூப தீபம் காட்ட வேண்டும்.

பின் வஸ்திரத்தினால் சிஷ்யனின் கண்களைக் கட்டி குரு மந்திரோபதேசத்தை வலது காதில் சொல்ல வேண்டும்.

சிஷ்யன் குருவிற்கு நமஸ்காரம் செய்தபின் தேவியிடம் தான் சரணாகதியடைவதாகச் சொல்லி குடும்பத்திற்கு நமஸ்காரம் செய்ய வேண்டும். பின் சிஷ்யனை கிழக்கு முகமாக உட்காரவைத்து மந்திரத்துடன் கலச ஜலத்தை அபிஷேகம் செய்ய வேண்டும்.

குருவை எப்படி தியானிப்பது ?

ஸஹஸ்ரதல பங்கஜே ஸகல சீத ரச்மிப்ரபம்
வராபய கராம்புஜம் விமலகந்த புஷ்பாம்பரம்
ப்ரஸன்ன வதனேக்ஷணம் ஸகல தேவதா ரூபிணம்
ஸ்மரேச் சிரஸி ஹம்ஸகம் ததபிதான பூர்வம் குரும் ॥

- குரு கீதை

ஆயிரம் இதழ் கொண்ட தாமரையில் முற்றுங் குளிர்ந்த ஒளியில் பிரபையுடையதும் தாமரை போன்ற கைகளில் வர முத்திரையும், அபய முத்திரையும் விளங்குவதும், மலர்ந்த முகமும், கண்களும் உடையதும் எல்லா தேவதைகளின் வடிவமான ஹம்ஸம் எனப் பெயர் பெற்ற குருவின் மூர்த்தத்தை சிரஸில் தியானிக்க வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஊர்த்வாம்னாய குருபதமும் மூன்று புவனங்களின் ஆட்சிப் பீடமாகிய ஓம்காரம் என்னும் சிம்மாசனமும் பூர்ண பிரபையுடன் விளங்குவதும் சாந்தமானதும் சைதன்ய சூரியன் உதிக்குமிடமாகிய குரு கமலத்தை தியானிக்க வேண்டும்.

ஸ்ரீ குஹானந்த நாதர்

ஸ்வபாவ சின்மயானந்தம் கிருபா பூர்ணம் ஜகத்பதிம்
அதிஷ்டவர்க்க ஜேத்தாரம் சிதானந்தம் குரும்பஜே 1

நித்யானந்தம் நிர்விகாரம் ஞான பாவானு போதகம்
ஸதாலம்பம் நித்ய திருப்தம் குஹானந்தம் குரும்பஜே 1

நிர்குணம் நிர்மலம் சாந்தம் நிராயாசம் நிரஞ்சனம்
நிராலம்பம் ஜகத் பூஜ்யம் ஆத்மானந்தம் குரும்பஜே 1

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குரு நாதர் சிதானந்த நாதர் 3

ஸ்வ பிரும்மரந்திர காம்போஜ கர்ணிகாபீட வாசிதம்
சிவ ரூபம் ஸ்வேத வஸ்திர மால்ய பூஷானு லேபனம்
தயார்த்ர திருஷ்டிம் ஸ்மேராஸ்யம் வராபய கராம்புஜம்
வாமாங்க கதயா பீத வபுஷார்ண வேஷயா
பத்ம பத்யா ராரேகம சக்த்யா தக்ஷ புஜாவ்ரதம்
ஸ்ரீ சிதானந்தநாதம் தம் ஆனந்தம் சிந்தயாம்யஹம்.

தந்திர சாஸ்திர பாரங்கதரும், ஸ்ரீ வித்தையும், பிரம்ம வித்தையும் ஒன்றுதான் என்று ஸ்தாபித்தவரும் அபிநவ பாஸ்கரர் என்ற விருது பெற்றவருமான எங்களுடைய குரு ஸ்ரீ சிதானந்தரின் 21-வது குரு பூஜை இது. (1978)

இவர் 30-க்கு மேற்பட்ட சாக்த நூல்களை இயற்றியுள்ளார். இவைகளில் முக்கியமானவை பூஜாகல்பம், நித்யாஹ்நிகம், ஸ்ரீநகர விமர்சனம், குருதத்துவ விளக்கம். வரிவச்யாரகசியம், ஸ்ரீசுப்பிரமணிய தத்துவம், ஸ்ரீ நடராஜ தத்துவம்,. லலிதா திரிசதிபாஷ்யம் முதலியன. ஸ்ரீவித்யா நவாவரண பூஜாக்ரமத்தை அச்சில் கொடுத்து (ஸ்ரீ வித்யா ஸபர்யா பத்ததி) உபாசகர்களுக்குப் பேருதவி செய்த முதல் ஸ்ரீ வித்யா உபாசகர் ஸ்ரீ சிதானந்தர்தான். மகாசது: சஷ்டிகோடி யோகினி கண சேவிதா என்கிற நாமாவிற்கு விளக்கம் கொடுத்த பாஸ்கரராயர் எழுதிய "வரிவச்யா ரகசியம்" என்கிற கிரந்தத்தை தமிழாக்கம் செய்தவர்.

அநேக சிஷ்யர்களுக்கு மந்திரோபதேசம், தீக்ஷை, பீடாதிகாரம் கொடுத்தவரும், சுவாஸினிகள், தேவியை பூஜை செய்வதற்கு அதிகாரம் உண்டு என்று ஸ்தாபித்தவரும் பல சுவாஸினிகளுக்கு பீடாதிகாரம் தீக்ஷை அளித்தவரும் சிதானந்தர்தான்.

இவர் தகப்பனார் நரசய்யருக்கு முருகன் அருள் கிடைத்தது ஒரு ஆச்சரியமான சம்பவம். அவருக்கு பொறுக்க முடியாத வயிற்று வலி. பிறருக்கு தொல்லை கொடுக்க விரும்பாத அவர் தன் உயிரையே மாய்த்துக் கொள்ள ஒரு காட்டிற்குச் சென்றார். "நில்" என்று ஒரு குரல் கேட்டது. "உன் உயிரை மாய்த்துக் கொள்ள உனக்கு அதிகாரம் இல்லை" என்ற குரல் கேட்டது. அப்போது அந்த இருண்ட காட்டில் ஒரு ஜோதி தோன்றியது. கழுத்து முதல் பாதம் வரை காவியுடை அணிந்த ஒரு கிழவர் நரசய்யர் முன்பு தோன்றினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"பிராணஹத்தி செய்துகொள்ள உனக்கேது உரிமை வயிற்று வலியை போக்கிக்கொள்ள மருந்து சாப்பிட வேண்டும் உயிரை போக்கிக் கொள்ளக்கூடாது" என்று மூலிகைகளை எடுத்து பஸ்மமாக்கி மருந்தாகக் கொடுத்தார் அக்கிழவர் மறு நிமிஷம் அந்த கிழவர் இருந்த இடத்தில் ஒரு சிறுவன் தோன்றினான். முருகனே தன்னை அனுக்கிரஹிக்க வந்தது அப்போதுதான் நரசய்யருக்குப் புலனாயிற்று.

அவர் பிரமை நீங்கு முன்பு மீண்டும் அதே கிழவர் தோன்றினார். அவர் கூறியதாவது "உன் சம்சாரம் சீக்கிரமே என்னிடம் வந்து விடுவாள். அவள் சகோதரியை மணந்துக் கொள். அவளுக்கு பிறக்கும் சுப்பிரமணியனே பிரும்மண்யத்தையும், ஸ்ரீ வித்யையையும் பரப்பப் போகிறான். நீ ஒவ்வொரு ஷஷ்டியின்போது திருத்தணிக்கு வந்து என்னை தரிசனம் செய்" என்று சொல்லி கிழவர் மறைந்து விட்டார். நரசய்யர் திருத்தணியில் முருக தரிசனம் செய்து திரும்பியபோதே ஒருநாள் உயிர் நீத்தார்.

அவருக்கு இரண்டாவது மனைவியினிடத்தில் பிறந்தவரே சிதானந்தரான சுப்பிரமணியன் தன் தந்தைக்கு முருகன் இட்ட கட்டளைப்படிக்கே இவர் திருத்தணி முருகனிடம் விசேஷ ஈடுபாடு கொண்டிருந்தார்.

ஸ்ரீ சிதானந்தர் ஸ்ரீவித்யைப்பற்றி இருந்த தவறானக் கொள்கைகளை போக்குவதில் சுமார் முப்பது ஆண்டு காலமாக முயன்று வெற்றி கண்டவர். பிரஹ்மாபின்ன சித் சக்திக்கும் தனக்கும் உள்ள அபேதத்தை எப்பொழுதும் அனுபவமாக்கிக் கொண்டிருந்தவர். ஸ்ரீ குஹானந்த மண்டலியை ஸ்தாபித்து ஸ்ரீவித்யை என்ற பத்திரிகையையும் நடத்தியவர்.

இவர் வாரம் ஒரு தினம் சிஷ்யர்களை எல்லாம் கூட்டி தேவி சம்பந்தமான கிரந்தங்கள், உபநிஷதங்கள் இவைகளை விளக்கி வகுப்புகள் நடத்தி வந்தார். அவரைப் போல் உபாசனையில் தத்துவத்தை மறைக்காமல் அத்வைதத்திற்கு முரணாகாமல் சொல்லக் கூடியவரைக் காண்பதரிது.

இவரது தந்தை ஸ்ரீ நரசய்யர் காலமாகுமுன் குமாரனை அருகில் அழைத்து ஆண்டவன் தனக்கருளிய ஷடாக்ஷரி மந்திரத்தை உபதேசித்து தணிகேசனது அருள் தனக்கேற்பட்டதையும் கூறினார். ஆகவே இவருக்கு தகப்பனாரே முதல் குருவாக வாய்ந்தார்.

குடும்ப பாரம் ஏற்படவே செங்கற்பட்டு "ரிபர்மேடரி" பள்ளியில் வேலை கிடைத்தது. பின்னர் ஆசிரியர் பயிற்சி தேறி சென்னை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கார்ப்பரேஷன் பள்ளி போதகாசிரியராகப் பணியாற்றினார். பின்னர் திருவல்லிக்கேணி வல்லப அக்ரஹாரம் கார்ப்பரேஷன் பள்ளி தலைமை ஆசிரியராக 25 ஆண்டு பணி புரிந்து 1937-ல் ஓய்வு பெற்றார்.

இதற்கிடையில் அவருக்கு குருநாதர் ஸ்ரீ குகானந்தர் அருள் கிடைத்தது.

இவருடைய பூர்வாசிரமப் பெயர் நெடிமீண்டி சுப்பிரமணியம் முருகன் அருளைப் பரிபூரணமாகப் பெற்ற நரசய்யருக்கு சித்திரபாநு வருஷம் (1883) ஐப்பசி மாதம் 30-ம் தேதி பாநுவாரம் மூலா நட்சத்திரத்தில் பிறந்தார். ஸ்ரீ சக்ர அதிதேவதையான காமாட்சி அம்மன் கோயில்கொண்டுள்ள காஞ்சியில் இவர் தோன்றியதே சிறப்பான அம்சமாகும். தன் தாயாருடன் காசி யாத்திரையை மேற்கொண்டபோது இவர் பூர்வ புண்ய வசத்தால் ஸ்ரீ குகானந்த நாதரை சந்திக்கவும் அவர் அருள் பெறவும் அவரிடம் தீக்ஷை பெறவும் நேர்ந்தது.

1911 ஜனவரியில் பிரயாகையில் மகாமேளா சமயத்தில் இவருக்கு குருவினிடம் உபதேசம் கிடைத்தது. அன்று அவர் கங்கா நதிக்கரையிலேயே தீர்த்த பாத்திரத்தினால் இவருக்கு அபிஷேகம் செய்வித்து ஹம்ஸ மந்திரத்தையும் அதன்பின் ஸ்ரீவித்யா மகா ஷோடசியையும் உபதேசித்தார் சிதானந்தர் அவர்களிடம் தீக்ஷை பெற்ற அன்பர்களுக்காக ஸ்ரீ குகானந்தர் அருளிய உபதேசம் இங்கு அப்படியே பிரசுரிக்கப்படுகிறது.

அப்போது குருதேவர் ஸ்ரீ குகானந்தர் திருவாய் மலர்ந்தருளியதாவது:

ஸ்ரீ வித்யா உபாசகர்களுக்கு குரு பரம்பரை அவசியம் தெரிந்திருக்க வேண்டும்.

குரு பரம்பரா ஞானமில்லாமல் ஆத்ம ஞானத்தில் தெளிவு ஏற்படமாட்டாது ஆதலால் குரு பரம்பரையை உபதேசிக்கின்றேன்.

"எனது தீக்ஷா நாமம் குகானந்தநாதர், என் குருவும் உனது பரம குருவுமானவர் ஆத்மாநந்தநாதர் என் பரம குருவும் உன் பரமேஷ்டி குருவுமானவர் பிரகாசானந்தநாதர். உன் பரமேஷ்டி குருவின் பெயர் விமலாநந்தநாதர். இவர்கள் யாவரும் பரம ஹம்சர்களே. என் குருநாதராகிய ஆத்மானந்தநாதர் ஒரு மகா யோகி அவர் சுப்பிரமணிய உபாஸனையில் கரைகண்டவர்" என்று கூறி குருபாதுகா மந்திரத்தை உபதேசித்தருளினார்.

தன் தகப்பனார் சுப்பிரமணிய சுவாமியின் அருளைப் பெற்றதாலும் தன் குரு குகானந்தர் சுப்பிரமணிய உபாஸனையில் கரை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கண்டவராதலாலும் சிதானந்தர் குருபூஜையை திருத்தணியிலேயே விடாது நடத்தி வந்தார்.

ஸ்ரீ குகானந்தர் தன் சிடனிடம் கூறியது: ''எந்த சாந்தகிரி நிலையனாலும் ஷண்முகன் உன் தந்தைக்கும் உனக்கும் உபாசனா மூர்த்தியாக இருக்கிறானோ அவனுடைய ஸாகார ரூபத்தில் என் ரூபத்தை தரிசிப்பாயாக. மகர மாதம் கிருத்திகை எனது தீக்ஷா தினம் அன்று திருத்தணியில் என்னை தரிசிப்பாய்''.

அவர் இறைவனுடன் கலப்பதற்கு முன் ஆண்டு தான் அவர் செய்துவந்த குருபூஜை அடியேனது இல்லமான மயிலாப்பூர் லலிதாலயத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

குருவின் ஆக்ஞைப்படி பன்னிரண்டு ஆண்டுகள் மிக ரகசியமாக தன் தாயாருக்கும் தெரியாதபடி அம்பாளை உபாசித்து பதிமுன்றாவது ஆண்டு அதாவது 1924-ல் சரத் நவராத்திரி பௌர்ணமியில் காமாட்சி அம்பாள் சந்நிதியில் ஆதிசங்கரர் பிரதிஷ்டை செய்த ஸ்ரீ சக்கிரத்தில் நவாவரண பூஜை நடத்துமாறு ஏற்பாடு செய்து பின்னர் அவரே முன் நின்று நடத்தி வந்தார்.

மதுரை மந்திரேஸ்வர சர்மாவுடன் ஸ்ரீ சிதானந்தர் காஞ்சி காமகோடி பெரியவர்களை விழுப்புரத்தில் சந்தித்தார். அப்போது சர்மா தான் இயற்றிய சில ஸ்லோகங்களை பெரியவர்களின் முன் வாசித்து அர்ப்பணித்தார். ஆசார்யர் சிதானந்தரை நோக்கி, "நீயும் காமாட்சியின் மேல் சுலோகங்களைச் செய்'' என்று உத்திரவிட்டார்.

ஆசாரியரின் ஆக்ஞைப்படியே குருநாதர் காமாட்சி மாத்ருகா ஸ்தோத்திரமும், குருவார்யா ஸ்தவமும், ஸ்ரீமகா ஷோடசிமந்திர மாத்ருகா ஸ்தோத்திரமும் இயற்றி அச்சிட்டு ஆசாரியர் சென்னைக்கு வந்தபோது சமர்ப்பித்தார்.

திருவண்ணாமலை சேஷாத்திரி சுவாமிகளையும் சிதானந்தர் தரிசித்தது மிக சுவாரஸ்யமானது. சேஷாத்திரி சுவாமிகளைப் பற்றி பலர் பலவாறு கூறினார்கள். ஸ்ரீவித்தையை உபதேசித்து பைத்தியம் பிடித்ததென்று பலர் சொல்லிக்கொண்டார்கள். இந்த வதந்தி சரிதானா என்று பரீட்சிக்க சிதானந்தர் விரும்பினார்.

1920-ம் ஆண்டு மே மாதம் ஒருநாள் இரவு 9-மணிக்கு சம்பத்திரியைனார் கோவிலில் சுவாமிகளைக் கண்டு வந்தனம் செய்தார். அப்போது சுவாமிகள் சிரித்து "விடியற்காலம் மூன்று மணிக்கு வா'' என்றார் சிதானந்தர் இரவு முழுவதும் விழித்திருந்து விடியற்காலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூன்று மணிக்கு சுவாமிகளை தரிசித்தபோது சுவாமிகளின் சரீரம் முழுவதும் ஒரே சிகப்பாக இருந்தது. அவரை சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தார். சுவாமிகள், . "நன்றாகப் பார் ! தெரிந்ததா? சந்தேகமில்லையே ! உனக்கு கிடைத்ததைப் பத்திரமாகக் காப்பாற்று, போ" என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

குகானந்த மண்டலி என்ற சபையை 1937-ம் ஆண்டு மே மாதம் சிதானந்தர் ஸ்தாபித்தார் சிதானந்தர் 50 ஆண்டுகள் ஸ்ரீ வித்தையை பாரபட்சமின்றி பரப்பினார் இவர் சென்னைக்கு அடுத்த பழவந்தாங்கல் என்ற கிராமத்தில் வசித்து வந்தார் இவரை சீடர்களும், அன்பர்களும் "ஸார்" என்றுதான் அழைப்பது வழக்கம் இவர் 1957-ல் தமது 76-வது வயதில் ஸ்ரீபுரம் அடைந்தார்.

தீக்ஷையும், சாதனையும் குறித்து குருநாதர் சிதானந்தர் எழுதிய கட்டுரை ஸ்ரீ வித்யா உபாசகர்களுக்கு உபயோகமாக இருக்கும் என்று கருதி இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

தீக்ஷை என்பது அஞ்ஞானத்தை ஒழித்து பிரம்ம ஞானத்தை பிரகாசிக்கச் செய்வதேயாகும். இதன் பின் சீடன் சாதனைகளில் முயலவேண்டும்.

சாதனைகள் பல வகைப்படும். யோகம் முக்கியமானது மந்திர ஜபம், பூஜை, ஆசாரம், யந்திரம், முத்திரை, சந்தி, ஹோமம், விரதம், தவம் முதலியன இதர சாதனங்களாகும். இந்த சாதனைகளோடு கூடி விளங்குவது உபாசனை எனப்படும். யோகத்தில் பல பிரிவுகளுண்டு. ஹடம், லயம், மந்திரம், தியானம், ஞானம் என்பன யோகத்தின் பிரிவுகளாகும், ஒவ்வொரு பிரிவிலும், யமம், நியமம், பிராணாயாமம், பிரத்யாகாரம் தாரணை, தியானம், சமாதி என்ற எட்டு வகை அங்கங்களுண்டு.

தியானத்தினால் இஷ்டதேவதையின் சாக்ஷாத்காரம் உண்டாகும். பின்னர் சமாதிநிலை ஏற்படும் சமாதி நிலையில் குண்டலினி சக்தி விழிப்படையும், குண்டலினி சக்திதான் பிண்டத்தில் விளங்கும் ஆத்மசக்தி. அது தூங்குவதால் ஜீவபாவமும் விழிப்படைவதால் சிவபாவமும் ஏற்படுகின்றன. ஜீவபாவம்தான் பசுபாவமென்பது பசுபாவத்தில் பசுக்கள் புண்ணிய பாவங்களால் கட்டுப்பட்டு இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றனர். புண்ணிய பாவங்கள் கர்மாக்களினாலும், கர்மாக்கள் பேத புத்தியினாலும் ஏற்படுகின்றன. பேத புத்தி ஒழிய வேண்டுமாயின் வீரபாவத்தைப் பெற்றால் குண்டலினி பிரபோதம் ஏற்பட்டு திவ்ய பாவம் அடையப்படும். திவ்யபாவம் தான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முக்திஸ்திதி மேட்சம்தான் பரமபுருஷார்த்தம். இதற்கு சாதனம் தர்மம். தர்மாசரணைக்கு அந்த கர்மங்கள் சககாரிகள், ஆதலின் தர்ம அர்த்த காமங்களும் புருஷார்த்தம் எனப்படுகின்றன.

எல்லாவித சாதனங்களாலும் அடையப்படும் சித்திக்கு மோக்ஷம் என்று பெயர். ஜீவர்கள் இக்கலியுகத்தில் யுகதர்மத்தினால் பல துர்க் குணங்களோடு விளங்கினால் பரமேஸ்வரனால் அருளப்பட்ட தந்திர சாஸ்திரத்தைப் பெரியோர்பால் சிரவணம் செய்து அதில் கூறப்பட்டுள்ள எல்லா விஷயங்களையும் நன்குணர்ந்து தீக்ஷையைப் பெற்று ஸ்தூல, சூட்சும, காரண சரீரங்களிலுள்ள ஆணவம். மாயை, கார்மிகம் என்னும் மும்மலங்களை ஆத்ம ஞானத்தால் ஒழித்து அந்தர்யாகம், பகிர்யாகம் முதலிய சாதனைகளால் தத்துவ ஞானத்தை ஸ்திரப்படுத்தி பரம புருஷார்த்தமாகிய மோட்சத்தைப் பெற்று . அழிவற்ற ஆனந்த சுவரூபமாகவே விளங்குவார்கள்.

சிதானந்தர் பிராத்தனை

சாந்தஸ்வரூபம் சர்வக்ஞம் சர்வ சாஸ்திரார்த்த விக்ரஹம் 1
ஸ்ரீ சிதானந்த நாதம் தம் வந்தேஹம் ஸம்விதம் ஹ்ருதி 11

("ரகு வம்சதா'' மெட்டு)

ராகம் : கதன குதூகலம். தாளம் : ஆதி

பல்லவி

சிதானந்த நாதம் பஜரே ஸ்ரீ குரும்
பஜரே ஸததம் பஜரே மஹாந்தம் (சிதா)

அனுபல்லவி

அத்வைதாமிர்தம் வர்ஷிணம் ஸததம்
அந்தராத்ம வித்யா ப்ரபோதம் ஸத்குரும் (சிதா)

சரணம்

சாந்தஸ்வரூபம் சச்சின்மயம் தம்
சர்வசாக்ஷி பூதம் சாஸ்திர பிரபன்னம்
கருணாரஸம் தம் காவிய சக்தி பூதம்
த்ரிகுண ரஹிதம் திருத சாத்மஹம் தம் (சிதா)

(இப்பிரார்த்தனையும், பாடலும் ஸ்ரீ சிதானந்த நாதரின் சிஷ்யர் ஸ்ரீ ராஜாமணி அய்யர் (ஸ்ரீ சம்வித்தானந்த நாதர்) அவர்களால் இயற்றப் பட்டது. இதை உதவியவர் ஸ்ரீ ராஜாமணி அய்யரின் மருமகள் (நாட்டுப்பெண்) ஸ்ரீமதி ராஜேஸ்வரி அம்மாள் அவர்கள்).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குரு மண்டலம் 4

ஸ்ரீ வித்யை குரு பரம்பராக் கிரமம்

மகா காமேஸ்வரர்

(சர்யானந்த நாதர்)

ஸ்ரீ பராபட்டாரிகை

உட்டீசாநந்த நாதர் (திரேதாயுகம்) — திவ்ய ஓக குரு மண்டலம்

ஷஷ்டீசானந்த நாதர் (துவாபரயுகம்) — சித்த ஓக குரு மண்டலம்

மித்ரேசாநந்த நாதர் (கலியுகம்) — மான ஓக குரு மண்டலம்

ப்ரகாசா நந்தர் விமர்சா நந்தர் ஆனந்தா நந்தர்

ஞானாநாதர் சத்யானந்தர் பூர்ணானந்தர்

ஸ்வபவானந்தர் பிரதிபானந்தர் சுபகானந்தர்

ஓகம் என்றால் சம்பிரதாயக் கிரமமான உபதேசம் எனப் பொருள். இந்த அர்த்தத்தில் குருபரம்பரையை திவ்யெளக, மானெளக, ஸித்தெளக என்று பிரிக்கலாம்.

காதி என்ற காமராஜ வித்யா பரம்பரையில்

திவ்யெளகம் என்பது பரப்பிரகாசானந்தர் முதலிய ஏழு குருநாதர்களையும், மானெளகம் என்பது ககனானந்தர் முதலிய எட்டு பராபர குருநாதர்களையும், சித்தெளகம் என்பது போகானந்தர் முதலிய நான்கு அபரக் குருநாதர்களையும் குறிக்கும்.

லோபாமுத்ரா வித்யை (ஹாதி) முதலியவைகளில் இக்குரு பரம்பரைப் பெயர் வெவ்வேறாகக் கூறப்பட்டிருப்பதை "ஞானார்ணவம்" "நித்யோத்ஸவம்" முதலிய நூல்களில் காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(திவ்யா என்றால் திக்பாலகர் முதலிய தேவர்கள்.
மானவர் என்றால் விஸ்வாமித்திரர் போன்ற பிரும்ம ரிஷிகள்
ஸித்தா என்றால் ஸனக நாரதாதி யோகிகள்).

ஸ்ரீ வித்யை உபாசனையில் அம்பிகையின் மந்திரம் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் குருநாதர் மந்திரங்களும். குரு மண்டலம் என்பது குருநாதர்களின் கூட்டம். ஆதியில் உலக சிருஷ்டி காலத்தில் ஸ்ரீ காமமேஸ்வரர் சர்யானந்த நாதர் என்ற பெயர்கொண்டு மகா குருவாக விளங்கினார். அவரே திரேதாயுகத்தில் உட்டீசநாதராகவும், துவாபரயுகத்தில் ஷஷ்டீசானந்த நாதராகவும், கலியுகத்தில் மித்ரேசானந்த நாதராகவும் விளங்கினார்.

ஸ்ரீ உட்டீசானந்தர் திரேதா யுகத்தில் ப்ரகாசானந்தர், விமர்சானந்தர், ஆனந்தானந்தர் என்று மூன்று குருநாதராக விளங்கினார்.

துவாபர யுகத்தில் ஷஷ்டீசானந்தநாதர் ஞானானந்த நாதர், சத்யானந்த நாதர், பூர்ணாநந்த நாதர் என்று மூன்று நாமங்களுடன் விளங்கினார்.

கலியுகத்தில் ஸ்ரீ மித்ரேசானந்தநாதர், ஸ்பவானந்தநாதர், பிரதிபானந்த நாதர், ஸுபகானந்தர் என்ற மூன்று நாமங்களைப் பெற்றார்.

இவ்விதம் திரேதாயுகம் முதல் கலியுகம்வரை தோன்றிய (3 X 3) ஒன்பது நாதர்களே "நவ நாதர்"களாக ஸ்ரீ தேவியின் அஷ்டாங்க கணனத்தில் முறையே ஒன்பது தினங்கள் கொண்ட ஒரு வாரத்தில் ஒவ்வொரு கிழமையின் பெயர்களாக விளங்குகின்றனர்.

குரு மண்டல நாதர்கள்

ஸ்ரீ சரியானந்த நாதர்
ஸ்ரீ உட்டீசானந்த நாதர்
ஸ்ரீ பிரகாசானந்த நாதர்
ஸ்ரீ விமர்சானந்த நாதர்
ஸ்ரீ ஆனந்தானந்த நாதர்
ஸ்ரீ ஷஷ்டீசானந்த நாதர்
ஸ்ரீ ஞானானந்த நாதர்
ஸ்ரீ ஸத்யானந்த நாதர்
ஸ்ரீ பூர்ணானந்த நாதர்
ஸ்ரீ மித்ரேசானந்த நாதர்
ஸ்ரீ ஸ்வபாவானந்த நாதர்
ஸ்ரீ பிரதிபானந்த நாதர்
ஸ்ரீ ஸுபசானந்த நாதர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரமேஷ்டி குரு (திவ்யௌகம்)

(சிவதத்துவம்)

ஸ்ரீ பரப்பிரகாசானந்த நாதர்
ஸ்ரீ பரசிவானந்த நாதர்
ஸ்ரீமதி பராசக்த்யம்பா
ஸ்ரீ கௌலேச்வரானந்த நாதர்
ஸ்ரீமதி சுக்லா தேவியம்பா
ஸ்ரீ குலேச்வரானந்த நாதர்
ஸ்ரீமதி காமேச்வரியம்பா

பரமகுரு (ஸித்தௌகம்)

(வித்யா தத்துவம்)

ஸ்ரீ யோகானந்த நாதர்
ஸ்ரீ க்லின்னானந்த நாதர்
ஸ்ரீ ஸமயானந்த நாதர்
ஸ்ரீ ஸகஜானந்த நாதர்

ஸ்வ குரு (மானவௌகம்)

(ஆத்ம தத்துவம்)

ஸ்ரீ ககனானந்த நாதர்
ஸ்ரீ விச்வானந்த நாதர்
ஸ்ரீ விமலானந்த நாதர்
ஸ்ரீ மதனானந்த நாதர்
ஸ்ரீ புவனானந்த நாதர்
ஸ்ரீமதி லீலாம்பா நாதர்
ஸ்ரீ ஸ்வாத்மானந்த நாதர்
ஸ்ரீ ப்ரியானந்த நாதர் (இதன்பின்)

ஸ்வகுரு (அவரவர்களின் குரு), பரமகுரு, பரமேஷ்டிகுரு

ஸ்வகுரு:- இவருடைய உபதேசத்தால் (ஸ்வரூப நிருபணம்) சாதகன் தான் உண்மையில் யார் என்று அறிகிறான். உமி நீங்கின நெல் அரிசியாவது போல மாயை விலகி தான் ஜீவன் அல்ல என்றும்தான் பிரும்மமே என்றறிகிறான்.

பரமகுரு:- (ஸ்வச்சப் பிரகாச விமர்சம்) சாதகன்தான் பிரும்மம் தானோ என்று தன்னை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கான அறிவை தருகிறவர் பரமகுரு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரமமேஷ்டி குரு:- (ஸ்வாத்மா ராம பஞ்ஜர விலின தேஜஸே)

சாதகன் தான் பிரும்ம ஸ்வரூபம் என்றும் கூட்டின் அடைபட்ட கிளிபோல் தன் சரீரமாகிய கூட்டில் பிரும்மமாகிற கிளி இருப்பது தெரிந்து ஜீவன் முக்தனாக ஆக அருள்பவர் பரமேஷ்டி குரு. இந்த பக்குவ மடைந்த சாதகனை வாழ்க்கையில் பற்று இருந்தும் இல்லாதவனாகவும் தான் செய்யும் காரியங்களை நல்ல முறையிலேயே செய்யவும் புண்ணிய கர்மாக்களை பிரும்மார்ப்பணம் செய்து முக்தியை அடைய வழி செய்கிறார்.

சாதகனின் குரு (ஸ்வ குரு) மானலெளகத்தில் ஸ்தானம் பெறுகிறார். சாதகனின் (பரம குரு) ஸித்தெளகத்திலும் (பரமேஷ்டி குரு) திவ்யெளஹத்திலும் முறையே இடம் பெறுகின்றனர்.

சாதகனே குருவாகும்போது அவனது பரமேஷ்டி குரு திவ்யெள கத்திலிருந்து விலகி காமேஸ்வரி காமேஸ்வர ஸ்தானமாகிய பிந்துவின் இடம் பெற்று சச்சிதானந்த ரூபமடைகிறார்.

ஸ்ரீ லலிதா சகஸ்ர நாமம் இயற்றிய வசின்யாதி வாக் தேவதைகள் ஸ்ரீ சக்ரத்திலுள்ள பிந்து திரிகோணத்திற்கு வெளியிலுள்ள அஷ்ட கோணங்களில் உள்ளவர்கள் சிவசக்தி சாமரஸ்ய அதிரகஸ்ய விஷயங்களை அம்பிகையை பிரார்த்தித்து அறிந்தவர்கள். பிந்து த்ரிகோணத்திற்கு மேலேயுள்ள "ஓகத்ரய" குருநாதர்கள் மேற்கண்ட ரகஸ்ய விஷயங்களை சிவசக்திக்கும் தங்களுக்கும் பேதமற்றவர்களாக கண்கூடாக அறிந்தவர்கள். அதனால்தான் அம்பிகைக்கும் அவர்களுக்கும் எவ்விதபேதமுமில்லை.

குருநாதர்களால் பராம்பர்ய க்ரமமாக நிரூபணம் செய்யப்பட்ட ஸ்வரூபத்தை யுடையவள் அம்பிகை என்பதால் குரு மண்டல ரூபிணி என்று அம்பிகைக்குப் பெயர்.

குரு மந்திரம். தேவதை மூன்றும் ஒன்றே என்ற பாவனை செய்து உபாசிக்க வேண்டும்.

இத்தம் மாதா வித்யா சக்ரம்
ஸ்வகுரு : ஸ்வயம் சேதி
பஞ்சாநாமபி பேதா பாவோ
மந்திரஸ்ய கெளவி கார்த் தோயம்

- வரிவஸ்யா ரஹஸ்யம்

தாமிச்சா விக்ரஹாம்
தேவீம் குருபாம் விபாவயேத்

- நித்யா ஹ்ருதயம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவி உபாசனை 5

தாம்னீ ப்ரஸித்தே கரவீரநாம்ஸி
புண்யா பிதானம் க்ருத ஸந்நிதானாம்
தேவீம் பராம் பச்யதி யோ விரக்தோ முக்தே:
ஸ பாணீக்ரஹணாய சக்த:

- காவ்ய கண்ட கணபதி

(உலக வாழ்க்கையை வெறுத்து விரக்தியுடன் வந்து தரிசனம் செய்யும் பக்தனுக்கு முக்தி என்ற பெண்ணை திருமணம் செய்து வைக்கும் சக்தியுள்ளவள் அம்பிகை)

இவ்வுலகமே தேவியின் ஸ்வரூபம். அண்டத்திலுள்ளது பிண்டத்திலும் உண்டு என்பதால் அம்பிகை பிண்டமான இச்சரீரத்திலும் இருக்கிறாள். இந்த தேவியை உணர்த்துக் கொள்வதே சக்தி உபாசனை அண்டம் தேவியின் ஸ்தூல ரூபம் பிண்டமாகிய நம் உடல் ஸூக்ஷ்ம ரூபம்.

சத்வம் ரஜஸ் தமஸ்ஸாகிய இம்மூன்று குணங்களும் தத்தமது அளவிலே நிலை பெறும்போது அவ்யக்த ப்ரகிருதியாகி தேவி கலந்து உறைகிறாள்.

இவை தத்தம் முன்னே அளவில் வித்யாசப்படும்போது பிரபஞ்சமும் பஞ்ச பூத சேர்க்கையும் உண்டாகின்றன. அண்டங்களும் அவற்றுள்ளே பிண்டங்களும் உருவாகின்றன. தேவியினுள்ளே ஒடுங்கியுள்ள மூன்று குணங்களும் வெவ்வேறு அளவுகளில் பிண்டங்களில் ஒன்று கலந்து வெளிப்பட்டு கோடிக்கணக்கான யோனி பேதங்களைத் தோற்றுவிக்கின்றன.

அப்படி முக்குணங்கள் வெளிப்படும்போது ஏதாயினும் ஒரு குணம் ஒவ்வொரு சரீரத்துள்ளும் மேலோங்கி நிற்கிறது.

சத்வ குணம் மேலோங்கி நிற்கும் ஜீவன் திவ்ய பாவ ஜீவன் எனக் கூறப்படும்.

தேவி உபாசனை ஒவ்வொரு சரீரத்துள்ளும் அடங்கியுள்ள சத்வ குணத்தை மேற்கொணர்ந்து திவ்ய பாவனையை உண்டுபண்ணி, தான் வேறு தெய்வம் வேறு என்னும் மாயையை அகற்றி தேவியோடு உரண்டறக் கலந்துவிடச் செய்யும் முயற்சியேயாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புருஷ தேவதைகளை தேவன் என்றும் ஸ்திரீ தேவதைகளை தேவி என்றும் குறிப்பிடுவது மரபு. கடபயாதி சங்யைப்படி தேவ தேவி இரண்டுக்கும் எண்கள் 48-ஜீவ: என்றாலும் 48 தான். தேவ தேவி என்றால் ஸ்வயம் பிரகாசமாக விளங்குபவள் என்று அர்த்தம்.

தேவி, ஜீவன் இவ்விரண்டு சப்தங்களும் 48-என்ற எண்ணாக அமைந்திருப்பதின் பொருள் தேவியை தனக்கு அபேதமாக உபாசனை செய்யும் ஜீவன் தானும் தேவியாக ஆகிவிடுகிறான் என்பதேயாகும்.

உபாசனா மார்க்கங்கள்

இந்த அம்பிகையை அடைய பலவித உபாயங்கள் உள்ளன.

1. பக்தியால் உபாசனை.
2. பூஜை அர்ச்சனை, பரா, அபரா, பராபரா.
3. தியானம், ஜபம்.
4. ஹோமம்.
5. பாவனா உபாசனை.

பக்தியால் உபாசனை

இதற்கு வரம்பு, கால தேச வர்த்தமானம் எதுவும் கிடையாது. பக்தி-முக்யம், கௌணம் என இருவகை. முக்யபக்தி என்பது இறைவனிடம் காந்த சக்தியால் இழுக்கப்படுவதுபோல பக்தி செலுத்துவது (உதாரணம் கண்ணப்பரின் பக்தி) மனம் தானாகவே பகவானிடம் இழுக்கப்படவேண்டும்.

கௌணம் என்பது சாதாரண பக்தி இது ஸ்வரணம், கீர்த்தனம் முதலியவை எட்டுவிதம் என்று கருட புராணத்திலும் ஒன்பது விதம் என்று பாகவதத்திலும், பத்துவிதம் என்று பிரகன்னாதீயத்திலும் கூறப்படுகிறது.

பக்தி வழியே சென்றால் அடையக்கூடியவள் அம்பிகை. ஆகவே அவளுக்கு "பக்திகம்யா" என்று ஒரு பெயர்.

மூன்று வித பூஜைகள்

பூஜையில் மூன்று வகை. 1. அன்பினால், 2. அறிவினால், 3. இன்பத்தினால்.

வேதம், ஸ்தோத்திரம் சொல்லி வழிபடுவது அன்பு பூஜை.

மந்திரங்களைச் சொல்லி மலர் போட்டு அர்ச்சிப்பது அறிவு பூஜை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பஞ்சாக்ஷரம், பஞ்சதசாக்ஷரீ போன்ற மந்திரங்களை அகத்தில் தியானித்து ஜபித்தல் இன்ப பூஜை.

இந்த நடுவிலுள்ள அர்ச்சனை, முன்னதற்கு வழியாகவும் பின்னதற்கு முதலாவதாகவும் நிற்கும். இந்த அர்ச்சனையை தமிழில் சொல்வதற் கென்றே போற்றித் திருத்தாண்டணம் ஐந்தும், திருவாசகத்தில் போற்றித் திருவகல் ஒன்றும் "தரிக்கிலேன் காய வாழ்க்கை" என்று தொடங்கும் திருப்பதிகமும் அமைந்திருக்கின்றன.

இந்த மூன்றுவித வழிபாட்டினையும் முறையே "பக்தராய்ப் பணிதல்" "பரமனையே பாடுதல்" "சித்தத்தை சிவன்பால் வைத்தல்" என்று கூறுகிறார்கள்.

பொய்யாத வாய்மையாற் பொடிபூசிப்
போற்றிசைத்துப் பூஜை செய்து
கையினாலெரியோம்பி மறைவளர்க்கும்
அந்தணர் தங்கருப்பறியலூர்க்

கொய்யுலா மலர் சோலைக் குயில்கூவ
மயிலாடும் கொகுடிக் கோவில்
ஐயனை என் மனத்தினானினைந்த
போதவர் நமக் கிளியவாரே.

திரு ஐந்தெழுத்தை அன்புடன் ஓதி திரு வெண்ணீரைப்பூசி வேள்வி புரியும் அந்தணர்கள் போற்றி என்று இறைவனை அர்ச்சிக்கும் ஊர் திருப்பறியலூராகும்.

இதில் வரும் "போற்றி" அருந்தமிழ்ச்சொல் "காத்தருள்க" எனப் பொருள்தரும். இந்த போற்றி என்பதே ஒரு மந்திரம். இந்த மந்திரம் ஓதி சிவனை வழிபடவேண்டும் என்பதைக் கூறும் பாடல்.

செழுந்தண் மால்வரை யெடுத்த செருவலி யிராவணனமற
அழுந்த ஊன்றிய விரலான் போற்றிக்யென் பார்க்கல்ல அருளான்
கொழுங்கனி சுமந்துந்திக் குளிர்புனல் நிலாமல்கு கரைமேல்
அழுந்துஞ்சோலை நெல்வாயிலரைத்துறை யடிகடம் அருளே.

போற்றி என்று சொல்லி வழிபடாதவற்கு சிவபெருமான் திருவருள் கிடைக்காது என்கிறது இப்பாடல். ராவணன் இப்போற்றி மூலமே சிவபெருமானின் கருணையைப் பெற்றான்.

போற்றி மறையுகன்று பூஜைசெய்து வாழ்வெய்த
சாற்றுவதே செந்நெறியின் சால்பு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாம அர்ச்சனை

ஆலயங்களில் வழிபடும் கடவுளையும், வழிபாடு செய்கின்ற மனிதனையும் வலுவாக பிணைக்கும் சாதானமாக இருப்பது அர்ச்சனை. அர்ச்சனை என்பது பொதுவாக ஆண்டவனை வழிபட வழங்கும் ஒரு சம்ஸ்கிருத சொல்.

அமைதியாக தியானம் செய்யவோ அல்லது மனதை ஒரு நிலைப் படுத்தி நிறுத்தவோ மனிதன் கோவிலுக்குப் போவதில்லை. இதை வீட்டிலேயே செய்யலாம். தன்னைப்போன்ற ஓர் உருவத்தில் ஆண்டவனை இனம் கண்டு கொள்ளவும் ஆறுதலும் அமைதியும் பெறவும் மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்தியால், தன் துன்பங்கள் நீங்க ஒரு வழி பிறக்காதா என்று கோவிலுக்குப் போகிறான். அவன் எதிர்பார்ப்பது தெய்வ அருள் தன் அன்றாட வாழ்க்கையில் ஏற்பட வேண்டும். அவன் அருபமான தெய்வத்தை நினைக்கவும் பக்குவ மில்லாதவன்.

மனிதன் ஒருவனுடைய பெயரைச் சொல்லி அழைத்தால் அவன் திரும்பிப் பார்ப்பது போல அவன் விரும்பும் தெய்வமும் அதன் பெயரைக் கேட்கும்போது திரும்பிப் பார்க்கிறது. இப்படி பல பெயர்களை (108-அல்லது 10008) சொல்லி அழைக்கும்போது ஒவ்வொரு பெயரையும் "ஓம்" என்ற மந்திர ஒலியுடன் இணைந்து வழங்கப் படுகிறது. இந்த மந்திரச் சொல்லை முதலில் சமஸ்கிருத மொழியாளர்கள் சேர்த்துக் கொண்டார்கள். இந்த ஓம் இன்னொரு மொழியுடன் சேர்த்து சொல்ல முடியாது என்பதில்லை. இந்த "ஓம்" என்ற அக்ஷரம் வெறும் ஒலிக் குறிப்பு உலகின் எல்லா மொழிகளுக்கும் சொந்தமானது. உலகமொழிகள் தோன்றுவதற்கு முன்பே தோன்றிய ஒலி. உலக மொழிகள் அனைத்தும் தோன்றுவதற்கு மூல காரணமானது என்றும் சொல்லலாம்.

இறைவன் பெயருக்கு முன்னால் "ஓம்" என்றும் பின்னர் "நம:" என்றும் அமைத்துக்கொண்டார்கள். நம: என்பது வெறும் வாழ்த் தொலியோ அல்லது அஞ்சலியோ அல்ல. தன்னை முழுமையாக தன்னை மீறிய அந்தப்பெரும் சக்தியுடன் அர்ப்பணித்து ஒப்படைத்து கொள்வது என்று பொருள். தன் தெய்வத்தினிடம் பரிபூரணமாக சரணாகதியடைந்து அதனோடு ஒன்றி விடுவது "நம:" என்பதின் கருத்து. "சரணாகதி" என்பது அனுகூலமானதையே எண்ணுவது, பிரதிகூலமானதை விடுவது, பரதேவதை ரக்ஷிப்பாள் என்பதை நம்புவது நீயே ரக்ஷி என்று பிரார்த்திப்பது தன்னை அர்ப்பணம் செய்வது தன் ஏழ்மையைக் காட்டுவது என ஆறுவகை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதில் ஆத்மாவை சமர்பப்ணம் செயவ்தே முக்கியமானது. இதற்கு மற்ற ஐந்தும் அங்கங்கள். தண்ணீர் உயர்ந்த மட்டத்திலிருந்து கீழ்மட்டத்திற்குப் பாய்வது போல திருவருட் கருணையும் இறைவனிடமிருந்து வழிபடுகிற பக்தனை அணுகி அந்த அருட் பிரவாகத்தில் அதில் மூழ்குகிறான். அச்சூழ் நிலையே இறைவன் திருநாமங்களில் ஒலி அலைகளால் சக்தி பெறுகிறது. இறைவனே தன்முன் சாந்நித்யம் பெற்று காட்சி தருவதுபோலவும் தன் பிரார்த்தனை ஈடேறியது போலவும் அவன் உணர்கிறான்.

ஆகம சாஸ்திரம் இந்த அர்ச்சனை முறைக்கு வழி வகுத்திருக்கிறது. பக்தனுக்கு அர்ச்சனை தெரியவேண்டியதில்லை. அதன் பொருளும் தெரியவேண்டாம். ஆகம சாஸ்திரங்களைப் பற்றி அவன் அறிந்திருக்க வேண்டியதும் இல்லை. அவனுக்கு அர்ச்சனையில் நம்பிக்கை இருக்க வேண்டியது ஒன்றுதான் முக்கியம். அவன் தன் சார்பாக அர்ச்சனை செய்யும்படி அர்ச்சகனைக் கேட்டுக்கொண்டால் போதும். அர்ச்சகர் ஆகம சாஸ்திரங்களைக் கற்று விஷயம் தெரிந்தவராக இருப்பர். எல்லாரும் அர்ச்சகராகி விட முடியாது. தெய்வத்திற்கும் வழிபடுபவனுக்குமிடையே தொடர்பு ஏற்படுத்திக் கொள்பவர் எப்பேர்ப்பட்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும் என்று நம் சாஸ்திரங்கள் விதித்திருக்கின்றன.

ஆலயம் என்பது மகத்தான அருள் சக்தியின் இருப்பிடம் அமானுஷ்யமான தெய்வீக சக்தியைத் தோற்றுவிக்கும் இடம் விஷயம் தெரியாத சாதா பக்தனுக்கு இந்த சக்திகளைப் பற்றி தெரிந்துக் கொள்ளத் திறமையில்லை. ஆகவே அர்ச்சகர் ஒரு பெரும் பொறுப்பை ஏற்று நடத்துகிறார். அர்ச்சனை என்றால் தாங்கள் வழிபடும் மூர்த்தி வழிபாட்டில் அனுபூதிமான்கள் தாம் கண்ட அனுபவங்களிலிருந்து வெளிப்படுத்திய உணர்வு வெளிப்பாடுதான். ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒவ்வொரு விதமான அசைவுகள் இருக்கின்றன. நாதம் என்பது தெய்வீகமானது. அனுபூதிமான்கள் அந்த அலைவரிசைக்கு ஏற்பத் தங்கள் உள்ளுணர்வுகளைத் திருப்பி வைத்து வெளியில் மற்றவர்களுக்கு எட்டாத ஒலிக்குறிப்புகளைக் கேட்டு அப்படியே அதன் ஒலி நயங்களோடு அவருக்குத் தெரிந்த மொழியில் வெளிப்படுத்துகிறார். அதுவே மந்திரம் எனப்படுகிறது. ஒவ்வொரு நாமமும் அதனளவில் ஒரு மந்திரமே. கடவுள் தன்மையில் குறிப்பிட்ட ஓர் இடத்தை அது எழுப்பிச் செயல்பட வைக்கிறது.

ஒவ்வொரு தெய்வத்திற்கும் இந்த மந்திரம் என்று நம் முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதை மாற்ற யாருக்குமே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உரிமை இல்லை. அந்த மந்திரங்களைச் சொல்லி அர்ச்சனை செய்வதன் மூலம் சக்தியும் சாந்நித்யமும் ஏற்படுகின்றன. அந்த மகான்கள் வாயிலிருந்து வெளிப்பட்ட மந்திரங்கள் இருக்கின்றன. அவ்வளவுதான்.

இத்தகைய உள்ளுணர்வு பெற்ற அனுபூதிமான்கள் மந்திரங்கள் ஏன் தமிழில் இருக்கக் கூடாது? நக்கீரர், குமரகுருபரர், திருமூலர், நாயன்மார்கள், ஆழ்வார்கள், அருணகிரிநாதர் இவர்கள் எல்லோரும் அனுபூதிமான்களே. இவர்கள் தாங்கள் கண்டறிந்த உண்மைகளைத் தமிழிலே வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அவை எல்லாம் வேதப் பொருள்களை விளக்குக்கின்றன. தேவாரம், திவ்ய பிரபந்தம் எல்லாம் ஆலய வழிபாட்டில் சேர்க்கப்பட்டுள்ளன. இவை ஸ்தோத்திரப் பாடல்காளாக விளங்குகின்றனவே யொழிய அர்ச்சனை ரூபமாக இல்லை. ஆகவே அர்ச்சனையை சம்ஸ்கிருதத்திலும் வேத பாரணயத் துடன் தேவாரம் திவ்ய பிரபந்தம் ஓதுவது இவை கூடவே வைத்துக் கொள்ளப்பட்டன.

மாணிக்கவாசகர் "நமசிவாய வாழ்க" என்றே தன் திருவாசகத்தைத் தொடங்குகிறார். "நமசிவாய" என்பதை அவர் தமிழ் படுத்தாமல் அப்படியே உபயோகித்ததற்குக் காரணம் அது ஒரு மந்திரம் என்பதே, அதேபோல் ஆழ்வார்களும் "ஓம் நமோ நாராயணா" மந்திரத்தை தமிழ் படுத்தாமல் அப்படியே உபயோகித்திருக்கின்றார்கள். வைஷ்ணவர்களின் தத்துவம் உபய வேதாந்தம் என்ற இரு மொழிகளையும் கொண்டது. சம்ஸ்கிருதத்தையும் தமிழையும் அவர்கள் பக்கத்தில் வழங்குகிறார்கள்.

ஆகவே ஆலயங்களில் அர்ச்சனையை தமிழில் செய்தால் ஒரு கெடுதலும் இல்லை. ஆனால் அந்த அர்ச்சனைகள் அனுபூதிமான்கள் வாய்மொழியாகத் தொடுக்கப் பட்டிருக்கவேண்டும். (பிரார்த்தனை வேறு அர்ச்சனை வேறு என்பது புரிந்தால் இது நன்கு தெளிவாகும்). அப்படி இல்லாமல் சம்ஸ்கிருதத்தில் உள்ள அர்ச்சனையை தமிழ் படுத்தி உபயோகித்தால் தமிழனின் மொழி பெயர்ப்புகள் வேண்டுமானால் வளப்பமடையலாம். ஆனால் வழிபாடு செய்கிறவனுக்கு தெய்வானுக்கிரகம் சேருமா என்பது சந்தேகம்தான். பூஜாமுறைகளை வேறொரு விதமாக பரா, அபரா, பராபரா என்றும் பிரித்திருக்கிறார்கள்.

பராபூஜை: அம்பிகையே பிரும்மம். எதைச் செய்தாலும் அது பிரும்மார்ப்பணம் நடத்தல், உண்ணல், படுத்தல், பேசுதல் எல்லாமே அம்பிகைக்கு செய்யும் பூஜை. ஆதிசங்கரர் தன் சௌந்தரிய லகரியில் (27-வது) "ஜபோ ஜல்ப" என்று ஆரம்பமாகும் சுலோகத்திலும் "மநஸ்தே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாதாப்ஜே" (7-வது) என்று ஆரம்பமாகும் சிவானந்தலகரி ஸ்லோகத்திலும் இந்த பரா பூஜையை விளக்கியிருக்கிறார். பாவனா பூஜையும் இதில் சேர்ந்ததே.

அபராபூஜை: இதற்கு முடியாதவர்கள் ஸ்ரீ சக்கிரத்தைக் கொண்டு அதில் அம்பிகையை தியானித்து வழிபடுபவர். இதை மிச்ரம் என்பர்.

பரா அபரா பூஜை: மந்திரோபாஸனை கலச ஸ்தாபனம், விசேஷார்க்கியம், அங்கந்நியாஸம் கரந்நியாஸம், ''முத்திரைகள் இவைகளுடன் கூடிய பூஜை இது பாஹ்ய பூஜை.

அம்பிகையை அந்தர் முகமாக வழிபடுவது யோக மார்க்கம் இதுவே குண்டலினியோகம் * இது ஸமயாசாரம் அம்பிகை இத்தகைய வழிபாட்டை விரும்புகிறாள் இதனால் அவளுக்கு "சமயா சார தத்பரா" என்று ஒரு பெயர். மூலாதாரத்திலுள்ள சக்தியை யோக சாதனையால் சகஸ்ராரத்திலுள்ள (தலைஉச்சி) சிவத்தினிடம் கொண்டு சேர்த்து லயிக்கச் செய்வது. இதற்கு தியானமும் பிராணாயாமமும் மிக முக்கியம்.

மூக்கு நுனியையே பார்த்து தியானம் இருப்பது சிறந்தது. அடியோடு கண்ணை மூடிக்கொண்டும் கண்ணை திறந்துக்கொண்டும் தியானத்தின் போது இருக்கக்கூடாது. கண்ணை மூடி விட்டால் தூக்கம் வரும். கண்களை இமை கொட்டாமல் இருந்தால் தண்ணீர் வரும். அடிக்கடி மூடித்திறந்தால் எதிரிலுள்ள விஷயங்கள் கண்ணில்பட்டு சமாதியைக் கலைக்கும். மூக்கு நுனியைப்பார்க்கும் அளவில் கண்கள் மூடியிருந்தால் இத்தொல்லைகள் இல்லை.

கண் பார்வையை மூக்கின் நுனியில் லயிக்கச் செய்தால் சில நிமிஷங்களில் மனம் ஒருமைப்படும். இல்லறத்தார்கள் மான் தோலில் அமர்ந்து மூக்கு நுனியில் பார்வை செலுத்துவதற்கு "சாம்பவி" முத்திரை என்றும், துறவிகள் புலித்தோலில் அமர்ந்து மூக்கு நுனியில் பார்வை நிறுத்துவதற்கு "கேசரி முத்திரை'' என்றும் சொல்லப்படுகிறது.

அக்னி மூலம் அம்பிகை வழிபாடு

அம்பிகையை வழிபடுவதில் எவ்வளவோ முறைகள் இருக்கின்றன. தியானிக்கலாம், பல தேவிகளின் மூலமந்திரங்களை ஜபம் செய்யலாம் பாராயணம் செய்யலாம். நவாவரண பூஜை செய்யலாம், மானஸீக பூஜை செய்யலாம். ஹோமம் வேள்விகள் மூலமும் வழிபடலாம்.

* ''குண்டலினி சக்தி'' என்ற பிரதிபா நூலில் இவ்விவரம் விளக்கப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேள்விகள் மூலம் தேவர்கள் திருப்தியடைகின்றனர். அதனால் அவர்கள் மழை பெய்யச் செய்கின்றனர். மழை காரணமாக நீர் வளம் நிலவளம் பெருகி மக்கள் சுபிட்சமடைகின்றனர். இச்சக்கிரம் சதா சுழன்றுக்கொண்டே இருக்க வேண்டும். என்று பகவத்கீதையில் கிருஷ்ண பரமாத்மா குறிப்பிட்டிருக்கிறார்.

ஹையக்ஞா: ப்ரஜா: ஸ்ருஷ்ட்வா புரோவாச ப்ரஜாபதி: I
அனேன ப்ரஸ விஷ்யத்வ மேஷவோ ஸத்விஷ்ட காமதுக் II

பிரும்மா சிருஷ்டித் தொழிலை ஆரம்பித்தபோது பிரஜைகளுடன் எக்ஞத்தையும் படைத்து, "இதனால் விருத்தியடையுங்கள் இது உங்கள் காமதேனுவாக இருக்கட்டும்" என்றார். முறையோடு செயல் புரிவது கர்மம் அக்கர்மமே யக்ஞமுமாம் அவரவர் ஒழுங்காக அவரவர் கடமைகளை செய்து வந்தாலே மழை பெய்யும் உணவு உண்டாகும் உயிர்கள் வாழும்.

இந்த ஹோமம் வேள்விகள் தனிப்பட்டவர்களால் செய்ய முடியாது. பொது முயற்சியில் செய்யப்படுவதை ஒவ்வொருவரும் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். ஹோமம் என்பதை தினமும் அக்னியில் சாஸ்திர முறைப்படிச் செய்யலாம். இது ஸ்தூல ஹோமம்.

உபாசகன் தன் சரீரத்தில் மூலாதாரத்திலுள்ள குண்டலினி அக்னியில் மந்திரத்தை சொல்லி பாவனாரூபமாக ஹோமம் செய்யலாம். இது சூக்ஷ்ம ஹோமம்.

ஆதிசங்கரர் விளக்கியுள்ள ஆத்ம தத்துவத்தை பரோக்ஷகமாவது திடமாக அறிந்தவன் மூல மந்திரத்திற்கு முன்னும் பின்னும் "சிவோஹம்" என்ற பாவனையுடன் ஆத்மாரூபமான சிதக்னியில் ஹோமம் செய்யலாம். இது பரஹோமம் ஸ்தூல ஹோமத்திற்கு பலரும் அதிகாரிகளாவர் பரஹோமத்திற்கு அதிகாரிகள் ஒரு சிலரே.

பாவனையால் உபாஸனை

இந்த வழியை பாவனோபநிஷத் கூறுகிறது.

"பாவநாகம்யா" என்பது அம்பிகைக்கு ஒரு பெயர் பாவனா பூஜையில் மகிழ்ச்சி அடைபவள் என்று அர்த்தம்.

பாவனை சப்தத்தைப் பற்றியது. அர்த்தத்தைப் பற்றியது என இரண்டுவிதம். சப்த சம்பந்தமான பாவனை குருவினுடைய உபதேசப் பிரகாரம் மந்திரங்களால் உபாசிப்பது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அர்த்த சம்பந்த பாவனை ப்ரவிருத்தி அதனுடைய அர்த்தத்தை அனுஷ்டானம் செய்வதைப் பொறுத்தது. இது பற்றி பாஸ்கரராயரின் "வாத கௌதூகலம்" குறிப்பிடுகிறது. திடமான பாவனையால் அம்பிகையின் சாக்ஷாத்காரம் ஏற்படும்.

மானஸ பூஜை

மானஸீகமாக பாவனா முறையில் பூஜை செய்வதே எல்லா பூஜைகளைவிட சிறந்தது. நிர்க்குண மானஸ பூஜையை எப்படி செய்வது என்று ஆதிசங்கரர் கூறுவதை கேட்போம்.

மாயையால் அமைக்கப்பட்டது இந்த உடல் என்னும் நகரம். அதில் ஹிருதயம் என்னும் ஆலயத்தில் ஜீவன் என்னும் இறைவன் இருக்கிறான்.

சிரத்தை என்னும் நதி ஜலத்திலிருந்து நிர்மலமான மனம் என்ற ஜலத்தால் அபிஷேகம் செய்து சமாதி என்ற புஷ்பங்களால் பூஜித்தால் ஜனனம் மரணம் அகலும்.

நான் ஒருவனே மிகுதியானவன் என்று இறைவனை ஆவாஹனம் செய்து ஆத்ம ஸ்வரூபத்தில் ஜீவன் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளான் என்றும் ஆசனம் அளிக்கவும்.

புண்ணிய பாவம் இரண்டு மில்லாதவன் ஆத்மா என்ற நினைவை பாத்யமாக அளி. அநாதியாய் உள்ள மூல அக்ஞானமான ஜலத்தை அர்க்கியமாக விடு. பிரும்மானந்த ஜலத்தில் உலகமெல்லாம் மூழ்கி இருக்கிறது. அந்த ஜலத்தில் துளியை ஆசனமாக அளி.

ஆவரணமில்லாத சுத்த சைதன்யம் நான் ஸ்வப்பிரகாசன் என்ற வஸ்திரம் அளி. மூன்று குணங்களால் உண்டாகும் விருத்திகளை விடுவது என்று சந்தனம் குங்குமமிட்டு அக்ஷதைபோடு. ஈஸ்வரன், குரு, நான் இம்மூன்றும் ஒன்றே என்ற வில்வ தளத்தைப்போடு, சமஸ்த வாசனைகளையும் விடுவது என்ற தூபத்தைக் காட்டு.

பிருமாண்ட மெல்லாம் பரமாத்மாவுக்கு அன்னம், ஆனந்த ரஸமே ருசியான தீர்த்தம், யமன் அவருக்கு ஊறுகாய் என்ற ஞானத்தை நிவேதனம் செய்.

அக்ஞானம் என்ற இருளை அகற்றுவது ஆத்ம ஞானம் என்ற சூரியன் என்ற கற்பூர ஹாரத்தி செய், பூரணானந்தன் ஆத்மா என்ற புஷ்பாஞ்சலி செய்:

(வேதாந்த கல்பத்தில் கூறப்பட்ட ஆத்ம பூஜை இது).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ சக்ரத்தில் * வழிபாடு 6



சக்ரத்தில் பிந்துவில் பிரதான தேவதையைப் பூஜிக்க வேண்டும். முறைப்படி சக்ர பூஜை செய்யும் உபாசகனுக்கு அவன் விரும்பிய தெல்லாம் எளிதில் கிட்டுகின்றன.

ஸ்ரீ வித்யா உபாஸனா மார்க்கத்தில் ஸ்ரீ சக்ர பூஜை (மேரு) வெகு வெகு முக்கியமானது. சக்கரங்கள் எல்லாம் கொடுகளாலான வெறும் சித்திரங்கள் எனக் கருதலாகாது. அவைகள் தேவதைகளின் ஆலயங்கள் சக்ரங்களை தாமிரத் தகட்டிலோ, வெள்ளித் தட்டிலோ, பஞ்சலோகத் தகட்டிலோ வரைந்து பூஜை செய்வது சம்பிரதாயமாகும் ஸ்ரீசக்ரம் வீட்டில் இருப்பதே ரக்ஷை.

இந்த யந்திரத்தையே தன் உடலில் உருவகப்படுத்திக் கொள்கிறான் உபாசகன். உடம்பின் ஒவ்வொரு உறுப்பையும் சக்தி அம்சம் கொண்ட கோவிலாகக் கொண்டு பரம்பொருளான சக்திக்கு ஆத்ம பூஜை செய்கிறாள். கடைசியில் சக்தியோடு இரண்டறக் கலந்து விடுகிறான்.

---

* இது விஷயமாக முழு விவரங்களை "ஸ்ரீ சக்ர நாயகிகள்" என்ற "பிரதிபா பிரசுரத்"தில் காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ சக்ரம் என்கிற ரகசியமான மாளிகையில் சக்தி உறைகிறாள் என்கிறது செளந்தரிய லஹரி.

ஸ்ரீ சக்ரத்திலுள்ள ஆத்மிக சக்திகள் விவரம்:

தேவியின் இருதயம்	-	பரா
தேவியின் புத்தி	-	சியாமளா
தேவியின் அகங்காரம்	-	வாராஹி
தேவியின் புன்சிரிப்பு	-	கணபதி
தேவியின் ஆறுஆதாரங்கள்	-	ஷடாம்னாய தேவதைகள்
தேவியின் விளையாட்டு	-	பாலை
தேவியின் அங்குசம்	-	சம்பத்கரி
தேவியின் பாசம்	-	அச்வாரூடா
தேவியின் இடுப்பு	-	நகுலி.

ஸ்ரீ சக்ரத்திலுள்ள ஒன்பது ஆவரணங்களுமே அம்பிகையின் திருமேனியாக பாவிக்கப்படுகிறது. ஸ்ரீ சக்கரத்தை மேரு வடிவில் பூஜிப்பது இன்னும் விசேஷமாகும்.

தகட்டில் ஊர்தவ ரேகையாகவோ (Embossed) அல்லது அதோ ரேகையாகவோ (Engraved) வரையலாம். ஊர்த்வ ரேகையே விசேஷம், சாதாரணத் தகட்டில் வழிபடும்போதும் மேருவாக பாவிப்பதே விசேஷம்.

ஸ்ரீ சக்ரம் ஒன்பது ஆவரணங்களை உடையது. அவையாவன. 1. திரைலோக்ய மோஹனம், 2. ஸர்வாசா பரிபூரகம், 3. ஸர்வ ஸம்க்ஷோபணம், 4. ஸர்வ ஸௌபாக்யதாயகம், 5. ஸர்வார்த்த ஸாதகம், 6. ஸர்வ ரக்ஷாகரம், 7. ஸர்வ ரோகஹரம், 8. ஸர்வ ஸித்திப்ரதம், 9. ஸர்வானந்தமயம்.

திரைலோக்ய மோஹனம் என்ற ஆவரணத்தை திரைலோக்ய மோஹன சக்ரம் என்றும் கூறுவதுண்டு இங்ஙனமே மற்ற எட்டு ஆவரணங்களையும் "சக்ரம்" என்ற பெயரால் குறிப்பிடுவார்கள். ஆனால் இந்த ஒன்பது ஆவரணங்கள் அல்லது சக்ரங்கள் சேர்ந்து ஸ்ரீ சக்ரமா கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. ஸர்வானந்த மயசக்ரம் என்ற ஒன்பதாவது ஆவரணம் அதற்கு முந்தியதான ஸர்வ சித்திப்ரத சக்ரம் என்ற எட்டாவது ஆவரணத்தின் நடுவில் உள்ள பிந்துவாகும் எட்டாவது ஆவரணம் முக்கோண வடிவுடையது. எட்டாவது ஒன்பதாவது ஆவரணங்கள் ஒன்றிற்கொன்று பிரிக்க முடியாத தொடர்பில் உள்ளன என அறியவேண்டும். முதல் ஆவரணம் ஒன்றிற்குள் ஒன்றான மூன்று சதுரங்கள் (நான்கு வாயிற்படிகளுடன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நான்கு பக்கங்களிலும் கூடிய) வடிவில் உள்ளது. இம்முதல் ஆவரணத்தின் வெளிச்சதுரத்தின் பக்கம் எவ்வளவு நீளமோ அவ்வளவு உயரம் பிந்து என்ற ஸர்வானந்தமய சக்ரத்தின் மேல்புறம் என்று அறிய வேண்டும். ஆகவே, ஸ்ரீ சக்ரம் ஒரு கனசதுரம் வடிவில் உள்ளது போல் கருதப்பட்டு வெளியில் அந்தந்த ஆவரணங்களுக்கு உரிய பகுதிகள் நீங்கலாக மற்றப் பகுதிகள் செதுக்கி எடுக்கப்பட்டு விட்டது போன்ற வடிவில் தியானிக்கப்பட வேண்டும்.

த்ரைலோக்ய மோஹன சக்ரம் என்ற முதல் ஆவரணம் ஒரு தளத்தில் இருக்குமானால் அதனையும் விட உயரமான தளத்தில் அடுத்த ஸர்வாச பரிபூரக சக்ரம் உள்ளதாக அறிய வேண்டும். இங்ஙனமே முந்தியதை விடப் பிந்திய ஆவரணம் உயர்ந்த தளத்தில் தியானிக்கப்பட்டு, "பிந்து சக்ர" ஒன்பதாவது ஆவரணம் எல்லாவற்றிற்கும் மேற்பட்ட தளத்தில் தியானிக்கப்பட வேண்டும் இப்படி மூந்தியதை விடப் பிந்திய ஆவரணம் உயர்ந்த தளத்தில் இருக்கும் வண்ணமே ஸ்ரீ சக்ரத்தை அமைத்துக் கொண்டுவிட்டால், அதுவே ஸ்ரீ சக்ர மேரு என்று சொல்லப்படுகிறது.

மிகத் தாழ்ந்த தளத்திலுள்ள த்ரைலோக்ய மோஹன சக்ரத்திற்கும் மிக உயர்ந்த தளத்தினதான ஸர்வானந்தமய சக்ரத்திற்கும் இடையிலுள்ள தூரம் த்ரைலோக்ய மோஹன சக்ரத்தின் வெளிச் சதுரத்தின் ஒரு பக்கத்தின் அளவு உள்ளதாகும். இங்ஙனம் அமைக்கப்படுவது ஸம்பூர்ணமேரு எனப்படும். உயரம் பாதியானால் (அதாவது திரைலோக்ய மோஹன சக்ரத்தின் வெளிச் சதுரப் பக்கத்தில் பாதியானால்), அர்த்தமேரு எனப்படும். ஸ்ரீ சக்கரத்தை மேரு வடிவிலேயே பூஜை செய்ய வேண்டும். தகடுகளில் வரைந்து வழிபடுவர்கள். பூஜா காலத்தில் பாவனையிலாவது மேரு வடிவத்திலேயே ஸ்ரீ சக்கரத்தைக் கொள்ளுதல் வேண்டும். ஸ்ரீ சக்ர பூஜை தான் நவாவரண பூஜை * எனப்படுகிறது. இது நவாவரண மஹா யக்ஞமாகக் கருதப்படுகிறது. இந்த நவாவரண மஹா யக்ஞமாக நாள் தோறும் தவறாது செய்பவன் வாஜபேயம் ஸோமயாகம், அச்வமேதம் போன்ற யக்ஞம் செய்த தீக்ஷிதர்களையெல்லாம் காட்டிலும் எத்தனையோ கோடி மடங்கு மேலான பெருமை யுடையவன் என உணர வேண்டும்.

---

* இந்த நவாவரண பூஜை பற்றி "ஸ்ரீ வித்யா நவாவரண பூஜை" என்ற புத்தகம் "பிரதிபா"வின் 44-வது புத்தகமாக வெளிவந்துள்ளது. அதில் விவரமாக கொடுக்கப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ சக்ரத்தில் நடுவில் உள்ள முக்கோணமே எட்டாவது ஆவரணம். இதுவே ஸர்வஸித்திப்ரத சக்ரம் எனப்படுகிறது. இந்த முக்கோணத்தின் நான்கு திசைகளிலும் முதலில் அம்பிகையின் திருக்கரத்தில் ஏந்தப்படும் பாசம், அங்குசம், தனுஸ், பாணம் என்ற ஆயுத தேவதைகளைப் பூஜிக்க வேண்டும். இது இந்த ஆவரணத்திலுள்ள விசேஷமாகும். ஒன்பதாவது ஆவரண பூஜை தொடங்குவதற்கு முன் ஆயுத பூஜைகளைச் செய்ய வேண்டும். முக்கோண வடிவினதான ஸர்வஸித்திப்ரதம் என்ற இந்த எட்டாவது ஆவரண பூஜையில் முக்கோணத்தின் மூன்று கோணங்களிலும் முறையே மஹா காமேஸ்வரி, மஹா வஜ்ரேஸ்வரி, மஹாபகமாலினி, என்ற மூன்று தேவதைகளையும், முக்கோணத்தின் நடுவில் மஹா த்ரிபுரஸுந்தரி என்ற தேவதையையும் பூஜிக்க வேண்டும். ஆக இம் முக்கோணத்தில் பூஜிக்கப்படுகிற தேவதைகள் நான்கு. ஆயுத தேவதைகளையும் சேர்த்தால் எட்டாகும். ஆனால் ஆயுததேவதைகள் இந்த எட்டாவது ஆவரண பூஜைக்குள் அடங்கியதல்ல. ஏழு-எட்டு ஆவரணங்களுக்கு இடையிலுள்ளது.

எட்டாவது ஆவரணத்திற்கு சக்ரேஸ்வரி திரிபுராம்பா ஆவாள்; ஸித்தி தேவதை இச்சா; முத்ரா தேவதை ஸர்வபீஜா முத்ரா: காட்டப்பட வேண்டிய முத்திரை ஸர்வபீஜ முத்திரை ஆகும். எட்டாவது ஆவரணமான முக்கோணத்தின் நடுவில் உள்ள பிந்துவே ஒன்பதாவது ஆவரணமாகும். முக்கோணத்தின் மூன்று பக்கங்களையும் தொட்டுக் கொண்டு முக்கோணத்திற்குள் சிறு வட்டமாக தியானிக்கப்பட வேண்டும். பிந்து, சக்ரம், தகடு முதலியவைகளில் வரையும் பொழுதும் அப்படியே வரைதல் வேண்டும். மரபு தெரியாதவர்கள் முக்கோணத்தின் நடுவில் பக்கங்களைத் தொடாதவாறு சிறு புள்ளியாக அமைத்து விடுகின்றனர். இது சரியல்ல. பிந்துவும் முக்கோணமும் அவினாபாவ ஸம்பந்தம் உடையவை. அதாவது ஒன்று விட்டு இராத தொடர்பு கொண்டதாம். ஆயினும் முக்கோணம் எந்த தளத்தில் உள்ளதோ அந்த தளத்திற்கு உயர்ந்த தளத்தில் எழும்பியிருப்பதாகவே பிந்து கொள்ளப்பட வேண்டும். லலிதா மஹா திரிபுரஸுந்தரி பராபட்டாரிகையைப் பிந்துவில் பூஜிக்க வேண்டும். இங்ஙனம் மஹாஷோடசி உபாஸகர்கள் பூஜித்தல் வேண்டும். பஞ்சதசி, ஸௌபாக்ய வித்யா உபாஸகர்கள் லலிதா மஹா திரிபுரஸுந்தரி என்று பூஜிக்க வேண்டும். சக்ரேஸ்வரி என்ற வடிவத்தில் அம்பிகைக்கு இங்கு மஹா திரிபுரஸுந்தரி என்று பெயர்.

பல இடங்களில் த்ரிபுரா, திரிபுரஸுந்தரி மஹா த்ரிபுர ஸுந்தரி லலிதா மஹா த்ரிபுரஸுந்தரி பராபட்டாரிகை என்று வரும் பெயர்களில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உள்ள வேற்றுமையை உற்று நோக்குக. அப்பெயர்களால் குறிப்பிடப் பட்ட தேவதைகள் தனித்தனி தேவதா ஸ்வரூபங்கள். ஒன்பதாவது ஆவரணத்தில் ஸித்தி தேவதை ப்ராப்தி, முத்ரா தேவதை ஸர்வயோனி; காட்டப்பட வேண்டிய முத்திரை ஸர்வயோனி முத்திரையாகும்.

நவாவரண பூஜை பஞ்சதசி உபாசகர்களுக்கு இவ்வளவே ஆகும். பிந்துவுக்கும் மேம்பட்ட ஸ்தானத்திலுள்ள பூஜை பஞ்சதசி உபாஸகர்களுக்கு கிடையாது. அவர்களுக்குப் பூஜையில் பத்தாவது முத்தரையும் இல்லை என அறியவும். மஹாஷோடசி உபாஸகர்களுக்கு ஏற்பட்ட விசேஷம் அடியிற் கண்டதாகும். அவர்கள் 9-வது ஆவரணமான பிந்துவுக்கும் அப்பாற்பட்ட (அதீதமான) இடத்தில் துரீய வித்யை என்ற பதின்மூன்று எழுத்து மந்திரத்தால் பூஜை செய்ய வேண்டும். இங்கு துரீய வித்யையான அம்பிகையே சக்ரேஸ்வரி, தனித்த சக்ரேஸ்வரி இல்லை. ஆனால் பத்தாவது ஸித்தி தேவதை ஸர்வ காம ஸித்தியும் பத்தாவது முத்ரா தேவதை ஸர்வ த்ரிகண்டா முத்ரா தேவதையும் இங்கு அம்பிகையின் வலது இடது பக்கங்களில் பூஜிக்கப்படுகின்றனர். இங்கு காட்டப்படும் முத்திரை ஸர்வ திரிகண்டா முத்திரையாகும்.

ஒவ்வொரு ஆவரண பூஜையின் இறுதியிலும் கந்தம், புஷ்பம், தூபம், தீபம், நைவேத்யம், தாம்பூலம் கர்ப்பூர நீராஜனம் என்ற உபாசாரங்களைக் குறைவின்றிச் செய்ய வேண்டும். முதல் ஆவரணத்திலுள்ள 28 தேவதைகளுக்கும் "ப்ரகடயோகினிகள்" என்று பொதுப் பெயர் இருப்பதுபோல மற்ற ஆவரணங்களிலும் பெயர்கள் உண்டு. அவையாவன:-

1. ப்ரகட யோகினிகள், 2. குப்த யோகினிகள், 3. குப்ததர யோகினிகள், 4. ஸம்ப்ரதாய யோகினிகள், 5. குலோத்தீர்ண யோகினிகள், 6. நிகர்ப்ப யோகினிகள், 7. ரஹஸ்ய யோகினிகள், 8. அதிரஹஸ்ய யோகினிகள், 9. பராபராதி ரஹஸ்ய யோகினிகள்.

இங்ஙனம் விரிவான முறையில் ஸ்ரீ சக்ர பூஜை செய்யப்பட வேண்டும். நவாவரண பூஜை செய்வதற்கு முந்தி அங்கமாக க்ரியா கலாபங்கள் ஏராளமாக உள்ளன. ஸ்ரீ சக்ர பூஜையை நியாஸ ரூபமாகச் செய்யலாம். கட்கமாலா என்ற ஸ்தோத்திரத்தை படிப்பதாலும் ஸ்ரீ சக்ர பூஜை ஆகிறது.

1. ஸ்ரீ சக்ர பூஜையில் பூப்ரஸ்தார பூஜை, மேருப்ரஸ்தார பூஜை, கைலாஸப்ரஸ்தார பூஜை என்று வகைகள் உள்ளன. 2. பாஹ்ய பூஜை, ஆந்தர பூஜை என்று இரண்டு வகைகள் உள்ளன. 3. பஹிர்யாகம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்தர்யாகம், மஹா யாகம் என்று மூன்று வகைகள் உள்ளன. 4. அபரா பூஜை, பராபரா பூஜை, பராபூஜை என்று மூன்று வகைகள் உள்ளன. அந்தந்த அதிகாரிகள் தங்கள் தங்கள் பக்குவத்திற்கும், பண்பாட்டிற்கும் உரிய பூஜையைக் கொள்ளுதல் வேண்டும். இவை பற்றி ஏற்கெனவே விவரிக்கப் பட்டுள்ளது.

வசின்யாதி வாக்தேவிகளால் செய்யப்பட்ட சகஸ்ர நாமத்தில் பலனைவிட திரிசதியின் ஒரு நாமவுக்கு மிக அதிக பலன். அம்பிகையை ஆராதிக்கும் பலவித வழிகளை லலிதா சகஸ்ரநாமத்திலுள்ள 113-131 வரையுள்ள நாமாக்கள் குறிப்பிடுகின்றன.

ஸுவாஸினி, பிராஹ்மண போஜனம்

தேவி வழிபாட்டில் மிக முக்ய அம்சம் சுவாஸினி பூஜையும், பிராம்மண போஜனமும். திரிசதி நாமாக்களைக் கொண்டு சுவாஸினிகளை வரித்து பூஜிப்பதும் சகஸ்ரநாமக்களைக் கொண்டு பிராம்மணர்களை வரித்து பூஜிப்பதும் விசேஷமாகக் கூறப்பட்டிருக்கிறது.

சஹஸ்யநாம ஸாகஸ்ர போஜனேப்யேவ மேவஹி
ஆதௌ நித்யாபலிம் குர்யாத் பச்சாத் பிராம்மண போஜனம்

நித்யா பலி (16 சுவாஸினிகள் பூஜை) பிரம்மண போஜனம் இரண்டுமே சமப் பிரதானம் என்றாலும் நித்யாபலி பிரம்மண சுவாஸினி பூஜையின் அங்கமே என்று பாஸ்கரராயர் குறிப்பிட்டிருக்கிறார். அமாவாஸையன்று 16 சுமங்கலிகளை அல்லது பிராம்மணர்களை அழைத்து எண்ணெய் கொடுத்து வெந்நீரில் நீராடச் செய்ய வேண்டும். பின் 16 திதி நித்யா தேவிகளை அவர்களிடம் ஆவாஹனம் செய்து அர்ச்சிக்க வேண்டும். அன்னமளித்து தக்ஷிணை, தாம்பூலம் தர வேண்டும். ஸ்ரீ வித்யோபாஸகர்களே இப்பூஜைக்கு வரிப்பதற்கு ஏற்றவர்கள்.

சுக்லபக்ஷ பிரதமை முதல் பௌர்ணமி வரை தினம் ஒன்றுக்கு 20-நாமங்களைக் கூறி 20-சுமங்கலிகள், பிராம்மணர்கள் பூஜிக்கப்பட வேண்டும். அல்லது 10-நாட்களில் தினம் 30 நாமாக்கள் வீதமும் அல்லது 5 நாட்களில் தினம் 60 நாமாக்கள் வீதமும் அல்லது 2 நாட்களில் தினம் 100 நாமாக்கள் வீதமும் வரித்து பூஜிக்கலாம். ரகஸ்ய நாம சாகஸ்ரத்தினால் பிராம்மண போஜனம் செய்விப்பதே விசேஷம். முதல் நாள் 16 நித்யா தேவிகளை 16 சுமங்கலிகள் பிராம்மணர்களிடம் ஆவாஹனம் செய்து பின்பே சகஸ்ர போஜனம் செய்விக்க வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உபாசனா மார்க்கத்தில் பல படிகள் 7

(ஸ்ரீ வித்யை)

யஸ்ய நோபச்சிமம் ஜன்ம யதிவா சங்கர: ஸ்வயம்
தேனவலப்யதே வித்யா ஸ்ரீமத் பஞ்சதசாக்ஷரீ I
வக்த்ர கோடி ஸகஸ்ரைஸ்து ஜிஹ்வாகோடி சதைரபி
வர்ணிதும் நைவ சக்யேயம் ஸ்ரீ வித்யா ஷோடசாக்ஷரி II

உபாசனா மார்க்கத்தில் பிரவேசிக்கு முன் கௌளாசாரம் (வாமா சாரம்) ஸமயாசாரம் ஆகிய இரு பிரிவுகளைப் பற்றித் தெரிந்துக் கொள்ளவேண்டும். ஸ்ரீ வித்யா உபாசனை ஸமயாசாரத்தையே சேர்ந்தது. முதலில் தாந்திரீகம் என்றால் என்ன என்பதைத் தெரிந்துக் கொள்வோம்.

தாந்தரீகம் என்றால் என்ன ?

தாந்தரீகம் என்பது இயற்கை தத்துவம் உடலியல், மனோதத்துவ உடலியல் முதலியவற்றின் கருத்துகளை ஏறத்தாழ வழிபாட்டு முறையோடு சம்பந்தப்படுத்தி உருவாக்கப்பட்டதாந்திரீக நூல்கள் யாவும் சிவபெருமானால் ஆக்கப்பட்டவை என்று ஹிந்துக்கள் கருதுகின்றனர். அவற்றை அவர்கள் ஐந்தாம் வேதம் என்றும் கருதுகின்றனர்.

வேதங்களில் மிகவும் பழமையான ரிக்வேதத்தை விட மிகவும் புராதனமானது தாந்திரீகம்.

ஐரோப்பியர்களுக்கு தாந்திரீகத்தைப் பற்றி இரு நூற்றாண்டுகளுக்கு முன்பே தெரியவந்த போதிலும் அதைப் பற்றி விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சி மிகவும் அண்மை காலத்தில்தான் தொடங்கியது. இருந்தாலும் தாந்திரீகப் போதையில் மையக் கருத்தை அதாவது சக்தி தத்துவத்தை விஞ்ஞானம் கண்டறிந்து விட்டது.

தாய் வழிபாடு சகாப்த காலத்தின் சூது வாதற்ற நம்பிக்கைகளோடு மிக உயர்ந்த தத்துவ அம்சங்களைப் பிணைந்து உருவாக்கப்பட்டுள்ள தாந்திரீக போதனையின் ரகசியத்தைப் புரிந்து கொள்ள இந்த சக்தி தத்துவமே கருவியாகும்.

சக்தியின் அம்சமான தெய்வத்தோடு ஒன்றுபடுவதற்கு தாந்திரீகம் மற்றுமொரு மார்க்கத்தைக் காட்டுகிறது. பிரத்யேக சடங்கு முறைகளை நிறை வேற்றுவதே இந்த மார்க்மாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏனைய சமய போதனைகள் வழிபாடுகள் ஆகியவற்றுக்கிடையே தாந்திரீகம் ஒரு தனி ஸ்தானத்தைப் பெற்றுள்ளது.

ஆதிகாலத்தில் மது, மச்சம், மாமிசம், மைதுனம் இவைகளை வழி பாடுகளில் உபயோகிப்பது தவறாகக் கருதப்படவில்லை.

புராதன இந்தியாவில்தான் காம சாஸ்திரம் உருவாக்கப்பட்டது. சமயம் கலாசாரம் முழுவதன் முக்ய பகுதிகளில் ஒன்றாக காமமும் கருதப்பட்டது. காதலைப் பற்றி இத்தனை ஆழமாகவும், கண்ணியமாகவும் விஞ்ஞான திட்டத்தோடும் உருவாக்கப்பட்ட கொள்கையை நாம் வேறெங்கும் காண முடியாது.

பக்தி என்ற வகையில், தான் அனுபவிக்கும் எதுவுமே ஈசுவரார்ப்பணம் என்ற முறையில் மது மாமிசம் மச்சம் மைதுனம் எல்லாம் வழிபாட்டில் உபயோகிக்கப்பட்டன. ஆனால் சாத்வீகத் தன்மையில்லையேல் வழிபாடு பலனளிக்காது என்கிற கருத்து வெளிப்பட்டப்பின் இந்த முறைகளும் இதைத் தொடர்ந்து பிராணி பலிகளும் கைவிடப்பட்டன.

எந்த தெய்வமும் ஒரு பிராணியின் உயிர் போகும் சித்திரவதையை விரும்பாது என்பதை மக்கள் அறிய இவ்வளவு காலமாயிற்று.

வாமாசாரம் சமயாசாரம் இவைகளில் எது சிறந்தது? பழகுபவர்களின் நடத்தை காரணமாக வாமாசாரத்திற்கு அபக்கியாதி ஏற்பட்டிருப்பது உண்மை.

மனிதன் தன் குணாதிசயங்களுக்கு ஏற்ப தெய்வத்தைத் தொழ முடியும் என்று பசு, வீரன், திவ்யன் என சாதகர்கள் பிரிக்கப்பட்டனர்.

பசுவாக ஆரம்பிக்கும் ஒருவன் அந்த சாதனையாலேயே படிப்படியாக திவ்யன் ஆகலாம்.

தக்ஷிண - வலது, திறன், அறிவு இவற்றைக் குறிக்கும் வெளிப் படையாக வலது வழி, இடது வழி தக்ஷிணாகாரம், வாமாசாரம் என்று சொல்லி அறிவு வழி, ஆனந்த வழி இவற்றைக் குறிப்பிட்டனர்.

வாமாசாரம், என்றால் விபரீதாசாரம் என்ற கருத்து எப்படியோ ஏற்பட்டு விட்டது.

சாக்த மதம் இந்த இரண்டையுமே ஏற்றது. இவ்விரு வழிகளும் சமமாகவே இருந்தன என்பது லலிதா ஸகஸ்ரநாமம், சௌந்தரியலஹரி, தேவி மகாத்மியம் இவைகளிலிருந்து தெரிகிறது. வாமாசாரத்தைச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சரியாக புரிந்துக் கொள்ளாமல் ஏற்பட்ட விபரீதமே அதன் அபக்யாதிக்குக் காரணம்.

மது என்றால் ஆனந்தம், தெய்வக்களிப்பு, சாதாரண கள் அல்ல.

கௌமா மார்க்கம் என்ற வாமாசாரம் லலிதா சகஸ்ரநாமத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.

கௌல மார்க்க தத்பரசேவிதா
ஸவ்யாப ஸவ்ய மார்க்கஸ்தா
ரஹோயாகக் கிரமாராத்யா
ரகஸ்தர்ப்பண தர்பிதா
வீரகோஷ்டி ப்ரியாவீரா

இவை எல்லாம் கௌல மார்க்கத்தைக் குறிப்பவைகளே. கௌலத்திலும் பூர்வ கௌலம், உத்திர கௌலம் என்ற இரு பிரிவுகள் உண்டு. கௌவ மார்க்க பூஜையும் பஹிர்முகமானது தான். இதில் உபஸ்தம் பிந்துஸ்தானமாகக் கருதப்படுவதாலும் பூஜையின் போது மது, மச்சம், மாமிசம், மைதுனம் இவை உபயோகிப்பதாலும் அது அங்கிகரிக்கப்படவில்லை.

சாதாரண மனிதர்களால் கௌல மார்க்கம் அனுஷ்டிக்க முடியாது. சபல சித்த முடையவர்களுக்கு இது சாத்யமில்லை. ஜிதேந்திரியத்வம் முதலான குணங்களில்லாதவர் கௌல மார்க்கத்தில் பிரவேசிக்க வேண்டுமாயின் இதர தேவதைகளை இதர மார்க்கங்களால் உபாசித்து விட்டு, பரிபக்குவமான பின் இம் மார்க்கத்தை ஆச்ரயிக்க வேண்டும்.

அன்யாஸாம் தேவானாம் து பூயோ பூயோ நிஷேவணாத்
பரிபக்வமனா: கௌலே லப்த ப்ராமாண்ய கோதர:
பாஹ்யேந்திரியாணி ஸம்யம்ய ப்ரவிசேதத்ர நேதர:

- குலசாரம்

கௌம மார்க்கம் கத்தி முனையில் நடப்பது போன்றது.

தக்ஷிண மார்க்கம் என்பது சாத்வீக வழிபாடு முறை, இதில் மந்திரஜபம், பூஜை, ஹோமம் இவை முக்கிய இடம் பெறுகிறது.

அம்பிகையை வழிபடும் சாஸ்திரத்திற்கு ஸ்ரீ வித்யை என்றும் அம்பிகையின் மந்திரத்திற்கும் ஸ்ரீ வித்யை என்றும் பெயர். புருஷ ரூபமான தேவதையை வுடையதற்கு மந்திரம் என்றும், ஸ்திரி ரூபமான தேவதையை வுடையதற்கு வித்யை என்றும் பெயர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வித்யைகள்

ககாராதி ஒரைந்தும் காணிய பொன்மை
ஹகராதி ஓராறு அத்தமே போலும்
ஸகராதி ஓர் நான்கும் தான் சுத்த வெண்மை
ககாராதி மூவித்தை காமிய முத்தியே

- திருமந்திரம்.

வித்தை என்றால் மெய்யுணர்வு, உண்மை, ஞானம், "முக்திக்கு வித்து முதல்வன் ஞானமே" என்கிறார் திருமூலர். இந்த மெய்யறிவை அடைவதற்கு சாதனமாக இருத்தலின் வேதாகமம் முதலிய நூல்கள் "வித்தை" எனப்படும்.

இத்தகைய வித்யைகள் பல.

உத்கித வித்யை, உபகோசல வித்யை, உஷஸ்த வித்யை, ககனோ வித்யை, சத் வித்யை, சாண்டில்ய வித்யை, பஞ்சாக்கினி வித்யை, பர்யங்க வித்யை, பிராண வித்யை, புருஷ வித்யை, மண்டல வித்யை, வியாகிருதி வித்யை, வைஸ்வாநர வித்யை, மது வித்யை, ஆத்ம வித்யை, தகர வித்யை, பிரும்ம வித்யை முதலியன. இவைகளின் விளக்கம் பிருகதாரணியம், சாந்தோக்கியம், தைத்ரீயம், மகா நாராயணம், கைவல்யம் முதலிய உபநிஷத்துக்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

மேலான பரம்பொருளை அறியும் இந்த வித்யைகளை அறிந்தவனே வித்வானாவான்.

பிரும்மவித்யை என்பதே ஸ்ரீ வித்யை. இதன் பரியாயப் பெயர்கள். மூல வித்யை, ஸித்த வித்யை, தகர வித்யை.

மூல வித்யை	-	எல்லாவற்றிற்கும் மூலகாரணமாக உள்ளது.
மகா வித்யை	-	மகா வாக்கியத்தின் பொருளாக உள்ள வித்யை
தகர வித்யை	-	சிற்றம்பல வித்யை எனவும் பெயர் பெறும்
பிரும்ம வித்யை	-	பிரும்மப் பொருளை உணர்த்தும் வித்யை.

(காமேஸ்வர பிரும்ம வித்யையை லலிதா திரிசதி 254)

(திருவென்காடு அம்பிகைக்கு "பிரும்ம வித்யாம்பாள்" என்று பெயர்).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

லலிதா சகஸ்ரநாமம் இந்த ஸ்ரீ வித்யையைப் பற்றி கூறும் நாமாக்கள்.

மநு வித்யாவை (238), சந்திர வித்யாயை (239), ஸித்தி வித்யாயை (472), மகா வித்யாயை (584), ஸ்ரீ வித்யாயை (585), ஸ்ரீ ஷோடசாக்ஷரீ வித்யாயை (587), நந்தி வித்யாயை (733).

ஸ்ரீ லலிதா திரிசதியில்:- கந்தர்ப்ப வித்யாயை (12) ஹாதி வித்யாயை 119.

ஸ்ரீ வித்யா உபாசனா மார்க்கம் பல படி நிலைகளில் விளங்குகிறது. இங்கு யந்திரங்களே முக்கிய ஸ்தானம் வகிக்கின்றன.

தேவியின் மந்திர மகிமை குறித்து ஹயக்ரீவர் அகஸ்தியருக்குக் கூறியதாவது.

"எல்லாப் பொருள்களையும் விட சப்தமே சிறந்தது. எல்லா சப்தங்களையும் விட வேதமே சிலாக்யமானது. எல்லா வேதங்களையும் விட வேத மந்திரங்களே சிறந்தவை.

சகல வேத மந்திரங்களில் துர்கா மந்திரம் சிறந்தது. இதைவிட சிறந்தது சாரஸ்வத மந்திரங்கள் இதை விட சிறந்தது ஆம்னாய மந்திரங்கள். இவை எல்லாவற்றையும்விட உத்கிருஷ்டமானது லோபா முத்ரா (ஹாதி), அதைவிட சிறந்தது காமராஜம் (காதி) இதற்கு மந்திர ராஜம் என்றும் பெயர்.

ஹம்ஸாதியான மந்திரத்திற்கு வாச்யார்த்தம் காமராஜ மகேஸ்வரம், காதி வித்யை மந்திரத்திற்கு லலிதாம்பிகையே வாச்யார்தமாவாள், ஹாதி, காதி இவ்விரண்டிற்கும் பேதம் முதல் மூன்று அக்ஷரங்களால் ஏற்பட்டதாகும்.

சிவன், சக்தி, காமன், க்ஷிதி, மாயை, ஹம்ஸம், ப்ருகு, சிவன், இந்திரன், புவனேசன், சந்திரன், மன்மதன், பூமி, ஹ்ருல்லேகை இவற்றோடு கூடிய மந்திரம் ஹாதி வித்யை.

ஆரம்பத்தில் மன்மத யோநி, ஸ்ரீ பீஜங்களுள்ளது காதி வித்யை.

பல பீஜாக்ஷரங்கள் சேர்ந்து மூல மந்திரமாகிறது. அதை தீக்ஷை பெற்று உபாசிப்பதே வித்யை.

ஜபமாலா

ஸ்ரீ வித்யை உபதேச க்ரமமும், மற்ற ஜப மந்திரங்களும் அடங்கியது. "பிரதிபா"வின் 65-வது புத்தகம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ வித்யையில் பின் கண்டவை அடங்கும்.
ஏகாக்ஷரியான - ஹ்ரீம் (புவனேஸ்வரி)
ஏகாக்ஷரியான - ஈம் (காமகலை)
த்ரயக்ஷரி - பாலை
நவாக்ஷரி - சண்டி

பஞ்ச தசாக்ஷரி, ஷோடசி, மகா ஷோடசி இவைகள்.

புவனேஸ்வரி வித்யை "ஏகாக்ஷரி" (ஹ்ரீம்) தேவி உபநிஷத்தில் விளக்கப்பட்டுள்ளது. காமகலா வித்யையும் அப்படியே.

பாலை மூன்று பீஜங்களோடு கூடியது என்றாலும் ஷடாக்ஷரியாகவே பழக்கத்தில் இருக்கிறது.

(ஐம் க்லீம் ஸௌ: ஸௌ: க்லீம் ஐம்)

நவாக்ஷரியும் தேவி உபநிஷத்தில் விளக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ வித்யா உபாசனா கிரமத்தில் முதலில் இடம் பெறுவது மகாகணபதி உபாசனை, அடுத்தது பாலதிரிபுரசுந்தரி உபாசனை, லலிதா மகா திரிபுரசுந்தரி உபாசனை, லலிதா மகா திரிபுரசுந்தரி பராபட்டாரிகா உபாசனை, உச்சிஷ்ட கணபதி உபாசனை * என்று ஐந்து படிகள்.

இந்த ஐந்து படி நிலைகளுக்கும் ஐந்து முக்கியமான மந்திரங்கள் இருக்கின்றன.

ஸ்ரீ வித்யா உபாசனா மார்க்கத்தில் ஒரு சிஷ்யனுக்குப் பிரவேசம் கொடுக்கும் குரு இந்த ஐந்து உபாசனைகளிலும் படிப்படியாக இறங்கும்படி செய்யலாம். அல்லது இரண்டோ, மூன்றோ ஒரே சமயத்தில் உபதேசிக்கவும் செய்யலாம். சிஷ்யனிடத்திலுள்ள பக்குவம் கருதி குருவினால் தீர்மானம் செய்யப்படும் விஷயம் இது.

இந்த பஞ்சதசாக்ஷரிக்கு இன்ன மரபினர்தான் உபாசிக்கத் தகுதியுடையோர் என்பதில்லை. இதை உபாசிக்கும் அதிகாரம் எவருக்கும் உண்டு. இதே போல்தான் பஞ்சாக்ஷரி மந்திர உபாசனையும்.

அம்பிகை ஆனந்த ரூபிணி, சிருங்கார ரஸப்ரதாயினி ஆதலால் பக்தர்கள் உபாசிக்கும்போது தங்களையும் அலங்கரித்துக் கொண்டு பிரசன்னமான முகத்தோடும் சுக்ருதமான வாக்கோடும் விளங்க வேண்டும்.

---

* உச்சிஷ்ட கணபதி மந்திர் உபதேசம் இப்போது வழக்கத்தில் இல்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ வித்யா உபாசகன் எல்லா பெண்களையும் தேவியாகவே கருதுபவன். ஸ்ரீ வித்யை உபாசிப்பவன் ஜனன மகிழ்ச்சி, மரண துக்கம் எதுவும் கொண்டாடக் கூடாது. ஸ்ரீ வித்யா உபாசகன் மகனும் உபாசகனாக இருக்கவேண்டும். ஆனால் தந்தை குருவாக இருக்கக் கூடாது. பிணம் இருக்கும்போது ஹோமம் செய்யவேண்டும். ஆனால் இக்காலத்தில் யாரும் அனுசரிக்க முடியாது. ஸ்ரீவித்யா உபாசகன் தனியாக நவக்கிரகங்களை ஆராதிக்க வேண்டியதில்லை. சாமான்ய விரதங்கள் போன்ற எந்த விரதமும் எடுத்து முடிப்பது தேவையில்லை.

தத்வமஸி, அயமாத்மா பிரஹ்மா என்ற மஹாவாக்யங்களில் மனன நிதித்தியாஸனங்களும் ஸ்ரீ வித்யோபாஸனையும் ஒன்றே. ஹ்ரீம்கார வேதோபநிஷதே நம: என்ற திரிசதி (294) நாமாவினால் ஸ்ரீ வித்யோபாசனை பிரும்மவித்தை என்றே ஏற்படுகிறது.

எல்லாவற்றையும் அறிவிப்பது வேதமாகும். வேதம் போலவே ஹ்ரீம்காரமும் எல்லாவற்றையும் அறிவிப்பதால் அது வேதசமானமே.

ஸ்ரீவித்யையையும் சாக்த வழிபாட்டையும் குழப்பிக் கொள்ளலாகாது. இரண்டும் ஒன்றேயல்ல. ஸ்ரீ வித்யோபாஸகனுக்குக் குறிக்கோள் சில வாழ்வு. இவ்வாழ்வில் சக்தியின் கூறு முழுவதும் விழுங்கப்பட்டு விடுகிறது. உபாசகன் சித் சக்தி வடிவில் மகா திரிபுரஸுந்தரியை தன்னிடம் நிறைவேற்றிக் கொண்டாலும் அந்த சித் சக்தி அவனின் குறிக்கோள் அல்ல சில வாழ்வில் பொலிவதற்கு சித் சக்தி துணையாக நிற்கிறது.

சாக்தன் சக்தியின் ஆற்றலைத் தம்பட்ட மடிப்பவன். ஸ்ரீவித்யோ பாஸகன் சக்தியின் உதவிகொண்டு சிவசக்தி ஐக்யமாகக் கண்டு சில வாழ்வு வாழ்பவன்.

ஸ்ரீ வித்யை, சைவம், சாக்தம், வைஷ்ணவம், சௌரம், கௌமாரம், காணாபத்யம், பௌத்தம் ஆகிய எல்லா மதங்களையும் அணைத்துக் கொள்கிறது. அவைகளைக் கடந்தும் நிற்கிறது. நவாவரண பூஜையில் இந்த மதங்களும் வழிபாட்டில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன. ஸ்ரீ வித்யை ஒரு கொள்கையல்ல, உலகிலுள்ள எல்லா வழிபாட்டு வகைகளும் ஸ்ரீ வித்யையில் அடக்கம்.

மகா கணபதி உபாசனை

மகா கணபதி உபாசனை மார்க்கத்தில் "ஸ்ரீ வித்யா கணபதி" என்று அழைக்கப்படுகிறார். மகா கணபதியின் வடிவம் உண்மையில் மந்திர வடிவமேயாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த உபதேசம் பெறாமல் வேறு எந்த மந்திரோபதேசமும் பெறுவது சிலாக்யமல்ல.

மகா கணபதியின் மூல மந்திரம் 28 அக்ஷரங்களைக் கொண்டது. இந்த இருப்பத்து எட்டு எழுத்துக்களையும் அதன் சரியான வரிசைபடி உச்சரிக்கப்படுமானால் அப்போது எழும் நாதமே மகா கணபதியின் உண்மையான ஸ்வரூபம்.

கைகால் முதலிய அவயவங்களோடு கூடிய மகா கணபதியின் வடிவமும் தொடக்கத்தில் தியானம் செய்வதற்கு உதவியாக இருக்கும்படி உபதேசிக்கப்படுகிறது. இந்த வடிவத்தை மனதில் நிறுத்திக் கொள்ள பின்வரும் தியானம் சுலோகம் கூறப்படுகிறது.

பீஜாபூர கதேக்ஷுகார் முகருஜா
சக்ராப்ஜ பாஸோத்பல
வ்ரீஹ்யக்ரஸ்வ விஷாண ரத்ன கலச
ப்ரோத்யத்கராம் போருஹ: I
த்யேயோ வல்லபயா ஸபத்மகரயா
ச்லிஷ்டோஜ் ஜ்வலத்பூஷயா
விஸ்வோத்பத்தி விபத்தி ஸம்ஸ்திதிகரோ
விக்னேச இஷ்டார்த்தத: II

மகா கணபதி பத்து திருக் கரங்களுடன் துதிக்கையும் உடையவராக விளங்குகிறார். வலது கீழ்க் கையிலிருந்து இடது கீழ்க்கை முடிய பத்துக் கரங்களில் முறையே மாதுளம்பழம், கதை, கரும்புவில், சூலம், சக்கரம், தாமரை, பாசம், சுருங்குவளை மலர், சம்பா, நெற்கதிர், தந்தம்.

தன் இடது மடியில் வல்லபா சக்தியை வைத்துக் கொண்டிருக்கிறார். ஒடிந்த தந்தத்தை ஏந்திய இடது கரத்தால் மகா கணபதி வல்லபையை இடையில் தழுவுபவராக தியானிக்கவேண்டும்.

தாமரை ஆசனம், அவர் பெரு வயிற்றை சர்ப்பம் ஒன்று சுற்றிக் கொண்டிருக்கிறது.

ஸ்ரீ வித்யா உபாசனையில் முதலிலும் ஆரம்பத்திலும் கணபதி வழிபடப்படுவதைக் கவனிக்கவேண்டும். ஆரம்பத்தில் மகாகணபதி முடிவில் உச்சிஷ்ட கணபதி. கணபதிக்கு உள்ள எவ்வளவோ வடிவங்களில் இவ்விரண்டும் தலை சிறந்தன கணபதியின் எல்லா வடிவங்களும் இந்த இரண்டு கணபதிகளுள் அடக்கம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கணேச நியாஸத்தில் கணேசரது 51 வடிவங்களும் 51 சக்திகளும் தியானிக்கப்படுகின்றனர்.

கணபதி உபாசனையையே பிரதானமாகவும் கொள்ளலாம்.

உபாசகர்களுக்கு முதலில் உடல் ஆரோக்கியம் தேவை பாலை, பஞ்சதசாக்ஷரீ, ஷோடசி போன்ற மந்திரங்களை முறைப்படி ஜபம் செய்யும் காலத்தில் உபாசகனுடைய உடலில் மின்சக்தி பரவுவதுபோல சில மாற்றங்கள் ஏற்படும். உள்ளத்தில் ஒரு வகையான பூரிப்பும் வேகமும் உண்டாகும். இவைகளைத் தாங்கிக்கொள்ள உடலிலும் உள்ளத்திலும் ஆற்றல் வேண்டும்.

அத்தகைய ஆற்றலை கணபதி மந்திரம் தருகிறது. இந்த மந்திரம் 444000 முறை ஜபம் செய்ய வேண்டும். இந்த எண்ணிக்கையை 444 நாட்களிலோ 222 நாட்களிலோ செய்து முடிக்கலாம். சதுராவ்ருத்தி தர்ப்பணமும் அன்றாடம் செய்ய வேண்டும். சோர்வின்றி இதைச் செய்பவர்கள் இதன் பலனை உணரலாம்.

மகா கணபதி பிரணவ வடிவ முடையவர் எல்லா சப்தங்களுக்கும் உலகுக்கும் ஆதியாக விளங்குவது பிரணவமே. ஆகவே எந்த காரியத்திற்கும் முதலில் கணபதி உபாசனை முக்கியம். ஸ்ரீ வித்யோ பாஸனா மார்க்கத்தின் ஆரம்பத்தில் ஸ்ரீ வித்யா கணபதி என்ற மகா கணபதியின் உபாசனை உள்ளது மிகப் பொருத்தமே.

ஸ்ரீம் - விஷ்ணு லக்ஷ்மிக்குரிய சக்கரமும், தாமரையும் தர்மத்தைக் காட்டுகிறது.

க்லௌம் - வராஹ பூமி தேவிக்குரிய கதையும், நெற்கதிரும் அர்த்தத்தைக் காட்டுகின்றன.

க்லீம் - மன்மத ரதிக்குரிய கரும்பு வில்லும், புஷ்ப பாணமும் காமத்தைக் காட்டுகின்றன.

ஹ்ரீம் - சிவ பார்வதிக்குரிய சூலமும், பாசமும் மோக்ஷத்தைக் காட்டுகின்றன.

கம் கணபதயே - மகா கணபதி உபாசனையினால் இந்த நான்கும் சித்திக்கின்றன.

மோக்ஷ ரூபத்தில் தர்மம் மிக நெருக்கமாகத் தூய வடிவத்தில் உள்ளது. காம இன்பம் மோக்ஷ இன்பத்தில் உயிர்களுக்குத் தம்மையறியாமலேயே இயல்பாக உள்ள ஆசையைக் காட்டுவதால் மோக்ஷத்திற்குப் பக்கத்தில் உள்ளது. காமம் அர்த்தத்தின் மூலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உண்டாவதால் காமத்துக்குப் பக்கத்தில் உள்ளது. தர்மம் கடவுள் வடிவமாக இருக்கும்போது மோக்ஷமாகிறது. உலகியலின் தன்மையில் அர்த்தம் காமமாக விளங்குகிறது.

வரவரத வசமானய:- பல்லாயிரக் கணக்கான மக்கள் அடங்கிய ஜனக் கூட்டத்தையும் ஸம்மோஹனம் (வசமானய) அடையும்படி செய்யக்கூடிய ஆற்றல் மகா கணபதி மந்திரத்திற்கு உண்டு.

மஹா சியாமளை, மஹா வாராஹி உபாசனைகளைத்தான் உபாசகன் கணபதி மந்திரத்திற்குப் பின் மேற்கொள்ள வேண்டும். ஆனால் இப்பொழுது வழக்கமில்லை. பாலா உபதேசமே கணபதிக்குப் பின் இடம் பெறுகிறது.

தேவி வழிபாட்டில் முழு வெற்றியடைவதற்கு வேண்டிய உள்ளப் பண்பாட்டை கணபதி உபாசனை அளிக்கிறது. மஹா கணபதி நற்குண பண்பாடுகளுக்கெல்லாம் தலைவர் நற்குண பண்பாடுகள் சத்வ குணமாகும்.

இதனால் அஹங்காரம் சாத்வீக அஹங்காரமாகிறது. அடுத்தது புத்தியும் சாத்வீகமாக அமையவேண்டும். மஹா சியாமளையே புத்தி தத்துவத்தைக் காட்டுகிறவன் புத்தியில் வாழ்வது என்பதே புத்திர யோகம் புத்தி யோகத்தின் வெற்றியே மஹா சியாமளை உபாசனையில் பலனாகும்.

மஹா சியாமளையின் மந்திரம் 98 அக்ஷரங்கள். இது ஒருவனுக்கு ஸித்தியாகிவிட்டால் எல்லா மந்திரங்களையும் ஒரு தரம் சொல்வதினாலேயே தக்க ஸித்தி ஏற்படுகிறது என்று மதங்மனுகோசம் என்ற நூல் கூறுகிறது.

மஹா வாராஹி வழிபாடு புத்தியோக வாழ்வில் வெற்றி பெற்றவனுக்கு சகல நாமரூப பிரபஞ்சத்திற்கு அடிப்படையாக விளங்குவது. தனது ஆத்ம சைதன்யமே என்ற ஞானம் ஏற்படுத்துகிறது. (Cosmic Consciosness) என்கிற விச்வாத்மக பிரக்ஞை இவள் அருளால் ஏற்படும். விசுவரூப தரிசனம் என்ற யோகத்தில் உபாசகன் கரை கண்டவனாகிறான். அதாவது உலகம் பூராவுமே அவனுக்கு உடல் போல் அமைகிறது.

மஹா வாராஹியின் மந்திரம் 113 எழுத்துக்கள் கொண்டதாகும்.

"சியாமளா வராஹி" தனி புத்தகமாக வெளிவந்துள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"பாலா" உபாசனை

அருணகிரணஜாலை ரஞ்சிதா சாவகாசா
வித்ருத ஜப படீகா புஸ்தகா பீதி ஹஸ்தா
இதரகரவ ராட்யா புல்லகல்ஹார ஸம்ஸ்த்தா
நிலவனது ஹ்ருதி பாலா நித்ய கல்யாண சீலா

- தியான சுலோகம்

ஸ்ரீ வித்யை உபாசனையில் மகா கணபதிக்கு அடுத்தபடியாக இடம் பெறுவது "பாலா" உபாசனை இது தான் அஸ்திவாரம் இதைப் பலமாகப் போட்டால் தான் இதன் மீது பஞ்சதசி, ஷோடசி, முதலிய கட்டிடங்களைக் கட்டலாம்.

ஸ்ரீ லலிதா பரமேஸ்வரியின் அங்க தேவதை பாலா. ஆகவே இவளை வழிபட்ட பின்பே அம்பிகையை வழிபடுவதும் சிறந்த முறையே.

சிறு பெண் போல அம்பிகை விளையாட்டில் ஆசைப்பட்டிருப்பதால் ''பாலா'' என்ற பெயர் "பாலா லீலா விசிஷ்டத்வாத் பாலேதி கதிதாப்ரியே'' என்று திரிபுரா ரகசியத்தில் கூறப்பட்டுள்ளது லலிதா சகஸ்ர நாமத்திலும் பாலா என்ற நாமாவை எடுத்து லீலா விநோதினி என்ற நாமம் உள்ளதும் கவனிக்கத்தக்கது.

பாலாம்பிகையின் அனுக்கிரகம் ஏற்பட்டால் அம்பிகையினுடைய அனுக்கிரகம் சுலபமாக ஏற்படும் என்பது உபாசனா இரகசியம்.

பாலா பருவத்தில் அம்பிகை

"பாலா'' அம்பிகையின் தியான சுலோகமே "அருண கிரண ஜாலை" என்று அவளுடைய செக்கச் சிவந்த செந்நிறத்துடன் ஆரம்பிக்கிறது. ஸ்ரீ ஸூக்தத்தில் "ஆதித்ய வர்ணே" என்று குறிப்பிடுவது இதைத்தான்.

''ஸௌபாக்ய ஸஞ்சீவினி''யில் அவள்,
உத்யத் ஆதித்ய ஸங்காசம்பில்வ கானந மத்யகாம்
தனுமத்யாம் ச்ரியம் த்யாயேத் அலக்ஷ்மீ பரிஹாரிணீம்

என்று போற்றப்படுகிறாள்.

உதய சூரியனைப் போன்றவளும், வில்வக்காட்டின் நடுவில் இருப்பவளும், இடை சிறுத்தவளும், மூதேவியை அகற்றுபவளுமான லக்ஷ்மியை தியானம் செய்கிறேன்.

"ஆதித்யவர்ணே ..... அலக்ஷ்மீ'' என்ற ரிக்குக்கு ஸௌபாக்ய ஸஞ்சீவினியில் கூறியுள்ள பிரயோகம் :-

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த ரிக்கை லக்ஷம் தடவை ஜபித்தால் லக்ஷ்மி சரஸ்வதி கடாக்ஷம் ஏற்படும். பஞ்சதசாக்ஷரியில் ஆறாவது எழுத்தான "ஹ" இந்த மந்திரத்தைக் கூறுகிறது. காயத்ரியிலுள்ள பிரணவத்தை விளக்கும் இது மோக்ஷத்தையும் அளிக்க வல்லது.

இந்த லக்ஷ தடவை ஜபத்திற்குப்பின் வில்வப் பழத்தாலோ அல்லது நெய்பாலோ பத்தில் ஒரு பங்கு ஹோமம் செய்ய வேண்டும்.

"ஐம் க்லீம் ஸௌ: ஐம் ஹ்ரீம் ச்ரீம்" என்ற பீஜாக்ஷரங்களை அநுலோக விலோமமாக 36-ந்யாஸம் செய்யவேண்டும்.

மகா லக்ஷ்மியே தான் பாலா திரிபுர சுந்தரி என்கிறது இந்த "ஸஞ்சிவினி".

மூலமந்த்ராத்மக பாலா ஸ்துதி

அயீ ஆனந்தவல்லி அம்ருத நகர
 தவீ ஆதி சக்தி:
பராயீ மாயா மாயஸ்வரூபி
 ஸ்படிகமணி மயீ மா மதங்கி ஷடங்கி 1

ஞானீ ஞான ஸ்வரூபி நலின
 பரிமலீ நாத ஓங்காரயோகி
யோகீ யோகாஸனஸ்தா
 புவனவசகரீ ஸௌந்தரி ஐம் நமஸ்தே 11 1

பாலா மந்த்ரே கடாக்ஷீ மம ஹ்ருதய
 ஸகி மத்தபாவ ப்ரசண்டீ
வ்யாலீ யஞ்சோப வீதி விகட
 கடிதடீ வீரசக்தி: ப்ரஸ்ஸாதீ 1

பாலே பாலேந்து மௌலே மதகஜ
 புஜஹஸ்தாபி ஷேக்த்ரீ
ஸ்வ தந்த்ரி காலீத்வம் காலரூபி
 கக கலனஹ்ருதி காரணீ க்லீம் நமஸ்தே 11 2

மூலாதாரே மஹிம்னீ ஹுதவஹ
 நயனீ மூலமந்த்ரீ த்ரிநேத்ரி
ஹாரா: கேயூர வல்லி
 அகில ஸுகரீ அம்பிகாயா: சிவாயா 1

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேத வேதாந்த ரூபி விததகன
கஉ வீர தந்த்ரீ பவானி
கௌரீ ஸம்ஸார யோனி ஸகலகுண
மயீ நேத்ய ஸ்ரீம் ஸௌ: நமஸ்தே II 3

ஐம் க்லீம் ஸௌ: ஸர்வ மந்த்ரே மம வர சுபகரீ அங்கனா சேஷ்டிதாயா ஸ்ரீம், ஹ்ரீம் ஹ்லீம் பீஜ முக்யைர் தினகர கிரணைர் ஜ்யோதிரூபே சிவாக்யே I

ஹ்ராம் ஹ்ரீம் ஹ்ரூம் ஹேமவர்ணே
ஹிமகரகிரணா பாசமானேந்து
சூடே க்ஷாம் க்ஷீம் க்ஷூம் க்ஷௌ
மவாஸே ஸகல ஜயகரீ சக்திபாலே நமஸ்தே II 4

இந்த பாலா மூலமந்திரத்திலுள்ள மூன்று பீஜங்களும் ஸ்ரீவித்யா பஞ்சதசாக்ஷரியின் மூன்று கூடங்களாக விளங்குகின்றன. வாக்பவ பீஜம் - ஐம், காமராஜ பீடம் - க்லீம், சக்தி பீஜம் - ஸௌ:

இவற்றிலுள்ள மெய்யெழுத்துக்களை நீக்கினால் மிஞ்சும் சுத்தமான உயிரெழுத்துக்கள் ஐம், ஈம், ஔ. இது "ஸங்கேத ஸார வித்யா" எனப்படும்.

இந்த சக்தி (ஸௌ:) பீஜத்திற்கு "பரா பீஜம்" என்று பெயர். உலகை சிருஷ்டிக்கும் சக்தியும், அழிக்கும் சக்தியும் இதற்குண்டு. இதுவே சிருஷ்டி காலத்தில் காமகலையாகவும், ஸ்திதி காலத்தில் பிரபஞ்ச வடிவமாகவும்" லய காலத்தில் பரா பீஜமாகவும் விளங்குகிறது.

இந்த மூன்று பீஜங்களை குறித்து துர்வாஸ மகரிஷி தன் ஸ்ரீ சக்தி மஹிம்ன ஸ்தோத்திரத்தில் குறிப்பிட்டுள்ள முக்கிய சுலோகங்களாவன.

வாக்பவ பீஜம் (ஐம்)

வந்தே வாக்பவ மைந்தவாத்ம
ஸத்ருசம் வேதாதி வித்யா-கிரோ
பாஷா தேசசமுத்பவா: பசுகதாச்
சந்தாம்ஸி சப்தஸ்வரான்

தாளான் பஞ்ச மஹாத் த்வனீன்
ப்ரகடயாத் யாத்மா ப்ரகாசேனயத்
தத்பீஜம் பதவாக்ய மான
ஜனகம் ஸ்ரீ மாத்ருகே தே பரம் II

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாத்ருகா வடிவான தேவியே, உன் வாக்பவ பீஜம் மூலமே வேதம், பாஷைகள், சப்த ஸ்வரங்கள், பதங்கள், வாக்யங்கள் எல்லாம் உண்டாகி யிருக்கின்றன. ஆகவே அப்பீஜத்தை வணங்குகிறேன்.

காமராஜ பீஜம் (ஈம்)

தத்தே மத்தயம பீஜ மம்ப
கலயாம் ஆதித்ய வர்ணம் க்ரியா
ஞானேச்சாதி அனந்த சக்தி
விபவ வ்யக்திம் வ்வநக்தி ஸ்ப்புடம்

உத்பத்தி ஸ்திதி கல்பத தனு
ஸ்வாதாம் ப்ரபாவேனயத்
காம்யம் பிரஹ்ம மஹரீஸ்வராதி
விபுதை காமமம் க்ரியா யோஜிதை: ll

சூரியன் போன்ற வர்ணம், கிரியை, இச்சை, ஞானம் இவைகளுக்கு காரணமாகவும் பிரும்ம, விஷ்ணு, ருத்திரனால் பூஜிக்கப்பட்டதாயும் உள்ள அந்த காமராஜ பீஜத்தை போற்றுகிறேன்.

சக்தி பீஜம் (ஸௌ:)

யத்தே தேவி திருதீய பீஜ மனல்
ஜ்வாலாவலீ ஸந்நிபம்
ஸர்வாதார துரீய பீஜ மபர
பிரஹ்மாபிதா சப்திதம்

மூர்த்தன்யாந்த விஸர்க்க
பூஜிதமஹௌ காராத் மகம் தத்பரம்
ஸம்வித்ரூப மனன்யதுல்ய
மஹிம ஸ்வாந்தே மம த்யோத தாம்

ஞான ரூபமானதும் அக்னி ஜ்வாலைகளின் கூட்டத்தைப் போல பிரகாசமுள்ளதுமான ஸௌ: என்ற சக்தி பீஜத்தை வணங்குகிறேன்.

ஒவ்வொரு பீஜமும் உத்தம பலனை அளிக்கும் என்பது பற்றி துர்வாஸர் சுலோகம்

ஏகைகம் தவ மாத்ருகே
பரதரம் ஸம்யோகி வா யோகி வா
வித்யாதி ப்ரகட ப்ரபாவ ஜனகம்
ஜாட்யாந்த்த காராபஹம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யந்நிஷ்டாச்ச மஹோத் பலாஸன
மஹா விஷ்ணு பிரஹர்த ராதயோ
தேவா: ஸ்வேஷு விதிஷ் வனந்த
மஹிம ஸ்ப்பூர்த்திம் ததத்யேவ தத் II

ஒவ்வொரு பீஜமும் வேண்டிய பலனைத் தரக்கூடியது. பிரும்மா, விஷ்ணு, ருத்திரன்களுக்கே அவர்கள் செய்யும் வேலைக்கு ஆற்றல் தந்திருப்பது இந்த பீஜங்களே. ஏதாவது ஒரு பீஜத்தை தனியே உபாசிப்பதாகலேயே கூட எல்லா நலன்களும் சித்திக்கின்றன.

இந்த பாலா சூரிய கிரணம் போல சிவப்பாகவும், சந்திர கிரணம் போல வெண்மையாகவும் விளங்குகிறாளாம். பாலா மந்திரத்தின் ஒளியே மூலாதாரம் முதல் பிரம்மரந்திரம் வரை பிரகாசிக்கின்றது.

பிரளய காலத்தில் தோன்றும் அக்னி போன்ற காந்தி மூலாதாரத்திலிருந்து அநாகதத்தைத் தொடுகிறது. இது முதல் கூடம்.

கோடி சூர்யப் பிரகாசம் போன்ற மற்றொரு காந்தி அநாகதத்தி லிருந்து ஆக்ஞை வரை சென்று தொடுகிறது. இது இரண்டாவது கூடம்.

சந்திரனைப் போன்ற ஒளி மிகுந்த மற்றொரு காந்தி ஆக்ஞை முதல் நெற்றி வரை வியாபித்திருக்கிறது. இது மூன்றாவது கூடம். ஸ்ரீ வித்யையின் மந்திர ரூபமான தியானம் இதுவே. "பாலா" மந்திரத்தின் மூன்று எழுத்துக்களைக் கொண்டே பதினென் சித்தர்கள் அரிய பெரிய ஸித்திகளை அடைந்திருக்கிறார்கள். பாலா மந்திரம் பற்றி திரைலோக்ய வசகாரிணி என்று மந்திர சாஸ்திரத்தில் கூறப்படுகிறது. நிச்சய ஞானமுடையவனுக்கு பாலா மந்திரமே போதும்.

பாலா உபாசகர்களுக்கு ஸ்ரீ சக்ர நவாவரண பூஜை கிடையாது. இவர்கள் பூஜிக்கும்போது நியாஸங்கள் அதிகம் இல்லை. மூலமந்திர நியாஸமும் மாத்ருகா நியாஸமும் தான் உண்டு.

ஆலயங்களும் ஆகமங்களும்

(ஆலயங்கள் பற்றிய சகல விஷயங்களும் கொண்ட அறிய நூல்)

பிரதிபாவின் 86-வது புத்தகமாக வெளிவந்துள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பஞ்சதசியும் ஷோடசியும் 8

த்ரைலோக்ய மோஹனாதி சக்ரேஸ்வரி
த்ரைபத பரபிரும்ம மஹிஷி பாஸ்வரி
ஸாலோகாதி முக்திப் பிரதானகரி
ஸதாசிவகரி குரு குஹோ தயகரி
மூலாதி நவா தாரேஸ்வரி சுபகரி
நீலாலகதரி நித்யாநந்தகரி
லீலா விஸ்வோத் பத்தி ஸ்திதி லயகரி
பாலா பரமேஸ்வரி பஞ்சதசாக்ஷரி

மூவுலகங்களையும் மயக்குவது முதலான சக்ரங்களின் ஈஸ்வரியே, ஓங்காரமாகிய பரப்பிரும்மத்தின் பட்டத்து ராணியே, ஸாலோகம் முதலிய முக்திகளைத் தருபவளே, குருவாகிய குகக் கடவுளைத் தோற்றுவித்த தாயே, அழியாது மாறாது எப்போதும் நிலைத்திருக்கும் ஆனந்தத்தைத் தருபவளே, வாலைப் பருவத்து இளம் பெண்ணாகவும் விளங்கும் பரமேஸ்வரியே, பதினைந்து எழுத்துக்களாலான பஞ்ச தசாக்ஷரி மந்திரத்தை ஸ்வரூபமாக உடையவளே, உனக்கு நமஸ்காரம்.

ஸௌபாக்ய வித்யா

எல்லா ஸௌபாக்கியங்களும் அளிப்பதால் ஸ்ரீ வித்யைக்கு "ஸௌபாக்ய வித்யா" என்ற பெயர் பொருந்தும்.

பாலா பீஜங்களை ஒவ்வொரு கூடத்தின் முன்பு கூட்டி ஜபிப்பது ஸௌபாக்ய வித்யா.

இந்த பாலா மந்திரங்கள் சேரும்போது பஞ்ச தசாக்ஷரி ஸௌம்ய மாகிறது. ஸௌபாக்ய வித்யா ரூபம் காதி பஞ்சதசாக்ஷரிக்கு மட்டுமே ஏற்பட்டது.

ஐம்	-	க ஏ ஈ ல ஹ்ரீம்
க்லீம்	-	ஹ ஸ க ஹ ல ஹ்ரீம்
ஸௌ:	-	ஸ க ல ஹ்ரீம்

மகா திரிபுரசுந்தரியின் மந்திரம் பஞ்சதசாக்ஷரி, ஷோடசாக்ஷரி என்ற இரு வகைகளில் விளங்குகிறது.

பஞ்சதசாக்ஷரி 'க' காரத்தில் தொடங்குவது, 'ஹ' காரத்தில் தொடங்குவது, 'ஸ' காரத்தில் தொடங்குவது என்ற மூன்று வகைகளில் பிரசித்தமாயுள்ளது. முதல் வகைக்கு "காதி வித்யை" என்றும், இரண்டாவது வகைக்கு "ஹாதி வித்யை" என்றும், மூன்றாவது வகைக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"ஸாதி வித்யை" என்றும் பெயர். முதல் வித்யை காமனாலும், இரண்டாவது லோபா முத்திரையினாலும், மூன்றாவது நந்தியினாலும் கையாளப்பட்டது. சூரியன், பிரும்மா போன்றவர்கள் வழிபட்ட பஞ்ச தசாக்ஷரிகளும் உண்டு. ஸ்ரீ வித்யை பன்னிரெண்டு மந்திர திருஷ்டர்களால் 12 விதமாக அமைந்திருக்கிறது. இவர்கள் மது, சந்திரன், குபேரன், லோபா, முத்ரா, மன்மதன், அகஸ்தியர், அக்னி, சூரியன், இந்திரன், ஸ்கந்தன், சிவன், துர்வாஸர்.

இப்படி எத்தனையோ வேற்றுமைகள் பஞ்ச தசாக்ஷரியில் உண்டு. ஆனால் இப்போது உபதேசக் கிரமத்தில் வழக்கிலுள்ளது முதலாவதான காதி வித்யையும், இரண்டாவதான ஹாதி வித்யையுமேயாகும்.

பஞ்ச தசாக்ஷரி மூன்று மூன்று பகுதிகள் கொண்டது. மூன்று பகுதிகள் மூன்று கூடங்கள் என்றழைக்கப்படுகின்றன.

காதி வித்யையில் என்ன விசேஷம் என்றால் முதல்கூடம் "க" வில் ஆரம்பிப்பதால் காதி வித்யையும், இரண்டாவது கூடம் "ஹ" வில் ஆரம்பிப்பதால் ஹாதி வித்யை தன்மையும், மூன்றாவது கூடம் "ஸ" வில் ஆரம்பிப்பதால் ஸாதி வித்யை தன்மையையும் ஒருங்கே கொண்டதாக விளங்குகிறது. இந்த காதி பஞ்சதசாக்ஷரியின் 15 எழுத்துக்களும் திரிசதி நாமாக்களுக்கு தொடக்கமாக இருப்பதும் இந்த வித்யையின் பெருமைக்குச் சான்று.

மஹா ஷோடசியின் பூர்ணமான ரூபத்தில் இடம் பெற்றிருப்பதும் இந்த பஞ்ச தசாக்ஷரியேயாகும். இந்த பஞ்ச தசாக்ஷரிக்கே பாஸ்கரராயர் தன் "வரிவஸ்யா ரகசியம்" என்ற நூலில் 15 பொருள்கள் காட்டியுள்ளார். பஞ்ச தசாக்ஷரி மந்திரமே உமா மகேஸ்வர ஸ்வரூபமானது.

பஞ்ச தசாக்ஷரீ

பஞ்ச தசாக்ஷரீ
பிரஹ்மா யோனி ரமா ஸுரேஸ்வர
ஹ்ருல்லேகாபி ருக்தைஸ்ததா
மார்த்தாண்டேந்து மனோஜ ஹம்ஸ
வஸுதா மாயாபி ருத்தம் ஸிதை
ஸோமாம்பு க்ஷிதி சத்திபி:
ப்ரகடிதைர் பாணாங்க வேதை: க்ரமாத்
வர்ணை: ஸ்ரீ சிவதேசிகேன விதிதாம்
வித்யாம் த்வாம் பாச்ரயே
- துர்வாஸர் (சக்தி மஹிம்ன ஸ்தோத்திரம்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

க (பிரஹ்மா), ஏ (யோனி), ஈ (ரமா), ல (சுகேஸ்வர), ஹ்ரீம் (ஹ்ருல்லேகாபி:) இவற்றால் கூறப்பட்டதும்.

ஹ (மர்த்தாண்ட), ஸ (இந்து), க (மனோஜ), ஹ (ஹம்ஸ) ல (மாயாபி:), ஹ்ரீம் என்று கூறப்பட்டதும்.

ஸ (ஸோம), க (அம்பு), ல (க்ஷிதி) ஹ்ரீம் என்று கூறப்பட்டதும்.

ஐந்து (பாண), ஆறு (அங்க), நான்கு (வேதை:) என்று வரிசையில் எண்ணிக்கைகளுடன் கூடியதும், உலக குருவான சிவபெருமானால் அறியப்பட்டதுமான உன் வித்தையை நான் சரணடைகிறேன்.

ஒவ்வொன்றுக்கும் மூன்று குணங்கள் என்ற அடிப்படையில் பஞ்சதன் மாத்திரைகளுக்கு 15 குணங்கள். இதிலிருந்து பஞ்சதசாக்ஷரி வித்தை ஆவிர்பவித்தது.

பதினைந்து பீஜங்களும் பதினைந்து நித்யைகளின் வாசகங்களாக இருப்பதால் இந்த வித்யையும் நித்யைகளும் ஒன்றே. சர்வ காரிய காரணமாகும் ஆத்மாதான் மகா நித்யை. இதுவே ஷோடசீ கலை.

ஒவ்வொரு நித்யையும் பகலில் பிரகாச ரூப சிவாத்மகமாகவும், இரவில் விமர்ச வடிவ சக்தியாத்மகமாகவும் விளங்குகின்றனர். காலாதிஷ்டான தேவதைகளே திதி நித்யைகள்.

தேவியின் முக மண்டலம் 16 கலைகளுடன் பூர்ண சந்திரன் போல் உள்ளது. அதன்படி 16 நித்யைகளுடன் அம்பிகை விளங்குவதாக ஸ்ரீவித்யை வருணிக்கிறது. இவர்கள் காமேஸ்வரி, பகமாலினி, நித்யக்லின்னா, பேருண்டா, வஹ்னி வாசினி, மகாவஜ்ரேஸ்வரி, சிவதூதி, த்வரிதா, குலசுந்தரி, நித்யா, நீலபதாகா, விஜயா, சர்வமங்களா, ஜ்வாலமாலினி, சித்ரா, மகாநித்யா, கடைகண்டம் மூன்று எழுத்தும், முதற் கண்டம் 4 எழுத்தும் இடைக் கண்டம் 5 எழுத்துமாக, கண்டந் தோறும் இறுதியில் மாயையில் (ஹ்ரீம்) எழுத்தை பொருந்தியிருப்பதாலே தேவிக்கு பஞ்ச தசாக்ஷரி என்ற பெயர் அமைந்தது.

முதல் கண்டத்தும், கடைக் கண்டத்தும் சக்தியின் எழுத்தும், மூன்று கண்டத்தும் மன்மதன் எழுத்தும் வருவது பயன் கருதிய முறைமை.

சிவ: சக்தி: காம: க்ஷித்ரத ரவிச் சீதசிரண
ஸ்மரோ ஹம்ஸ சக்ரஸ் தததுச பரா மராஹரி:

இவர்களைப் பற்றிய தியான சுலோகங்கள் முழு விவரம் "பிரதிபா பிரசுரத்"தின் "அன்னை பராசக்தி"யில் விளக்கப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அம்ஹ்ருல்லே காபி: திஸ்ரூபி அவஸா நேசு கடிதா:
பஜந்தே வர்ணாஸ்தே தவஜனனீ நாமவய வதாம் பிம்மாரஹரய:
ஸௌந்தர்யலஹரி (32)

சிவன், சக்தி, காமன், பூமி ஆகியவர்களின் பீஜங்களே க, ஏ, ஈ, ல என்ற நான்கு எழுத்துக்களும், ஞாயிறு, திங்கள், மாரன் ஹம்சம், இந்திரன் ஆகியவர்களின் எழுத்துக்களான ஹ, ஸ, க, ஹ, ல என்னும் ஐந்தும் அக்ஷரங்களும், பரா, மாரன், திருமால் ஆகியவர்களின் மூல எழுத்துக்களான ஸ, ஹ, ல என்ற மூன்று பீஜங்களும்.

இம்மூன்றிலும் கடைசியில் ஹ்ரீம் சேர்க்கப்பட்டு உன் மந்திரமாக விளங்குகிறது. இத்தகைய பெருமையுள்ளதாய் இது விளங்குவதால் ஆகமங்களிலும் திருமுறைகளிலும் அருமையாகவும் மறைவாகவும் வைத்துப் போற்றப்பட்டுள்ளது.

வட்டமென் முலை யாளுமை பங்கனார்
எட்டும், ஒன்றும் இரண்டும் மூன்றாயினார். - தேவாரம்

ஹகாரஞ்ச ஸகாராஞ்ச ககாராஞ்ச ஹகாரகம்
லகாரஞ் சைவ ஹ்ரீம்காரம் ககாரஞ்சைவ ஏகாரகம் I
ஹகார லகார ஹ்ரீம்காரஞ்ச ஸகாரஞ்ச ககாரகம்
ஹகாரஞ்ச லகாரஞ்ச ஹ்ரீம்கார வதிமரூ மதும்
த்ரிபுரா மந்திரகம் பரோக்தம் ததாபஞ்ச தசாங்சரீம் - காமிகாகமம்

காதி வித்யையே சிறந்தது

ஆதிசங்கரர் சௌந்தர்ய லகரியில் 32 சுலோகங்களில் காதி வித்யையை பிரகடனம் செய்கிறார். இந்த காதி வித்யை சிறந்தது என்பது லலிதா சகஸ்ரநாமத்தில் ஸ்ரீ வித்யை வ்து மந்த்ராணாம் தத்ர காதிர் யதா பரா என்று சொல்லப்பட்டிருக்கிறது.

காதி வித்யை பற்றி அதர்வண வேதத்தில் இருக்கும் த்ரைபுர ஸூக்தத்தில்,

காமோ யோனி: காமகலா வஜ்ரபாணி:
குஹா ஹஸா மாதரிச்வா ப்ர மிந்திரா:
புனர்குஹா ஸகலா மாய்யாச
புருச்சேஷா விச்வமாதாதி வித்யோம் II

என்ற ருக்கில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஹாதி வித்யை காமேஸ்வர வித்யை என்றும் காதி வித்யை காமேஸ்வரி வித்யை என்றும் தத்தாத்ரேய ஸம்ஹிதையில் கூறப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரம ரகசியம் ஏன்?

ஸ்ரீ வித்யை மிகவும் மகிமை பொருந்தியது. மோக்ஷத்தைக் கொடுப்பது. ஆகவே இதை பரம ரகசியமாக வைத்துக் கொண்டு உபாசனை செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ராஜ்யந்தேயம் சிரோதேயம் ந தேயா ஷோடசாக்ஷரீ.

- லலிதா திரிசதி

ஒருவன் தன் அரசினை கொடுத்தாலும் கொடுக்கலாம். சிரசைக் கொடுப்பினும் கொடுக்கலாம் ஸ்ரீ வித்யை (கண்டவர்களுக்கு) கொடுத்து விடலாகாது.

ஸ்வமாத்ரு ஜராவத் கோப்யா வித்யை ஷேத்யாகமா சுகு
ததோதி கோபந் யாமே சர்வபூர்த்தி கரீஸ்துதி ॥

ஒருவன் தன் தாயின் கூடா ஒழுக்கத்தை எப்படி வெளிப்படுத்தாமல் மறைத்து வைப்பானோ அப்படியே ஸ்ரீவித்யையும் மறைவாகப் போற்றி வைத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று ஆகமங்களில் சொல்லப் பட்டிருக்கிறது. அதனால் தான் இந்த வித்யை குலஸ்திரீக்கு ஒப்பிடப்பட்டுள்ளது.

வேச்யா இவ ப்ரகடா: வேதாதி வித்யா:
ஸர்வேஷு தர்சவேஷு குப்தேயம் வித்யா ॥

- பரசுராம கல்ப ஸூத்திரம்

இதை தக்க யோக்யதையுள்ள சிஷ்யர்களுக்கே உபதேசிக்க வேண்டும்.

ப்ருயாத் சிஷ்யாய பக்தாய ரஹஸ்யமபி தேசிகா: ।
பவதா ந ப்ரதேயம் ஸ்யாத் அபக்தாய கதாசன ।
ந சடாய ந துஷ்டாய ந விச்வாஸாய கர்ஹிசித் ॥

- லலிதா சகஸ்ரநாமம்.

சக்தியின் உபாசனை அந்தக்கரணத்திற்கு மட்டும் தெரியும்படியாக இருக்கவேண்டும் என்பது தாத்பர்யம்.

ஸ்ரீ வித்யை உபதேசம் சாமான்ய தபஸ்ஸினால் கிடைக்கக் கூடியதல்ல என்றும் கடைசி ஜன்மத்தில் தான் கிடைக்கக் கூடியது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

மந்த்ரராஜ ஜபச்சைவ சக்ரராஜார்ச்சனம் ததா
ரகஸ்ய நாமக் பாடச்ச நால்பஸ்ய தபஸ: பலம் ॥

- லலிதா சகஸ்ரநாமம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யஸ்ய நோ பச்சிமம் ஜன்ம யதிவா சங்கர: ஸ்வயம்
தேனைவ லப்யதே வித்யா ஸ்ரீமத் பஞ்சதசாக்ஷரீ
இதி தந்த்ரேஷு பஹுதா வித்யாய மஹிமோச்யதே II

- லலிதா திரிசதி

இந்த ஸ்ரீ வித்யை பரமசிவனால் தன் பிரகாச விமர்ச ரூபங்களாகிய சிவ சக்தி ரூபங்களால் குரு சிஷ்ய பாவமாக இருந்துக் கொண்டு வெளிப்படுத்தியதாகக் கூறப்பட்டுள்ளது.

இவ்விஷயம் சௌந்தரிய லஹரி 31-வது சுலோகமாகிய சது: ஷஷ்ட்யா தந்த்ரை: என்பதில் சொல்லப்பட்டிருக்கிறது.

சம்பு: பூஜ்யதே தேவீம் மந்திர சக்தி மயீம் சுபாம் I

என்றபடி பரமசிவனே ஆதிநாதர். அம்பிகையின் உபாசகர்களில் முதல்வர்; அம்பிகையே குருமூர்த்தி என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மஹா ஷோடசி

ஸ்ரீ மாதஸ் திரிபுரே பராத்பரதரே தேவீ த்ரிலோகீ மஹா
ஸௌந்தர்யார்வை மந்த்தணோத் பவஸுதா

ப்ராகர்யவர்ணோஜ் வலம் II

உத்யத்பானு ஸஹஸ்ர நூதன.
ஜபாபுஷ்ப ப்ரபம் தே வபு:
ஸ்வாந்தே மே ஸ்ப்புரது திரிகோண நிலயம்
ஜ்யோதிர்மயம் வாங்மயம் II

- ஸ்ரீ சக்தி மஹிம்ன ஸ்தோத்திரம் (துர்வாஸர்)

ஸ்ரீ	-	ஸ்ரீம்
மா	-	ஹ்ரீம்
த்ரிபுரே	-	க்லீம், ஐம், ஸௌ:
ஏ (ஆ + ஈ)	-	ஓம்
பராத்	-	ஹ்ரீம்
பாதரா	-	ஸ்ரீம்
திரிலோகி	-	க 5, ஹ 6, ஸ 4
மஹா ஸௌந்தர்ய	-	ஸௌ:
ப்ராகர்ய வர்ணோஜ்வலம்	-	ஐம்
உத்ய ப்ரபம்	-	க்லீம்
தேவபு:	-	ஹ்ரீம்
(ஸ்வாந்தே	-	இறுதியில்)
மே	-	மா + க = ஸ்ரீம்
ஈ	-	காமகலை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஷோடசி

லகு ஷோடசி, மகா ஷோடசி என்று இருவகை. லகுவில் பஞ்சதசாக்ஷரியின் இறுதியில் "ஸ்ரீ" என்ற லக்ஷ்மி பீஜம் சேர்ந்து 16 எழுத்தாகிறது.

மகா ஷோடசியில் வாக்பவ காமராஜ கூடங்கள் மூன்றும் மூன்று எழுத்துக்களாகக் கணக்கிடப்பட்டு வேறு 13 பீஜங்கள் சேர்ந்து 16 எழுத்துக்கள் ஆகின்றன.

மகா ஷோடசியில் இது பூர்ணமான வடிவம். ஆதனால் பூர்ண ரூபா ஷோடசி எனப்படுகிறது. காதி பஞ்சதசாக்ஷரி இவ்விடத்தில் சுத்தமான ரூபத்தில் வருவதால் இம்மந்திரம் நெறியுடைய துறவிகளால் அன்றி மற்றவர்களால் எளிதில் பரிபாலிக்கக் கூடியது அல்ல. யாவருக்கும் நிர்ப்பயமாக ஏற்றுக் கொள்ளக்கூடிய வடிவம் பீஜ ரூபஷோடசியே ஆகும். இவ்வடிவத்தில் காதி பஞ்சதசாக்ஷரி மூன்று கூடங்களுக்குப் பதில் பாலா மந்திரத்தின் மூன்று பீஜங்கள் இடம் பெற்றிருக்கின்றன.

ஸ்ரீம், ஹ்ரீம், க்லீம் ஐம் ஸௌ: ஓம் ஹ்ரீம் ஸ்ரீம், ஐம் க்லீம் ஸௌ: ஸௌ: ஐம் க்லீம் ஹ்ரீம் ஸ்ரீம் பீஜரூப ஷோடசியில் சரியாகப் பதினாறு எழுத்துக்களே அமைந்துள்ளன. பீஜரூபஷோடசி மிகமிக ஆற்றலுடைய நிர்ப்பயமாக வழிபடக்கூடிய மந்திர ஸம்ராஜ்ஞீ என அறியவும். இந்த மந்திரத்தில்,

ஸ்ரீம் ஹ்ரீம் ஐம் க்லீம் ஸௌ: ஆகிய ஐந்து எழுத்துக்களுக்கும் மூன்று முறை வந்திருக்கின்றன. (5 X 3) பிரணவம் (ஓம்) ஒரு முறை வருகிறது. ஆக பதினாறு எழுத்துக்கள் பீஜாக்ஷரங்களுக்குள்ளேயே மிகச் சிறந்தனவாக மந்த்ர சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள ஐந்தும் இம்மந்திரத்தில் மூன்று முறை வருவது வெகு விசேஷமாகும். இந்த ஐந்து பீஜங்களுக்கும் பஞ்சப்ரவணங்கள் என்று பெயர் உண்டு. ஐந்தும் விமர்ச ப்ரணவங்கள் எனப்படும். (ஓம்) என்பது ப்ரகாச ப்ரணவம். பூர்ண ஷோடசியில் ஆறு முறை ஹ்ரீங்காரம் வருவது சிறப்பாகும். ஆயினும் காதி வித்யை சுத்தமாக அப்படியே வருவது யாவரும் எளிதில் நிர்ப்பயமாக ஈடுபடக்கூடியதல்ல என்பதை மறந்து விடக்கூடாது. லக்ஷ்மி பீஜத்தில் ஸ்ரீம் தொடங்கும் மஹா ஷோடசியைப் போல், ஹ்ரீங்காரத்திலும் ப்ரணவத்திலும் க்லீம் காமராஜ பீஜத்திலும் ஐம் வாக்பவ பீஜத்திலும் ஸௌ: பராபீஜத்திலும் தொடங்கும் மஹா ஷோடசிகளும் உண்டு. விரிவுகளையெல்லாம் நேரில் குரு முகமாக அறியவேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

லக்ஷ்மி பீஜத்தில் தொடங்குவது - ரமாதி ஷோடசி: ப்ரணவத்தில் தொடங்குவது தாராதி ஷோடசி: காமராஜ பீஜத்தில் தொடங்குவது - காமாதி ஷோடசி: வாக்பவத்தில் தொடங்குவது - வாகாதி ஷோடசி: ஹ்ரீங்காரத்தில் தொடங்குவது - மாயாதி ஷோடசி பராபீஜத்தில் தொடங்குவது - பராதி ஷோடசி.

பிரணவத்தில் தொடங்கும் மஹா ஷோடசியைத் தவிர மற்ற ஐந்து ஷோடசிகளுக்கும் ஸ்ரீ சக்ர பூஜையில் தனி தனி சக்திகளுக்குரிய பூஜைகள் உள்ளன. முறைப்படி நவாவரண தேவதைகளைப் பூஜித்த பின்னர் இவ்வைந்து ஷோடசிகளுக்குரிய சக்திகளையும் பூஜிக்க வேண்டும்.

பஞ்சதசாக்ஷரியின் மூலம் மஹாத்ரிபுரஸுந்தரியாக வழிபடுபவர்களுக்குக்கும், லகு ஷோடசி அல்லது மஹா ஷோடசியின் மூலம் மஹா த்ரிபுரஸுந்தரி பராபட்டாரிகையாக வழிபடுபவர்களுக்குமே ஸ்ரீ சக்ர நவாவரண பூஜையில் ஈடுபட அதிகாரமுண்டு. பஞ்சதசாக்ஷரீ அல்லது லகுஷோடசி உபாசகர்களை விட மஹா ஷோடசி உபாஸகர்களுக்கு ஸ்ரீசக்ர பூஜையில் பல விசேஷ அம்சங்கள் உண்டு. மஹாஷோடசி உபாஸகர்கள் செய்யும் ஸ்ரீ சக்ர பூஜை ஒரு மிகப்பெரிய யக்ஞமாகும். தற்காலத்தில் மஹா ஷோடசி உபாஸகர்களுக்கிடையில் முறைப்படி ஸகல விரிவுகளுடனும் ந்யாஸங்களுடனும் ஜபம் செய்பவர்களும் ஸ்ரீசக்ர நவாவரணரூப மஹாயக்ஞம் செய்பவர்களும் அநேகமாக இல்லையென்றே சொல்லி விடலாம்.

"ஓம்காரி என்பாள் அவள் ஒரு பெண்பிள்ளை" என்றார் திருமூலர்.

அகாரமாவது ஐம் மூன்றாகுமப்பா
  உகாரமாவது மூவிரண்டாமே பிள்ளாய்
மகாரமாவது மறைந்துள்ள தொன்றே கேளாய்
  அகார உகார மகாரம் சேர்ந்தது தம்பீ 1
ஓங்கார ரூபமாய் உண்மைக் கிருப்பிடமது
  ஐங்காரமாகியே ஐயைந்துக் கிடம்கொடுத்து
ஹ்ரீம் காரத்திற்குள்ளே இனிதிருந்த தன்மையினா
  ஸ்ரீங்கரமான ஷட்விம்ஜக பாவமப்பா 11

ஷட்விம்ஜக பாவம் என்றால் 26-ஆகத்தோன்றும் ஓர் திவ்ய சங்கல்பம் இந்த 26-ஐ 15-ம் 10-மாகப் பிரித்து பூர்ணமாக உணரவல்லார் மஹத்துக்களாவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பஞ்சாக்ஷரி 15-ஐ அகாரமாகவும் அதாவது ஸ்தூல தன் மாத்திரையாகவும்,

ஷடாக்ஷரி 15-ஐ உகாரமாகவும் அதாவது சூக்ஷ்ம தன் மாத்திரையாகவும்,

ஏகாக்ஷரி ஒன்றை மகாரமாகவும் அதாவது சர்வ காரண பூதா சக்தியாகவும்,

இம்மூன்றும் சேர்ந்த ஒன்றை சோமாஸ்கந்த மூர்த்தியான ஓம்கார ரூபமாகவும்,

அந்த சோமாஸ்கந்த மூர்த்தியின் புருவ மத்தியிலிருந்து உண்டான ஐம் காரியை துர்க்கையாகவும் அவளின் சாந்த சக்திரூபமாம் க்லீம் காரியை சரஸ்வதி அல்லது பவானியாகவும்,

பஞ்சீகரண விதியால் விளைந்த பாக்யமாம் ஸ்ரீங்காரத்தை சமஷ்டி வித்தையாம் லக்ஷ்மி அல்லது புவனேஸ்வரியாகவும் பாவித்து வழிபட வேண்டும்.

ஸ்ரீ பஞ்சகம்

ஸ்ரீ வித்யா தத்வார்த்தங்கள் கொண்டது.

ஸ்ரீ வித்யைப் பற்றிய இதர நூல்கள்

* ஸ்ரீ சக்ர நாயகிகள்
* சண்டி ஹோம விதானம்
* தேவி நவாவரண பூஜை
* ஷடன்வய ஸாம்பவாக்ய பூஜா
* குண்டலினி சக்தி
* ஸ்ரீ வித்யா ஹோமம்
* ஸ்ரீ வித்யா லகு பூஜை
* தேவி மானஸ பூஜை
* ஆறாதாரங்களில் அம்பிகை
* ஜபமாலா
* சியாமளா வாராஹி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவியின் மந்திர ஜபம் 9

ஏகைகம் தவதேவி பீஜமநகம்
ஸவ்யஞ்ஜ நாவ்யஞ்ஜனம்
கூடஸ்தம் யதிவா ப்ருதக் க்ரமகதம்
யத்வா ஸ்கிதும் வ்யுத்க்ரமாத் ll
யம் யம் காமம மபேக்ஷ்யா யேந விதிநா
கேநாபி வா சிந்திதம்
ஜப்தம் வா ஸபலீ கரோதி ஸததம்
தம் தம் ஸமஸ்தம் ந்ருணாம் ll

- லகுஸ்தவம், காளிதாஸன்

கங்கையின் ஜலம் போல பரிசுத்தமாக இருக்கிற உன் பீஜாக்ஷரம் ஒவ்வொன்றாகவோ, மெய்யெழுந்துக்களுடன் கூடியதாகவோ, கூடாததாகவோ இரண்டு முதல் 6 வரையிலுள்ள கூடாக்ஷரங்களுடன் கூடியதாகவோ அல்லது கூடாததாகவோ கிரமத்தை அனுசரித்திருந்தாலும் அனுசரிக்காமல் இருந்தாலும் எப்படி சிந்தை செய்தாலும், ஜபம் செய்தாலும், மனிதர்களின் அபிலாகைக்ஷகளை அம்மந்திரம் விர்ரவில் சித்திபெறச் செய்கிறது.

உபாசகன்-தேவதை குரு, மந்திர இவைகளுடன் தன்னையும் ஒன்று சேர்த்து அபேதவடிவாகக் கருதி தியானம் செய்ய வேண்டும். பாதம் என்றால் காலுக்கு மட்டும் பெயரில்லை. உடலில் கால் பாகமான முழங்கால் வரை பாதம் இடுப்புப் பகுதி அரைபாகம்.. (இதில் கட்டும் நூலுக்கு அரைஞான் என்று பெயர்).

பிரும்ம சூத்திரமும் பாதம் பாதமாக பிரிக்கப்பட்டுள்ளது. பாதம் என்று பிரித்தால் அது நான்காகவே இருக்கும். நான்கு பாதம் இருப்பவை தான் நன்றாக நிற்கமுடியும். ஒவ்வொரு சிவாகமத்திலும் நான்கு பாதம். அவை சரியை, கிரியை, யோகம், ஞானம்.

சரியை:- அவரவர்கள் அனுஷ்டானம் வைத்துக்கொண்டு தீக்ஷை பெற்ற நல்ல ஒழுக்கத்துடன் அனுஷ்டானங்களைச் செய்வது.

கிரியை - இறைவனை அந்தர் முகமாகவும், பஹிர் முகமாகவும், பூஜை செய்யும் முறை.

யோகம்:- தியானம், மனதை அடக்குதல்.

ஞானம்:- அறிவு, விசாரணை.

ஸ்ரீ வித்யை உபாசனையிலும் இந்த நான்கு பாதங்கள் உண்டு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"மூல மந்திராத்மிகா" என்று அம்பிகைக்கு ஒரு பெயர். சகலத்திற்கும் காரணமான மந்திரவடிவாக இருப்பவள் என்று இதன் அர்த்தம். கை, கால், முகம் முதலிய உருப்புகளுடன் கூடிய தேவியின் ஸ்தூல சரீரத்தை தியானம் செய்து மனம் பழக்கப்பட்டபின் அடுத்த படியாக மந்திர வடிவமான தேவியின் சூக்ஷ்ம ரூபத்தில் தியானிக்கப் பழகவேண்டும்.

வேதத்திலிருந்து உலகம் உண்டாயிற்று. வேதம் காயத்ரியிலிருந்து உண்டாயிற்று. தேவி காயத்ரியே பஞ்ச தசாக்ஷரி. (15 அக்ஷரங்கள்) அதிலிருந்தே வேதமும் உலகமும் சகலமும் உண்டானதால் அம்பிகை "மூலமந்திரரூபினி" எனப்படுகிறாள். தேவியை வழிபட ஆறு மார்க்கங்கள். (பதாத்வா, புவனாத்வா, வர்ணாத்வா, தத்வாத்வா, கலாத்வா, மந்திராத்வா).

இவைகளில் மந்திரங்களில் உள்ள பதங்களையே அம்பிகை என உபாஸிப்பது "பதாத்வா" "அ" முதல் "க்ஷ" வரையுள்ள மாத்ருகா அக்ஷரங்களை தேவி என்று உபாஸிப்பது "வர்ணாத்வா" ஏழு கோடி மகா மந்திரங்களை தேவியின் ரூபமாகக் கருதி அம்பிகையை வழிபடுவது "மந்த்ராத்வா".

இந்த ஏழுகோடி மந்திரங்களும் நேராகவோ அல்லது மறைவாகவோ சக்தியைத் தான் குறிப்பிடுகின்றன. ஆகவே அம்பிகை "ஸர்வ மந்திர ஸ்வரூபிணி".

மஹா மந்திரங்கள் எனப்படுபவை "பாலை" "புவனேஸ்வரி", பஞ்ச தசாக்ஷரி, ஷோடசி, பிரத்யங்கிரா, பகளா என்று பலவித அம்பிகை மந்திரங்கள் உள்ளன. இவ்வளவு மந்திரங்கள் உள்ள மற்ற தேவதையை காண்பது அரிது. இம்மந்திரங்கள் சரிவர அனுஷ்டிக்கப்பட்டால் துரிதமாக பலன் தரக்தக்கவைகள். அம்பிகை இந்த மகா மந்திரங்களில் ஸ்வரூபமாக இருக்கிறாள் என்பதையே "மகா மந்திராயை" என்ற நாமம் குறிப்பிடுகிறது.

எப்படி தியானிப்பது ?

மந்திரரூபமான அம்பிகையை எப்படி தியானிப்பது?

"ஸ்ரீமத் வாக்பவ கூடைக ஸ்வரூப முகபங்கஜ" வாக்பவ கூடம் என்பது முகம். வாக்கு முகத்திலிருந்து தானே வெளிப்படுகிறது.

அம்பிகையின் பஞ்ச தசாக்ஷரி என்ற மந்திரம் காயத்ரி போல மூன்று பாதமாக அமைந்துள்ளது. முதல் பாதம் க ஏ ஈ ல ஹ்ரீம் 5 அக்ஷரங்கள். அது ஞானத்தை அளிப்பது. இந்த முதல் பாதமே தேவியின் முகாரவிந்தம். இது ஞானசக்தி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த மந்திரத்தின் முதல் பாகத்தை மனம் நினைக்கும் போதே அம்பிகையின் பூர்ண சந்திர முகம் மனதில் தியானிக்கப்படவேண்டும். சரத்கால சந்திரன் மிகத் தெளிவாக இருக்கும். சரத்காலத்தில் தேவி பூஜா காலத்தில் சந்திரனுக்கு ஒரு தனி சோபை அதனால் சந்திரன் தேவி முகத்திற்கு உவமை கூறும் பாக்கியம் பெற்றான் (சரத் சந்திர நிபானனா).

பஞ்ச தசாக்ஷரியின் அடுத்த பதம் ஆறு அக்ஷரம் உள்ளது. (ஹ ஸ க ஹ ல ஹ்ரீம்) இது தேவியின் கழுத்திலிருந்து இடுப்பு வரை உள்ள சரீரம். இம்மந்திரப் பகுதி தியானிக்கப்படும்போது அம்பிகையின் கழுத்து முதல் இடுப்பு வரை தியானிக்கவேண்டும். ''கண்டாத கடிபர்யந்த மத்யகூட ஸ்வரூபிணி'' என்பது இதை விளக்குகிறது. இதை காமராஜகூடம் என்பர். இது இச்சா சக்தி.

இடுப்பின் கீழுள்ள பாகத்திற்கு சக்திகூடம் என்று பெயர் மூலாதார சக்தி இருக்கும் பாகமாதலால் இது சக்தி கூடமாயிற்று. பஞ்ச தசாக்ஷரியின் மூன்றாவது பாதம் நான்கு அக்ஷரம் உள்ளது. (ஸ க ல ஹ்ரீம்) இது கிரியா சக்தி.

இந்த பஞ்சதசி மூல மந்திரத்திலுள்ள மூன்று கூடங்களை உடலாக உடையவள் அம்பிகை. இதுவே அம்பிகையின் சூக்ஷ்மதர ரூபம்.

வர்ணத்தியானம்

இந்த இன்ன பலன்களுக்கு அம்பிகையை இன்ன வர்ணத்தில் தியானிக்கவேண்டும் என்ற வரை முறை உண்டு.

லலிதா உபாக்கியானத்தில் கூறப்பட்டிருப்பதாவது:

முக்தௌத்யேயா சசி ஜ்யோத்ஸ்னா தவளாக்ருதிரம்பிகா 1
ரக்த ஸந்த்யக ரோசி: ஸ்யாத் வசிகாண கர்மணி 1
கவித்யே விசதரகாரர் ஸ்படி கோபல நிர்மலா 1
தனலாபே ஸுவர்ணாபா சிந்த்யதே லலிதாம்பிகா 1
ஸர்வ ஸம்பந்திலா பேது ச்யாமளாங்கி விசிந்த்யதே 1
நீலா சமுகி கரணே பீதான் தம்பண கர்மணி 11

முக்தியை விரும்புகிறவன் சந்திரன் போன்ற வெண்மை நிறமாகவும், வசிகரணத்தை விரும்புகிறவன் ரத்தச் சிவப்பு நிறமாகவும், கவித்வத்தை விரும்புகிறவன் ஸ்படிகம் போன்ற வெண்மை நிறமாகவும், தன லாபத்தை விரும்புகிறவன் நீலநிறமாகவும், ஸ்தம்பன சக்தியை விரும்புகிறவன் மஞ்சள் நிறமாகவும் அம்பிகையை தியானிக்க வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

லலிதா சகஸ்ரநாமத்தில் ஆதார ஸ்தானங்களில் இருக்கும் ஒவ்வொரு சக்திக்கும் ஒவ்வொரு நிறம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

விசுக்தி சக்கரம்	-	ஆரக்தவர்ணா (கொஞ்சம் சிவப்பு)
அநாகத சக்கரம்	-	சியாமளா (பச்சை)
மணிபூரகம் சக்கரம்	-	ரக்தவர்ண முள்ளவள்
சுவாதிஷ்டான சக்கரம்	-	மஞ்சள் அல்லது பொன்நிறம்
ஆக்ஞா சக்கரம்	-	சுக்லவர்ணா (வெள்ளை)

ஸர்வ வர்ணோப சோபிதா (எல்லா வர்ணங்களுமாக இருப்பவள்) என்று அம்பிகைக்கு ஒரு நாமம்.

தேவியின் பாராயணம்

வல்லவப மொன்றறியேன் சிறியேன் நின் மலரடி செம்
பல்லவமல்லது பற்றொன்றிலேன் பசும் பொற் பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய் வினையேன் தொடுத்த
சொல்லவமாயினும் நின் திருநாமங்கள் தோத்திரமே

- அபிராபி அந்தாதி

அம்பிகையின் நாமங்களை அறியாமல் சொன்னாலும் விசேஷப் பலனைக் கொடுக்கும். லலிதா சகஸ்ரநாமத்தின் பூர்வபாகத்தில் 11-முதல் 46-முடிய சுலோகங்களில் இது விவரிக்கப்பட்டுள்ளது:

"ஸ்ரீ சக்ரத்தில் அர்ச்சித்தாலும் அர்ச்சிக்கலாம் போனாலும் பஞ்சதசாக்ஷரீ மந்திரத்தை ஜபித்தாலும் ஜபிக்கலாம் போனாலும் இந்த 1000 நாமங்களை என் திருப்தியின் பொருட்டு பாராயணம் செய்யவேண்டும். என் திருப்தி ஏற்பட்டால் சர்வாபீஷ்டங்களும் நிறைவேறும் சந்தேகமே இல்லை" லகு ஸ்தவியில் 19-வது ஸ்லோகத்தில் அம்பிகையின் பாராயணக் கிரமம் சொல்லப்பட்டிருக்கிறது. இது ஆறு விதபாராயணம்.

1. நாத பாராயணம், 2. கடிகா பாராயணம், 3. தத்துவ பாராயணம், 4. நாம பாராயணம், 5. நித்தியா பாராயணம், 6. மந்திர பாராயணம் * ஸ்ரீ வித்யா மந்திரத்தை அக்ஷர லக்ஷம் ஜபம் செய்து அதனுடைய தசாம்சம் பத்தில் 1 பங்கு ஹோமாதிகளைச் செய்தால் அதற்கு எவ்வளவு பலன் உண்டோ அவ்வளவு பலன்கள் இந்த ஷட் பாராயணத்தால் உண்டு.

---

* ஷட் பாராயண முறைகள் பிரதிபாவின் தேவி மானஸ பூஜையில் விளக்கப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிந்து தர்ப்பணம் 10

"பிந்து தர்ப்பண சந்துஷ்டா"

லலிதா சகஸ்ரநாமத்தில் அம்பிகைக்கு "பிந்து தர்ப்பண சந்துஷ்டா" என்ற நாமம் உள்ளது. பிந்து தர்ப்பணம் செய்வதால் சந்தோஷப்படுபவள் என்று அர்த்தம். பிந்து தர்ப்பணம் பூஜையின் கடைசியில் தான் செய்யப்படுவது. அதுபோலவே இந்த நாமாவும் 1000 நாமங்களில் 974 நாமமாக அமைந்திருக்கிறது.

பிந்து என்பது நவசக்ரமாத்மகமான ஸ்ரீ சக்ரத்தில் நடுவிலுள்ள ஸர்வானந்தமய சக்ரம். அது அம்பிகை இறைவனுடன் ஒன்றியிருக்கும் இடம். அந்த பிந்துவில் தன்னையே அர்ப்பணித்துக் கொள்வதே பிந்து தர்ப்பணம் செய்வதின் நோக்கம்.

பூஜை முடிந்தபின் குரு சமீபத்தில் இருந்தால் அவரை நமஸ்கரித்து குரு பாதுகா மந்திரத்தால் பூஜித்து விசேஷார்க்கியம் அடங்கிய பாத்திரத்தை வைத்துக்கொண்டு தர்ப்பணம் செய்யவேண்டும்.

குரு சமீபத்தில் இல்லாவிட்டால் அருகிலுள்ள தீக்ஷை பெற்றவர்களிடம் அமிர்த பாத்திரத்தைக் கொடுக்கலாம். இதற்கு முன் சிரஸில் மூன்று குருநாதர்களையும், இருதயத்தில் நான்கு ஆத்மாக் களையும் பூஜித்து தேவிக்கு தர்ப்பணம் செய்து உபதேசப் பிரகாரம் தத்வசோதனம் செய்ய வேண்டும்.

புஷ்பாஞ்சலி:- ப்ரகட, குப்த, குப்ததர, ஸம்ப்ரதாய முதலிய யோகினி கள் ஸ்ரீ சக்ரத்திலுள்ள ஒன்பது ஆவரணங்களிலுமுள்ள யோகினி தேவதைகள். இவர்களை வணங்கிவிட்டு பின் ஸ்வ குரு, பரமகுரு, பரமேஷ்டி குரு தியானம், இதன்பின் இருதயத்தில் ஆத்ம பூஜை - ஆத்மன், அந்தராத்மன் பரமாத்மன், ஞானத்மன் வழிபடப் படுகிறார்கள்.

இதன்பின் என்னென்ன மந்திரங்கள் எல்லாம் உபதேசமாகியிருக்கிறதோ அவைகளைச் சொல்லி தர்ப்பணம், (மஹா கணபதி பாலா, பஞ்சாக்ஷரி, அஷ்டாக்ஷரி, ஷோடசாக்ஷரி இவை ஒவ்வொன்றிலும் தர்ப்பணம்).

தத்வசோதனம்:- இந்த தர்ப்பணமே தன்னை சிதக்னியில் ஹோமம் செய்துக் கொள்வதாக பாவித்துச் செய்யப்படுவது.

மந்திரங்களை ஜபிக்கும் போது இடது கையில் பவித்ர நடுவிரல்களை மடித்துக்கொண்டு மற்ற மூன்றை முக்காலிபோல் வைத்துக்கொண்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதன் மீது பாத்திரத்தை வைத்து வலது கையினால் மூடிக் கொள்ள வேண்டும். குரு அனுமதி பெற்று தீர்தத்தை உட்கொண்டபின் பாத்திரத்தை அலம்பி ஸ்வர்ண புஷ்பமும் அக்ஷதையும் வைத்து தலைமேல் வைத்து மந்திரம் சொல்லி குருவிடம் கொடுக்கவும். குரு இல்லையேல் தலையில் வைத்துப் பின் ஆத்ம பாத்ர மண்டலத்தில் வைக்கவும்.

தத்வ சோதன மந்திரத்தின் அர்த்தம் ஆத்ம தத்துவத்தால் ஆணவ மலம் நீங்கும் பொருட்டு ஸ்தூல தேகத்தை சுத்தமாக்குகிறேன். என் அந்தராத்மா சுத்தியடையட்டும்; நான் பரஞ்சோதி வடிவினனாக ஆகட்டும். வித்யா தத்துவத்தால் மாயிக மலம் நீங்கும் பொருட்டு ஸூக்ஷ்ம தேகத்தை சுத்தமாக்குகிறேன். என் அந்தராத்மா சுத்தியடையட்டும். நான் பரஞ்சோதி வடிவினனாக ஆகட்டும்.

சிவதத்துவத்தால் கார்மிக மலம் நீங்கும் பொருட்டு காரண தேகத்தை சுத்தமாக்குகிறேன். என் பரமாத்மா சுத்தியடையட்டும். நான் பரஞ்சோதி வடிவினனாக கட்டும். பிரகிருதி முதல் சுத்த தத்துவங்கள் உள்ள எல்லா தேகங்களை அபிமானிக்கும் ஜீவாத்மாவையும் சுத்தமாக்குகிறேன். ஹோமம் செய்கின்றேன். என் ஞானாத்மா சுத்தியடையட்டும்.

ஆர்த்ரம் ஜ்வலதி அர்த்தம் - ஸ்வாதிஷ்டான சைதன்ய ரூபமான அப்புவிற்கும் ஆதாரமாக எந்த பரஞ்ஜோதி பிரகாசிக்கிறதோ அந்த ஜோதியே நான்.

பரஞ்சோதியாக பிரகாசிக்கும் பிரும்மமே நான். நான் என்பது எதுவோ எதுவே பிரும்மம். நான் பிரும்மமாகவே இருக்கிறேன். நான் நானாகவே என்னையே ஹோமம் செய்கிறேன். (தேவர்கள் அம்பிகையின் அருளைப் பெற தங்களையே சிதக்னி குண்டத்தில் ஹோமம் செய்தனர்).

சிதக்னியில் ஹோமம் செய்கிற பாவனையயில் விசேஷார்க்கியத்தை உட்கொள்ள வேண்டும்.

ஹம்ஸ ஸோஹம் என்ற இரு சொற்களால் ஆக்கப்பட்ட ஒரு தொடர்மொழி இதில் "ஹம்" உச்சுவாசம் "ஸ" என்பது நிச்சுவாசம்.

"ஹம்" பந்தத்தையும் சப்தத்திற்கு ஆதாரமான பூதகாசத்தையும் பொருளாகக் கொண்டு அஹம் என்ற மாற்றத்தால் ஆன்மாவைக் குறிக்கும்.

ஸ என்பது மோக்ஷ ரூபத்தையும் ஸரஸ்வதி பீஜமாக இருந்து நாதத்தைதையும் குறிப்பதால் சிவத்தைக் குறிக்கும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இம்மந்திரத்தின் அவ்யக்தம் என்றும் அஜபா என்றும் பெயருண்டு. அஜபை என்றால் ஜபிக்காதது என்று பொருள். அதாவது ஓரெழுத்தை உச்சரிப்பதற்குரிய இதழ் குவிதல், நா அசைத்தல் எவ்வித செயலும் இல்லாமல் ஆன்மாவிடத்தில் யாதொரு முயற்சியுமின்றி உயிர்த்தலுடன் பொருந்தியதாய் இயல்பாக அமைந்திருப்பது.

பூரக ரேசகம் செய்யுங்காலை ஹம்ஸ ஸோஹம் என்று நேராகவும் ரேசக பூரக காலத்தில் தலை கீழாகவும் விளங்குகிற இந்த மந்திரத்தால் தத்வமஸி என்ற மஹா வாக்கியத்தில் சொல்லப்பட்டுள்ள ஜீவ பிரஹ்ம ஐக்கியம் சித்திக்கப்படுகிறது. ஓம் என்ற பிரணவம் "ஸ" காரம் "ஹ" காரம் இவைகளைச் சேர்வதால் ஸோஹம் என்ற ஒலி உண்டாகிறது.

பிந்து தர்ப்பணம் - பாலா

ஸமஸ்த ப்ரகட' குப்த குப்ததர ஸம்ப்ரதாய குலோத்திரண நிகர்ப்ப ரஹஸ்யாதி ரஹஸ்ய பராபராதிரஹஸ்ய யோகிநீ ஸ்ரீ சக்ர தேவதாப்யோ நம: (புஷ்பாஞ்ஜலி செய்யவும்)

குருபாதுகா மந்த்ரம்

ஓம் ஐம் ஹ்ரீம் க்லீம் ஸெள: ஹம்ஸ: சிவ: ஸோஹம் ஐம் ஸ்வரூப நிருபண ஹேதவே ஸ்ரீ குரவே நம: அமுகானந்த நாத ஸ்ரீ பாதுகாம் பூஜயாமி தர்ப்பயாமி நம: ll (ஸ்வ குரு)

ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் ஐம் க்லீம் ஸெள: ஸோஹம் ஹம்ஸ: சிவ: க்லீம் ஸ்வச்சப்பிரகாச விமர்ச ஹேதவே ஸ்ரீ பரமகுரவே நம: l அமுகாம்பா ஸமேத அமுகாநந்த நாத ஸ்ரீ பாதுகாம் பூஜயாமி தர்ப்பயாமி நம: ll (பரம குரு)

ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் ஐம் க்லீம் ஸெள: ஹம்ஸ: சிவ ஸோஹம் ஹம்ஸ: ஸெள: ஸ்வாத்மாராம பஞ்ஜர விலீன தேஜஸே ஸ்ரீ பரமேஷ்டி குரவே நம: ll அமுகானந்த நாத ஸ்ரீபாதுகாம் பூஜியாமி தர்ப்பயாமி நம: ll (பரமேஷ்டி குரு)

ஆத்ம பூஜை

ஆம் - ஆத்மனே நம: l அத்ம ஸ்ரீ பாதுகாம் பூஜயாமி தர்ப்பயாமி நம: ll

அம் - அந்தராத்மனே நம: l அந்தராத்ம ஸ்ரீ பாதுகாம் பூஜயாமி தர்ப்பயாமி நம: ll

பம் பரமாத்மனே நம: l பரமாத்ம ஸ்ரீ பாதுகாம் பூஜயாமி தர்ப்பயாமி நம: ll

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஓம் ஹ்ரீம் ஞானாத்மனே நம: ஞானத்ம ஸ்ரீ பாதுகாம் பூஜயாமி தர்ப்பயாமி நம: 11

மஹா கணபதி

4. ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம் கம் கணபதயே வரவரத ஸர்வஜனம் மே வசமானய ஸ்வாஹா 1 ஸித்தி லக்ஷ்மி ஸமேத ஸ்ரீ மஹா கணபதி ஸ்ரீ பாதுகாம் பூஜயாமி தர்ப்பயாமி நம: (மூன்று தடவை)

பாலா

4. ஐம் க்லீம் ஸௌ: ஸௌ: க்லீம் ஐம் 11 ஸ்ரீ வித்யா பாலா மஹா திரிபுரசுந்தரி ஸ்ரீ பாதுகாம் பூஜயாமி தர்ப்பயாமி நம: 11 (3 தடவை)

தத்வ சோதனம்

4. ஐம்-ஆத்ம தத்வேன ஆணவ மல சோதானர்த்தம் ஸ்தூல தேஹம் பரிசோதயாமி ஜுஹோமி ஸ்வாஹா 11

4. க்லீம்-வித்யா தத்வேன மாயிகமல சோதனார்த்தம் ஸூக்தம் தேஹம் பரிசோதயாமி ஜுஹோமி ஸ்வாஹா 11

4. ஸௌ:- சிவ தத்வேண கார்மிக மல சோதனார்த்தம் காரண தேஹம் பரிசோதயாமி ஜுஹோமி ஸ்வாஹா 11

4. ஐம் க்லீம் ஸௌ: ஸௌ: க்லீம் ஐம் ஸர்வ தத்வேன ஸர்வ தேஹம், ஸர்வ தேஹாபிமானினம் ஜீவாத்மானம் பரிசோதயாமி ஜுஹோமி ஸ்வாஹா 11

4. ஆர்த்ரம் ஜ்வலதி ஜ்யோதிரஹமஸ்மி 1 ஜ்யோதிர் ஜ்வலதி
ப்ரஹ்மாஹமஸ்மி 11
யோஹமஸ்மி ப்ரஹ்மா ஹமஸ்மி 1 அஹமஸ்மி ப்ரஹமாஹமஸ்மி
அஹமே வாஹம் மாம் ஜுஹோமி ஸ்வாஹா 11

(குருவினிடம் ஹோஷ்யாமி என்று கேட்டு அவர் ஜுஹுதி என்று அனுமதி கொடுத்தவுடன் விசேஷார்க்யத்தை உட்கொள்ளவும்). பின்னா் ஆத்மபாத்திரத்தில் புஷ்பாக்ஷதைகள், தக்ஷிணை போட்டு சிரஸில் வைத்துக் கொண்டு).

தேவநாத குரோ ஸ்வாமின் தேசிக ஸ்வாத்ம நாயிகா 1
த்ராஹி த்ராஹி க்ருபா ஸிந்தோ பாத்ரம் பூர்ணதரம் குரு 11
என்று சொல்லி குருவிடம் சமர்ப்பிக்கவும்.

பஞ்சதசி பிந்து தர்ப்பணம்

முதலில் ப்ரகடாதி யோகினி தேவதைகளுக்கு ஸ்ரீ சக்ரத்தில் பூஜை குரு பாதுகா மந்திரத்தினால் சிரஸில் ஸ்வகுரு, பரமகுரு பரமேஷ்டி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குரு ஆகியவர்களுக்கு தர்ப்பணம். ஹிருதயத்தில் ஆத்ம பூஜை, பின்னர் என்னென்ன மந்திரங்கள் உபதேசமாகியுள்ளதோ அவைகளைச் சொல்லி அந்தந்த தேவதைகளுக்குத் தர்ப்பணம் செய்ய வேண்டும். பின் தத்துவ சோதனம் செய்யவும். தத்துவ சோதன விளக்கம் ஷோடசீ பிந்து தர்ப்பணத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

ஷோடசி பிந்து தர்ப்பணம்

முதலில் ப்ரகடாதி யோகிநி தேவதைகளுக்கு ஸ்ரீ சக்ரத்தில் பூஜை குரு பாதுகா மந்திரத்தினால் சிரஸில் ஸ்வ குரு பரமகுரு பரமேஷ்டி குரு ஆகியவர்களுக்கு தர்ப்பணம். ஹிருதயத்தில் ஆத்ம பூஜை பின்னர் என்னென்ன மந்திரங்கள் உபதேசமாகியுள்ளதோ அவைகளைச் சொல்லி அந்தந்த தேவதைகளுக்குத் தர்ப்பணம் செய்ய வேண்டும். பிறகு ஷோடசி உபதேசம் பெற்றவர்களுக்கு விசேஷ தர்ப்பணமான அங்க ப்ரத்யங்கரா தேவதா தர்ப்பணம் செய்ய வேண்டும். பின்னர்,

தத்வ சோதனம்

4. க5 ப்ரக்ருத்யஹங்கார புத்தி, மனஸ் த்வக் சக்ஷு ச்ரோத்ர ஜிஹ்வா க்ராண வாக் பாணி பாத பாயூபஸ்த சப்த ஸ்பர்ச ரூப ரஸ கந்த ஆகாச வாயு வஹ்னி ஸலில பூம்யாத்மனா அம் அ: க5 ஆத்ம தத்வேன ஆணவமல சோதானார்த்தாம் ஸ்தூல தேஹம் பரிசோதயாமி ஜுஹோமி ஸ்வாஹா (ஆம்-ஆத்மா மே சுத்யந்தாம் ஜ்யோதிரஹம் விரஜா விபாப்மா பூயாஸகும் ஸ்வாஹா)

4. ஹ3. மாயா, கலா, அவித்யா, ராக, கால, நியதி புருஷாத்மனா கம்..........மம் ஹ6 வித்யா தத்வேன மாயிகமல சோதனார்த்தாம் ஸூக்ஷ்ம தேஹம் பரிசோதயாமி ஜுஹோமி ஸ்வாஹா 1 (அம்-அந்தராத்மா மே சுத்யந்தாம் ஜ்யோதிரஹம் விரஜா விபாப்மா பூயாஸகும் ஸ்வாஹா)

4. ஸ4 சிவ சக்தி ஸதாசிவேச்வர சுத்த வித்யாத்மனா யம்......க்ஷம் ஸ4 சிவ தத்வேன கார்மிக மல சோதனார்த்தம் காரண தேஹம் பரிசோதயாமி ஜுஹோமி ஸ்வாஹா (பம் பரமாத்மாமே சுத்யந்தாம் ஜ்யோதிரஹ: விரஜா விபாப்மா பூயாஸகும் ஸ்வாஹா 11)

4. மூலம். ப்ரக்ருத்யஹங்கார புத்தி மனஸ் த்வக் சக்ஷு ச்ரோத்ர ஜிஹ்வா வாக் பாணி பாயூபஸ்த ரூப ரஸ கந்த ஆகாச வாயு வஹ்நி ஸலில பூமி மாயாகலா அவித்யா ராக கால நியதி புருஷ சிவசக்தி ஸதாசிவேச்வர சுத்த வித்யாத்மனா அம் ஆம்.....ளம் க்ஷம் (மூலம்) ஸர்வ தத்வேன ஸர்வ தேஹாபி மானினம் ஜீவாத்மானம் பரிசோதயாமி

அடைப்புக்குள் இருக்கும் மந்திரங்கள் "பஞ்சதசி" உபதேசம் பெற்றவர்களுக்கு கிடையாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஜுஹோமி ஸ்வாஹா (ஓம் ஹ்ரீம் ஞானத்மா மே சுத்யந்தாம் ஜியோதிரஹம் விரஜா விபாப்மா பூயஸாகும் ஸ்வாஹா)

4. ஆர்த்ரம் ஜ்வலதி ஜ்யோதிரஹமஸ்மி 1 ஜ்யோதிர் ஜ்வலதி ப்ரஹ்மாஹமஸ்மி 1 யோஹமஸ்மி ப்ரஹ்மாஹமஸ்மி 1 அஹமஸ்மி ப்ரஹமாஹஸ்மி 1 அஹமேவாஹம் மாம் ஜுஹோமி ஸ்வாஹா 11

(என்று குரு பூஜா மண்டபத்திலிருந்தால் அவரிடம் ஷோஷ்யாமி) அனுமதி பெற்று சிதக்னியில் ஹோமம் செய்கிற பாவனையில், விசேஷார்க்யத்தை உட்கொள்ளவும். பின்னர் பாத்திரத்தை அலம்பி, ஸ்வர்ணம் அக்ஷதை, புஷ்பங்களால் நிரப்பி, சிரஸில் வைத்துக் கொண்டு)

4. தேவநாத குரோ ஸ்வாமின் தேசிக ஸ்வாத்ம நாயக 1
த்ராஹி த்ராஹி க்ருபாஸிந்தோ பாத்ரம் பூர்ண தரம் குரு 11

என்று சொல்லி குருவிடம் சமர்ப்பிக்கவும். குரு இல்லாது போனால் மேற்படி பாத்திரத்தை சிரஸில் வைத்து நமஸ்கரித்து, ஆத்ம பாத்திர மண்டலத்தில் வைக்கவும்.

அங்க பிரத்யங்க தேவதா

4. ஐம் க்லீம் ஸௌ: ஸௌ: க்லீம் ஐம் ஐம் க்லீம் ஸௌ: 11 தேவ்யங்க பூதா ஸ்ரீ யோகபாலாம்பா ஸ்ரீ பாதுகாம் நம:

4. ஹ்ரீம் ஸ்ரீம் க்லீம் ஓம் நமோ பகவதி அன்ன பூர்ணே ம்மாபிலாஷிதமன்னம் தேஹி ஸ்வாஹா 11 (உபாங்கபூதா) ஸ்ரீ அன்ன பூர்ணாம்பா ஸ்ரீ பாதுகாம் நம: 11

4. ஓம் ஆம் ஹ்ரீம் க்ரோம் ஏஹி பரமேஸ்வரி ஸ்வாஹா 11 (ப்ரத்யங்க பூதா) ஸ்ரீ அச்வாரூடாம்பா ஸ்ரீ பாதுகாம் நம:

4. ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் ஐம் க்லீம் ஸௌ: ஓம் நமோ பகவதி ஸ்ரீமாதங்கிச்வரீ ஸர்வஜன மனோஹரி, ஸர்வமுக ரஞ்ஜனி, க்லீம் ஹ்ரீம் ஸ்ரீம் ஸர்வராஜ வசங்கரி, ஸர்வ ஸ்த்ரீ புருஷ வசங்கரி, ஸர்வ லோக வசங்கரி திரைலோக்யம் மே வசமானய ஸ்வாஹா 11 ஸௌ: க்லீம் ஐம் ஸ்ரீம் ஹ்ரீம் ஐம் ஸ்ரீ ராஜ சியாமளாம்பா ஸ்ரீ பாதுகாம் நம: (இது 3 தடவை)

"ஹஸகல ஹஸகஹல ஸகல ஹ்ரீம் 11

4. மூலம் - பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத்ஷுர்ன முதச்யதே 1 பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமே வா வசிஷ்யதே 11

அங்க ப்ரத்யங்கா தேவதா தர்ப்பணம் "பஞ்சதசி" உபதேசம் பெற்றவர்களுக்கு கிடையாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. ஐம் நம: ll உச்சிஷ்ட சாண்டாலி மாதங்கி ஸர்வ வசங்கரி ஸ்வாஹா ll ஸ்ரீ லகு ச்யாமளாம்பா ஸ்ரீ பாதுகாம் நம: ll

4. ஐம் க்லீம் ஸௌ: வத வத வாக்வாதினி ஸ்வாஹா l ஸ்ரீ வாக்வா தினியம்பா ஸ்ரீ பாதுகாம் நம: ll

4. ஓம் ஓஷ்டாபிதானா நகுலி தந்தை: பரிவ்ருதா பவி: ஸர்வஸ்யை வாச ஈசானாசாரு மாமிஹ வாதயேத் ஸ்ரீ நகுலீ வித்யாம்பா ஸ்ரீ பாதுகாம் நம: ll

4. ஐம் க்லௌம் ஐம் நமோ பகவதி வார்த்தாலி வார்த்தாலி வாராஹி வாராஹி வராஹமுகி வராஹமுகி அந்தே அந்தினி நம: ருந்தே ருந்தினி நம: ஜம்பே ஜம்பினி நம: ll மோஹே மோஹினி நம: ll ஸ்தம்பே ஸ்தம்பினி நம: ll ஸர்வ துஷ்டப்ரதுஷ்டானாம் ஸர்வேஷாம் ஸர்வ வாக் சித்த சக்ஷுர் முக கதி ஜிஹ்வா ஸ்தம்பணம் குரு குரு சீக்ரம் வச்யம் ஐம் க்லௌம் ட: ட: ட: ட: ஹூம் பட ஸ்வாஹா ll ஸ்ரீ மஹா வாராஹியம்பா ஸ்ரீ பாதுகாம் நம: (3 தடவை)

4. லூம் வாராஹி லூம் உன்மந்த பைரவி பாதுகாப்யாம் நம: ll ஸ்ரீ லகு வார்த்தாலியம்பா ஸ்ரீ பாதுகாம் நம: ll

4. ஓம் ஹ்ரீம் நமோ வாராஹி கோரே ஸ்வப்னம் ட: ட: ஸ்வாஹா ஸ்ரீ ஸ்வப்ன வாராஹ்யம்பா ஸ்ரீ பாதுகாம் நம: ll

4. ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் ஐம் க்லீம் ஸௌ: ஓம் நமோ பகவதி திரஸ்கரணி மஹாமாயே மஹா நித்ரே ஸகல பசுஜன மனச் சக்ஷுச்ச்ரோத்ர திரஸ்கரணம் குரு குரு ஸ்வாஹா ll ஸௌ: க்லீம் ஐம் ஸ்ரீம் ஹ்ரீம் ஐம் ll திரஸ்கரண்யம்பா ஸ்ரீ பாதுகாம் பூஜயாமி தர்ப்பயாமி நம: ll

4. ஹ்ஸௌ: ப்ராசாத பராம்பா ஸ்ரீ பாதுகாம் நம: ll

4. ஸ்ஸௌ: பரா ப்ரசாதாம்பா ஸ்ரீ பாதுகாம் நம: ll

4. ஹ்ஸௌ: ஸ்ஸௌ: அர்ந்தநாரீச்வராம்பா ஸ்ரீ பாதுகாம் நம: ll

4. ப்ரக்ஞானம் ப்ரஹ்மா, அஹம் ப்ரஹ்மாஸ்மி, தத்வமஸி, அயமாத்மா ப்ரஹ்மா மஹா வாக்யாம்பா ஸ்ரீ பாதுகாம் நம: ll

4. ப்ரஹ்மண்யாய நம: ப்ரஹ்மண்ய ஸ்ரீ பாதுகாம் நம: ll (3 தடவை)

முடிவுரை (ஸ்ரீ வித்யையில் அனைத்தும் அடக்கம்)

சாயத்ரீ ஸசிராஸ் துரீய ஸஹிதா ஸந்த்யா மயீத்யாகமை
ராக் க்யாதா த்ரிபுரே த்வமேவ மஹதாரம் சர்மப்ரதா கர்மணாம் ll
தத்தத்தர்சன முக்கிய சக்திரபி சத்வம் பிரஹ்ம காமேச்வரீ
கர்த்தார்ஹன் புருஷோ ஹரிச்ச ஸவிதா புத்த: சிவஸ்த்வம் குரு ll

- துர்வாஸர் (சக்திமஹிம்ன ஸ்துதி)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆகமங்களால் சிரோ மந்திரத்துடன், நான்காவது பாதத்துடன் கூடிய ஸந்த்யா வடிவமான காயத்ரீ நீயே. சிறப்பான கர்மங்களுக்கு பயன் அளிப்பவளும், அந்தந்த சாஸ்திரத்தின் முக்ய சக்தியாகவும், பிரும்மம், கர்மம், ஈஸ்வரீ, கர்த்தர், புருஷன், ஹரி, சூர்யன், புத்தன், சிவன், குருவாகவும் விளங்குவது நீயே.

காயத்ரியில் வியாக்ருதிகள் ஒரு கூடமாகவும், மூன்று பாதங்கள் மூன்று கூடமாகவும், துரிய பாதம் ஒரு கூடமாகவும். சிரஸ் ஒரு கூடமாகவும் கொண்டால், ஆறு கூடங்களும் சேர்ந்து மஹா ஷோடசி மந்திரத்திற்கு சமம். ஸ்ரீ வித்யையில் சகலமும் அடங்கிவிடுவதால் தனித்தனி தெய்வங்களையோ விரதங்களையோ எதையுமே செய்ய வேண்டியதில்லை. தேவியின் "ஸத்" ஸ்வரூவபம் அனைத்திலும் அந்தர்யாமியாகவும், "சித்" ஸ்வரூபம் அறிவாகவும் ஆனந்த ஸ்வரூபம் சக்தியாகவும் விளங்குவதை காண்பதே ஸாக்ஷாத்காரம்.

ஸ்ரீ வித்யை பற்றி தெரிய வேண்டிய விஷயங்கள் எல்லாவற்றையுமே திரட்டி உங்கள் முன் வைத்துள்ளேன். இதற்கு எனக்குத் துணையாக இருந்தது குருநாதர் அருளும், மகான்களின் ஆசீர்வாதமும், அம்பிகையின் அருளுமே.

ஸ்ரீ வித்யா ஸ்வரூபிணியான அந்த அம்பிகையின் அருள் எல்லோருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கிறோம்.

இன்பம் பொங்குக

மது வாதா ருதாயதே மது க்ஷரந்தி ஸிந்தவ: ॥
மாத்வீர்ந: ஸந்த்வோஷதீ: ॥
மது நக்தமுதோஷணி மதுமத்பார்த்திவம் ரஜ: ॥
மதுத்யௌரஸ்து ந: பிதா ॥
மதுமாந்தோ வனஸ்பதிர் மதுமாம் அஸ்து ஸூர்ய: ॥
மாத்வீர்காநோ பவந்து ந: ॥ மது மது மது ॥

காற்று இனிது அடிக்கட்டும், நதிகள் இனியவைகளாக ஓடட்டும் மூலிகைகள் நமக்கு இன்பம் தருபவைகள் ஆகட்டும். இரவிலும் பகலிலும் இனிமையே நிறைந்திருக்கட்டும். நிலத்தில் புழுதியில் இன்பம் பொலிக. நம் தந்தையாகிய வானுலகில் இன்பம் ஓங்குக. கனி கொடுக்கும் மரங்களில் இன்பம் ததும்புக. சூரியன் இன்பத்தைத் தோற்றுவிப்பானாக. பசுக்களினின்று நமக்கு இன்பம் சுரப்பதாகுக.

* * * **சுபம்** * * *

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஸ்ரீ யோகாம்பா சமேத சந்திரிகானந்த நாதர் | ஸ்ரீ காமேஸ்வரி அம்பா சமேத காமேஸ்வரானந்த நாதர் | ஸ்ரீ அன்னபூர்ணி அம்பா சமேத ஆனந்தகன ஆனந்த நாதர் | ஸ்ரீ காமேஸ்வரி அம்பா சமேத காமேஸ்வரானந்த நாதர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ பில்வாஷ்டகம்

ஸ்ரீ பில்வவிருக்ஷம் ஸ்ரீ ரங்கனாதனுடைய க்ஷேத்திர மாகிய ஸ்ரீரங்கத்தில் க்ஷேத்திர விருக்ஷமாகும் பில்வ மரத்தில் ஸ்ரீ மஹாலக்ஷ்மி வசிப்பதாக வேதம் கூறுகிறது. அப்படிப் பட்ட பில்வ மரத்தின் ஓர் தளத்தை ஸ்ரீ பரமசிவனுக்கு அர்பணம் செய்தால் மஹா பாபங்கள் விலகி ஸகல மங்கள மும் உண்டாகும். இந்த ஸ்தோத்திரத்தை படித்தாலும் அந்த புண்யம் உண்டாகும். இந்த பில்வம் எட்டுவகையானது என்பது இந்த ஸ்தோத்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது.

த்ரிதளம் த்ரிகுணாகாரம்
த்ரிணேத்ரஞ்ச த்ரியாயுஷம் I
த்ரிஜன்மபாபஸம்ஹாரம்
ஏகபில்வம் சிவார்ப்பணம் II 1

மூன்று தளங்களுடன் கூடியதும், ஸத்வரஜஸ்தமோ குணங்களின் உருவாக இருப்பதும், பரமசிவனின் மூன்று கண்களாக இருப்பதும், பால்யம், யௌவனம், வார்தக்யம், இம்மூன்றையும் அளிப்பதும், மூன்று ஜன்மங்களில் செய்யும் பாபத்தை போக்குவதும், ஒரு பில்வத்தை ஸ்ரீ பரமசிவனுக்கு அர்பணம் செய்கிறேன்.

த்ரிசாகைர்பில்வபத்ரைச்ச
அச்சித்ரை: கோமளை: சுபை: I
சிவபூஜாம் கரிஷ்யாமி
ஏகபில்வம் சிவார்ப்பணம் II 2

மூன்று இதழ்களுடன் கூடியவைகளும், பில்வ விருக்ஷத் தின் இலையும், பூச்சியால் துளைக்கப்படாதவைகளும், அழகு வாய்ந்தவைகளும், மங்களத்தை அளிக்கின்றவை களுமான பில்வ பத்ரங்களால் சிவ பூஜையை செய்து ஒரு பில்வத்தை அர்ப்பணம் செய்கிறேன்.

அகண்டபில்வபத்ரேண
பூஜிதே நந்திகேச்வரே I
சுத்யந்தி ஸர்வ பாபேப்ய:
ஹ்யேகபில்வ'ம் சிவார்ப்பணம் II 3

மூன்று தளங்களுடன் கூடியதும், பூச்சி அரிக்கப்படா ததுமான பில்வதளத்தால் ஸ்ரீ நந்திகேச்வரரை பூஜித்தால் ஸர்வ பாபங்களும் விலகி சுத்தமாகிறான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சாலக்ராம சிலாமேகாம் விப்ராணம்
ஜாது அர்பயேத் ।
ஸோமயக்ஞமஹாபுண்யம்
ஏகபில்வம் சிவார்ப்பணம் ॥ 4

ஸாளகிராம சிலையை ஓர் வேத வித்தினிடத்தில் எப்பொழுதாவது தானம் செய்தால் ஸோமயாகம் செய்த புண்ணியம் கிடைக்கும். அந்த புண்யம் ஓர் பில்வத்தை ஸ்ரீ பரமசிவனுக்கு அர்ப்பணம் செய்தால் கிடைக்கும்.

சாளக்ராமேஷு விப்ரேஷு
தடாகே வனகூபயோ: ।
யக்ஞகோடி ஸஹஸ்ராணம்
ஏகபில்வம் சிவார்ப்பணம் ॥ 5

ஸாளக்ராம சிலை, வேதவித்துக்கள், இவர்களை பூஜித்தல் குளம் வெட்டுதல், பூந்தோட்டம் வைத்தல், கிணர் வெட்டுதல், ஆயிரம்கோடி யாகங்களைச் செய்தல் என்ற இவைகளால் கிடைக்கும் புண்யம் ஓர் பில்வதளத்தை ஸ்ரீ பரமசிவனுக்கு அர்ப்பணம் செய்தால் கிடைக்கும்.

தந்திகோடிஸஹஸ்ராணி
வாஜபேயசதானி ச ।
கோடிகன்யா மஹாதானம்
ஏகபில்வம் சிவார்ப்பணம் ॥ 6

ஆயிரம்கோடி யானைகளை தானம் செய்தல் நூறுவாஜபேய யாகங்களைச் செய்தல், மஹாதானமாகிய கோடி கன்னிகாதானத்தைச் செய்தல், இவைகளால் கிடைக்கும் புண்யம் ஓர் பில்வதளத்தை சிவார்ப்பணம் செய்வதால் கிடைக்கும்.

லக்ஷ்ம்யா: ஸ்தநத உத்பன்னம்
மஹாதேவஸ்யச ப்ரியம் ।
பில்வவிருக்ஷம் ப்ரயச்சாமி
ஏகபில்வம் சிவார்ப்பணம் ॥ 7

ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் ஸ்தனங்கனிலிருந்து உண்டானதும், ஸ்ரீ மஹாதேவனுக்கு மிக ப்ரியமானதுமான ஸ்ரீ பில்வ விருக்ஷத்தைவைத்து பயிராக்கினதால் உண்டாகும் புண்யம் ஓர் பில்வ தளத்தை சிவார்ப்பணம் செய்தால் கிடைக்கும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏகஞ்ச பில்வபத்ரைச்ச
கோடியக்ஞபலம் லபேத் ।
மஹாதேவஸ்ய பூஜார்த்தம்
ஏகபில்வம் சிவார்ப்பணம் ॥ 8

ஒரு பில்வதளத்தை ஸ்ரீ மஹாதேவனுடைய பூஜைக்காக அளிப்பதால் கோடி யக்ஞபலன் கிடைக்கும். அந்த புண்யம் ஒரு பில்வதளத்தை சிவார்ப்பணம் செய்வதால் கிடைக்கும்.

தர்சனம் பில்வ வ்ருக்ஷஸ்ய
ஸ்பர்சனம் பாபநாசனம் ।
அகோரபாபஸம்ஹாரம்
ஏகபில்வம் சிவார்ப்பணம் ॥ 9

பில்வ விருக்ஷத்தை பார்ப்பதும் தொடுவதும் பாபத்தைப் போக்கும். மிகுந்த துக்கத்தை கொடுக்கும் பாவங்களையும் ஓர் பில்வதளத்தை ஸ்ரீ பரமசிவனுக்கு அர்ப்பணம் செய்தால் போக்கிவிடும்.

மூலதோ ப்ரஹ்ம ரூபாய
மத்யதோ விஷ்ணு ரூபிணே ।
அக்ரத: சிவ ரூபாயஹ
ஏகபில்வம் சிவார்ப்பணம் ॥ 10

பில்வ விருக்ஷத்தின் அடிபாகம் ஸ்ரீ பிரம்மதேவனின் ஸ்வரூபம். நடுபாகம் ஸ்ரீ விஷ்ணுவின் ஸ்வரூபம். மேல் பாகம் ஸ்ரீ பரமசிவனின் ஸ்வரூபம். ஒரு பில்வதளத்தை சிவார்ப்பணம் செய்வதால், இந்த மூன்று தெய்வங்களையும் பூஜை செய்த புண்யம் கிடைக்கும்.

காசீக்ஷேத்ரநிவாஸஞ்ச
காலபைரவ தர்சனம் ।
கயாப்ரயாகேத்வேத்ருஷ்ட்வா
ஏகபில்வம் சிவார்ப்பணம் ॥ 11

துளசி, பில்வ, நீர்முள்ளி, நாயுருவி, விளா, வன்னி, நெல்லி, அருகம்புல் இந்த எட்டும் பில்வங்களாகும்.

உமையாஸஹ தேவேசம்
வாஹனம் நந்திகேச்வரம் ।
முச்யதே ஸர்வபாபேப்ய:
ஏகபில்வம் சிவார்ப்பணம் ॥ 12

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காசிக்ஷேத்ரத்தில் வசிப்பதும் காலபைரவரை தரிசிப்பது, கயை, ப்ரயாகை இந்த க்ஷேத்ரங்களுக்கு சென்று தரிசிப்பதும் எவ்வளவு புண்யமோ அவ்வித புண்யம் ஒரு பில்வத்தை ஸ்ரீ பரமசிவனுக்கு அர்ப்பணம் செய்வதால் உண்டாகும்.

பில்வாஷ்டகமிதம் புண்யம்
 ய:படேத் சிவஸந்நிதௌ ।
ஸர்வபாபவினிர்முக்த:
 சிவலோகமவாப்னுயாத் ॥ 13

அம்பாளுடன் ஸ்ரீ பரமேச்வரனையும், வாஹனமான ஸ்ரீ நந்திகேச்வரரரையும் தரிப்பதால் ஸகல பாபங்களிலிருந்தும் விடுபடுவான். அப்படிப்பட்ட பாபநிவ்ருத்தி ஒரு பில்வத்தை ஸ்ரீ பரமசிவனுக்கு அர்ப்பணம் செய்வதால் ஏற்படும்.

பில்வத்தைப்பற்றிக் கூறப்பட்ட இந்த எட்டு சுலோகத்தையும் எவன் சிவஸன்னிதியில் படிப்பானோ அவன் ஸர்வ பாபங்களிலிருந்து விடுபட்டு முடிவில் சிவலோகமடைவான்.

பாரயணம்

ஒரு நாள் 25 மணி நேரம்

ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம் தொடர்ந்து 25 மணி நேரம் நடைபெறுகிறது. இது 2004 முதல் ஒவ்வொரு வருடமும் மாசி மகத்தன்று தொடர்ந்து நடைபெற்று கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு 19.02.2019 செவ்வாய் கிழமை காலை 10 மணி முதல் 20.02.2019 புதன் கிழமை காலை 11 மணி வரை இந்த அகண்டநாம பாராயண வைபவம் நடைபெறுகிறது, இதில் கலந்து கொண்டு சிறப்பித்து அனைவருக்கும் குரு அருளும் அம்பாளின் பரிபூர்ண அனுக்கிரகமும் ஏற்படும். மாசி மகத்தன்று நடைபெற உள்ளது. அனைவரும் கலந்து கொள்ளவும்.

இடம் : ஸ்ரீ காமேஸ்வரி பீடம்
ஸ்ரீ பஞ்சமுக சிவ ஆலயம்
3/801, 3வது பிளாக் முகப்பேர் மேற்கு
சென்னை 600 037. கைபேசி எண்: 944929154
என்றும் குருஅருட் பணியில் குருஜி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விபூதி ப்ராகாரவர்ணநமும் சோளராஜன் முதலிய அரசர்களால் செய்யப்பட்ட துதியும்

பாத்ம புராணத்தில் கஜாரண்ய மஹாத்மியத்தில் 24லது அத்யாயத்தில் சேரன், சோளன், பாண்டியன், விக்ரமன் என்ற அரசர்கள் மதில் சுவர்கள், மண்டபம் இவைகளை நிர்மாணித்தனர். விபூதிப்ராகாரத்தை (மதிலை) ஸ்ரீ பரமசிவன் தானே கட்வித்தார். இதைப் படிப்பதால் சிவாலய நிர்மாணம் செய்த புண்யம் கிடைப்பதோடு, மஹாபாபங்களெல்லாம் விலகும். குடும்பத்தில் சிவாபசார மிருந்தாலும், தலைவலி, தலை சுற்றல், மயக்கம் முதலிய ரோகங்களிருந்தாலும் அவைகளும் விலகும்.

சதுர்விம்சே ந்ருபாச்சேரமுக்யா: ப்ராகாரமண்டபான்
அகுர்வன் பூதிஸாலம்து ஸ்வயமாபந்தயச்சிவ: ||

(சேரசோளபாண்ட்ய விக்ரமஸ்துதி கட்ட:)

ஹே கண்டபரசோ சசிகண்டகூட
கங்காதர ஸ்ரீபதி வந்திதாங்க்ரே |
ப்ரஸீத காகோதரஹார சம்போ
ஸ்ரீ ஜம்புகேசாநல லோசனாத்ய || 1

சோணாக்ஷ சோளன்:- கண்டரகோடாலியை கையில் தரித்தவரே, சந்திர கலையை சிரோபூஷணமாக கொண்ட வரே, கங்கையை தரித்தவரே, லக்ஷ்மீபதியால் நமஸ்கரிக்கப் பட்ட சரணங்களை உடையவரே, (காகோதரங்களை) பாம்புகளை மாலையாக கொண்டவரே, சுகத்தை அளிப்பவரே, அக்னியை கண்ணாக கொண்ட ஓ ஜம்புகேச் வரரே, இப்பொழுது ப்ராசதம் (அருள்) செய்ய வேண்டும்.

ஹே விச்வநாத கருணாகர தீனபந்தோ
ஸ்ரீ ஜம்புகேச சசிதாம கலாலலாம |
பாஹி த்ரிலோசன ஸநாதன தேவதேவ
ஸ்ரீ ஜம்புகேச தயயா பரிபாலயாத்ய || 2

சேரராஜன்:- உலகங்களைக் காப்பவரே, கருணைக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கடலே, ஏழைகளுக்கு உறவினரே, சந்திரகலைகயை திலக மாக கொண்டவரே, ஓ மூன்று கண்களை உடையவரே, ஓ ஜம்புகேச காக்கவேண்டும்,, ஓ மஹாதேவரே இப்பொழுது கருணையால் என்னை பாதுகாக்க வேண்டும்.

ஹே விச்வாதிகதேவதேவ பகவன்
ஸ்ரீ ஜம்புகேசாவமா மாலோக்யாசு
தயா கடாக்ஷலஹரீ பாரீணதுர்யம் குரு ।
சர்வாணீ ரமணப்ரபோ தவ ஸதா
பாதாம்புஜே மண்மனோலக்னம் மக்னமபூத்
புவிசிரம்மோதாய கேதம் நுத ॥ 3

பாண்டிய அரசன்:- உலகங்களுக்கெல்லாம் மேல்பட்ட வரே, ஓ தேவர்களுக்கெல்லாம் தேவனே, ஓ பகவானே, ஓ ஜம்புகேச! என்னை காக்கவேண்டும், என்னைப் பார்த்து, தங்களுடைய கருணாகடாக்ஷ ப்ரவாஹத்திற்கு பாத்திரமாக செய்யவேண்டும். ஓ பார்வதீகாந்த, ப்ரபுவே, தங்களுடைய சரணகமலத்தில் என் மனமானது சம்பந்தப்பட்டு எப்பொழுதும் த்யானம் செய்துகொண்டிருக்க வேண்டும். இப் பூமியில் ஆனந்தமாய் இருப்பதற்காக துக்கத்தை போக்க வேண்டும்.

ஹே விச்வநாத கிரிஜாவதநாம்புஜார்க
வன்ஹீந்துபாநுவிலஸத் த்ரிதயோஜ்வலாக்ஷ ।
க்ஷிப்ரம் ப்ரஸீத பகவன் பவ பூதநாத
ஸ்ரீ ஜம்புகேச குரு மாமதுநாநுகம்ப்யம் ॥ 4

விக்ரம அரசன்:- ஓ விச்வனாத, பார்வதியின் முகமாகிற தாமரைக்கு சூரியனாக இருப்பவரே, அக்னி, சந்திரன், சூரியன், இவர்களால் பிரகாசிக்கின்ற மூன்று கண்களை உடையவரே, ஓ பகவானே, சீக்ரம் அருள்புரிய வேண்டும், ஓ பவ, ஓ பூதநாதரே, ஓ ஜம்புகேச, தங்களுடைய தயைக்கு என்னை பாத்ரனாக செய்யவேண்டும்.

ஏவம்தே துஷ்டுவுர்தேவம் ந்ருபாச்சத்வார ஈச்வரம்।
தத: காதபவத்வாணீ ஜம்புநாதஸ்ய சூலிந: ॥ 5

ஸூதர் சொல்லுகிறார்:- இவ்வாறு நான்கு அரசர்களும் இவ்வாறு ஈச்வரனை துதித்தனர், பிறகு சூலபாணியான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ ஜம்புனாதனுடைய வார்த்தையானது ஆகாயத்திலிருந்து உண்டாயிற்று.

ப்ராகாரம் மாகுருத்வம் மே ஹ்யஹமேவ
கரோமி தம் I
யூயம் மமாக்ரதச்சாரு தேவ்யாஸ்தத்பார்ச்சவயோ
ஸ்ததா II 6

ஆகாயவாணி கூறுகிறது:- ஓ அரசர்களே, நீங்கள் விபூதிப்ராகாரத்தை (மதிலை)க் கட்டவேண்டாம். நானே அதை கட்டுகிறேன், நீங்கள் எனக்கும் ஸ்ரீ அம்பாளுக்கும் முன்பும் பக்கங்களிலும்.

ப்ராஸாதகோபுரமஹாலயமண்டபாம்ச்ச
குர்வந்து ஸர்வே மம பூமி பாலா: I
ஸராம்ஸி தத்தீரகமண்டபாநி
ப்ராகாரமேகம் பரிதோ விஹாய II 7

மதிள் சுவர்கள், கோபுரங்கள், பெரிய கோவில்கள் மண்டபங்கள், ஒன்பது தீர்தங்கள், அதன் கரையில் மண்டபங்கள், இவை யாவையும் விபூதி பிரகாரம் தவிர்த்து கட்டுங்கள்.

பூத்யாக்ய மேகம் ரசயாம்யஹம் கணை:
ஸச்சில்பிஸ்ஸ்வச்ச ஸிதைச்சிலாபி: I
யூயம் ஸமர்த்தா ந ஹி ஸம்சயோத்ர
ததாபி மத்வாக்யமிதம் குருத்வம் II 8

நல்ல வெண்மையான கற்களால், நல்ல சிற்பவேலை அறிந்த எனது கணங்கள் மூலம் விபூதி பிராகாரம் ஒன்றை மட்டும் நானே கட்டுகிறேன். நீங்கள் யாவரும் இதையும் கட்டுவதற்கு திறமை வாய்ந்தவர்களே ஆயினும் எனது வார்த்தயைக் கேளுங்கள்.

இத்தம் வசோபி: பரமேசிதுஸ்தே
துஷ்டா: பரம் ஸில்பிவரைச்சிலாபி: I
தேவ்யா மஹேசாக்ரக மண்டபாநி
பபந்துரக்ரியாணி ஸராம்ஸிசாச்மபி: II 9

இவ்வாறு ஸ்ரீ பரமேச்வரன் சொல்லைக் கேட்ட அவர்கள் மிகுந்த சந்தோஷமடைந்து சிறந்த சிற்பிகள் மூலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ ஜம்புகேச்வரர், ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி இவர்களுக்கு முன்பு மண்டபங்களையும், பிராகாரங்களையும் சிறந்த ஸரஸ்ஸுகளையும் கட்டினார்கள்.

அந்யைர்வை கநகைர்கிரேஸ்தட-கரைராநீய ஸச்சில்பிபி:
பாதாளஸ்ய கநாய்ய பூமிவிவரம் சாபந்தயச்சங்கர:
ஸாயம் ஸ்ரீகரபாதுகோஜ்வலபத: ப்ராகாரமார்கே சரண்
பூம்யா தத்ஸமதாம் சகார பகவான் தத்வேதனம்
பஸ்த்ரிகா ॥ 10

ஸ்ரீ ஜம்புகேச்வரர், பூமியைத் தோண்டி வேலை செய்யும் நல்ல சிற்பிகளைக் கொண்டு, மலைகளிலிருந்து கற்களை கொண்டு வரச்செய்து. பூமியில் பாதாளம் வரை பரிக்கச் செய்து, அஸ்திவாரம் போடச் செய்தார். அன்று ஸாயங் காலத்தில் தானே ஸித்த ரூபியாய் திவ்யபாதுகயை தரித்துக் கொணடு, சுறறிலும் ஸஞ்சரிததுக கொணடு வந்து, அஸ்தி வாரத்தை பூமி மடடத்திற்கு உயரச் செய்து, வேலை செய்த வர்களுக்கு கூலியாக விபூதிப பைகளைக் கொடுததார்.

க்ஷார: சங்கரஹஸ்ததஸ்து நிததே
சில்பேஷும்ருத்வாஹிஷு
தேகத்வா பணவீதிகாம் பணகணாகாரம்
க்ருஹீத்வா வ்ரஜன் ।
யாவச்ச்ராந்திரபூச்ச தேஷு பவதி
ஸ்ரீபூதிகா சாங்கரீ
தாவத்த்ரவ்யமமீ பரஸ்பரமிதி
ப்ரோசுர்விசித்ரம் த்விஜா: ॥ 11

ஸ்ரீ சங்கரரால் கொடுக்கப்பட்ட விபூதிப் பையானது கடைவீதிக்குச் சென்று அவர்களா பிரித்து பார்க்கப் பட்டதும், அவரவர்கள் செய்த வேலைக்கு தக்கவாறு கூலியாக காசு இருந்ததை கண்டு ஒருவக்கொருவர் பேசிக் கொண்டு ஆச்சரியமடைந்தனர்.

ஏவம் சங்கரஹஸ்த பூதிதமஹா
ப்ராகாமீசோவ்யதாத்
பூத்யாக்யம் பரிசங்க்ரமன்யதி
நரஸ்ஸ்வீயை: கரை: கோபுவி ।

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

க்ஷேப்துர்வாஜிமகஸ்ய யத்பலமஹோ
　பூயாத்ததேவா த்ரவை
நத்யா கோடிபலம் ததாங்கலுடநை:
　நோகர்பவாஸோ பவேத் ll 12

ஸூதர் கூறுகிறார்:- இவ்வாறு க்ஷேமத்தை அளிக்க கூடிய கைகளால் விபூதியை கொடுத்து விபூதி ப்ராகாரத்தை காலால் நடந்து சுற்றிக்கொண்டே செய்தார். மனிதன் இந்த ப்ராகாரத்தில் கையால் கற்களை வைத்தால் அச்வமேத மஹாயாக பலனை அடைவான். நமஸ்கரித்தால் கோடி அச்வமேத மஹாயாகம் செய்த பலனையும், அங்கப் ப்ரதக்ஷிணம் செய்தால் கர்பவாஸமின்றி மோக்ஷமடை வார்கள்.

ஸ்ரீமத்புண்யதமே ப்ரதோஷஸமயே
　ஸ்யாத்புண்யபர்வஸ்வபி
தானம் கோடிகுணம் பவேன்னபவிதா
　ஸ்யாத் தேசகாலக்ரம: l
அன்னம் ஸித்தமுபாகதம் யதிபவேத்
　விப்ரார்பிதம் சங்கரே
பூயாதேவ ஸுமேருதாமுபகதம்
　கைலாஸஏவாஸ்யஹி ll 13

ஸ்ரீ ஸம்ருத்தியையும், மிகுந்த புண்யத்தையும் அளிக்க கூடிய மஹாப்ரதோஷ ஸமயத்திலும் புண்யத்தை அளிக்கும் பௌர்ணமி, அமாவாஸ்யை தினங்களிலும் இந்த க்ஷேத்ரத் தில் செய்யும் தானமானது கோடி மடங்கு பலனை அளிக்கும். இந்த க்ஷேத்ரத்தில் தானம் செய்வதற்கு தேசகால நியமம் கிடையாது. வேதம் கற்றவர்களிடம நெய் கலந்த அன்னத்தை கொடுப்பதினால், அந்த அன்னமானது ஸ்ரீ பரமசிவனிடத்தில் மஹாமேருவை போல் சேர்ந்து விடும். இவனுக்கு முடிவில் கைலாஸமே கிடைக்கும்.

தார்யதே யஸ்ஸஹஸ்ரேண சேஷேண l
　சிரஸாம் ப்ருசம் தத்பூதிஸாலமாஹாத்மியம் ll 14

எந்த அதிசேஷன் ஆயிரம் தலைகளால் இந்த பூமியை தரிக்கிறானோ, அந்த ஆதிசேஷனாலும் இந்த விபூதி ப்ராகார மஹாத்மியத்தை கூற முடியாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வக்தும் தேநாபி நக்ஷமம் ।
பூதிப்ராகாரவர்யஸ்ய ப்ரதக்ஷிணபரம் நரம் ॥ 15

சிறந்த விபூதி ப்ராகாரத்தை ப்ரதக்ஷிணம் செய்யும் மனிதனை, பிரம்மதேவன் முதலிய தேவர்கள் கண்டு எப்பொழுதும் ஆனந்தத்துடன் பூஜிக்கின்றனர்.

த்ருஷ்ட்வா ப்ரம்மாதயோ தேவா: பாவயந்திஸதாமுதா
தஸ்மாதேதத்ப்ரக்ரமந்துலோகபூஜ்யத்வதாயகம் ॥ 16

ய:கரோதி ஸக்ருத் பக்த்யா பூதிஸாலப்ரதக்ஷிணம் ।
தஸ்யகார்யாணிஸித்யந்திநாத்ரகார்யா விசாரணா ॥ 17

ஆதலால் உலகங்களால் பூஜிப்பதற்கு காரணமாயுள்ள விபூதி ப்ராகார ப்ரதக்ஷிணத்தை பக்தர் ஆரம்பித்து செய்ய வேண்டும். ஒரு முறை விபூதி ப்ரகார பிரதக்ஷிணத்தை எவன் பக்தியுடன் செய்கிறானோ, அவனுக்கு காரிய சித்திகள் உடன் ஏற்படும். இது விஷயத்தில் சந்தேஹமில்லை.

ஏதத்ஸாலம் ப்ரக்ரமிதும் யோததாதி மதிம் ந்ருணாம்
தஸ்ய துஷ்யதி விச்வேச: ஸர்வாபீஷ்டப்ரதாயக: ॥ 18

எவனொருவன் விபூதிபிராகார பிரதக்ஷிணத்தை செய்யும்படி உபதேசிக்கிறானோ அவன் விஷயத்தில் ஸர்வா பீஷ்டங்களையும் அளிக்கும் ஸ்ரீ ஜம்புநாதன் ஸந்தோஷம் கொள்வார்.

யஸ்து நித்யம் கரோத்யஸ்ய பூத்யாக்யஸ்ய
ப்ரதக்ஷிணம் ।
நதஸ்ய புநராவ்ருத்தி: ஸம்ஸாரே பவதி க்வசித் ॥ 19

எவனொருவன் விபூதிப்ராகப் பிரதக்ஷிணத்தை நித்யம் செய்கிறானோ அவனுக்கு மறுபடியும் இந்த சம்சாரத்தில் ஒருபொழுதும் பிறப்பு ஏற்படாது.

யஸ்துயம்யம் ஸ்மரன் காமம் கரோத்யஸ்ய
ப்ரதக்ஷிணம் ।
தம்தம் காமமவாப்நோதி ஸத்யம் ஸத்யம்
நஸம்சய: ॥ 20

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எந்தெந்த அபீஷ்டத்தை வேண்டிக் கொண்டு எவனொருவன் பிரதக்ஷிணம் செய்கிறானோ அந்தந்த அபீஷ்டத்தை அடைகிறான். இது உண்மை! இது உண்மை! இதில் சந்தேகமே இல்லை.

புத்ரகாமோ லபேத்புத்ரம் தனகாமோ லபேத் தனம் ।
ஆரோக்யகாம: சாரோக்யம் பூதிஸால
ப்ரதக்ஷிணாத் ॥ 21

இந்த விபூதிப் பிராகாரப் பிரதக்ஷிணத்தால் பிள்ளையை வேண்டுகிறவன் அடைவான். பொருளை வேண்டுகிறவன் பொருளை அடைவான். ஆரோக்யத்தை வேணடுகிறவன் ஆரோக்யததை அடைவான்.

தஸ்மாதஸர்வ ப்ரயத்னேன காரயேத்வா கரோதிவா ।
தஸ்ய ஸம்பத்விவ்ருததிஸ்யாத் பரத்யஹம்
நாத்ரஸம்சய ॥ 22

ஆதலால் மிகுநத முயற்சியினால் பிறரைக் கொண்டாவது இநதப பிரதக்ஷிணத்தை அவசியம் செய்யச் சொல்ல வேண்டும். அல்லது தானாவது செய்ய வேண்டும். அவனுககு நித்யம் சம்பத்துக்கள் மேன்மேலும் விருத்தியாகி வரும், இதில் சந்தேகமேயில்லை.

ஜனமாந்தரஸஹஸ்ரேஷு பஹுபுண்யம் க்ருதம் யதி ।
ததாபவேன்மதிஸ்தஸ்ய ப்ராகாரஸ்ய ப்ரதக்ஷிணே ॥23

ஆயிரக்கணக்கான ஜென்மங்களில் செய்த புண்யத்தால் தான் விபூதிப் பிராகாரப் பிரதக்ஷிணத்தில் மனம் ஈடுபடும்.

பூதிஸாலஸ்ய மாஹாத்மியம் வ்ருஜினக்னம் வ்ருஷப்ரதம்
ச்ராவயேன்மானவான் ஸம்யக் ஸர்வான்
காமானவாப்நுயாத் ॥ 24

விபூதிப் பிராகாச மாஹாத்மியத்தை யாவரும் கேட்கும் படி செய்தால் பாவங்கள் நீங்கி தர்மம் வளரும். எல்லா அபீஷ்டங்களையும் அடைவான்.

ஸர்வாபாபப்ரசமனம் ஸர்வ விக்னவிநாசனம் ।
ஸர்வஸித்திகரம் பும்ஸாம் பூதிப்ராகாரவைபவம் ॥ 25

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விபூதிப் பிராகார மஹிமையைக் கேட்பதால் சர்வ பாபங்களும் விலகும். எல்லா இடையூறுகளும் விலகும். மனிதர்களுக்கு சர்வ கார்ய சித்திகளும் ஏற்படும்.

யோபூதிஸாலவர்யஸ்ய மாஹாத்ம்யச்ரவணோத்ஸுக:
ஸோபி யாதி சிவஸ்தானம் கிம் புன:
ச்ரவணாத்த்விஜா : ll 26

எவனொருவன் விபூதிப் பிராகார மாஹாத்மியத்தைக் கேட்க விரும்புகிறானோ அவன் கைலாஸம் செல்வான். ஓ அந்தணர்களே! மாஹாத்மியத்தைக் கேட்பவனைப் பற்றிக் கூறவேண்டுமா?

ஏவம் ந்ருபாஸ்தே விரசய்ய சாங்கரம்
கைங்கர்யவர்யம்ஹி கணத்வமாபு: ।
ஏவம் கஜாரண்ய பதிப்ரபாவம் ச்ருண்வன
நரோ முச்யதி கில்பிஷைர்வரை: ll 27

இவ்வாறு அரசர்கள் சிவகைங்கர்யம் செய்து கைலாஸத்தில் பரமசிவனுக்கு கணங்களாகி விட்டனர். இவ்வாறான கஜாரண்ய க்ஷேத்திர நாயகனின் மஹிமையைக் கேட்பவன் மஹா பாபங்களிலிருந்து விலகி விடுவான்.

புண்யானி ஸர்வானி சிவஸ்ய தர்சனாத்
ஸாத்யானி தான்யத்ர பவந்தி ஹே த்விஜா: ।
சோணாக்ஷசோளோபி சிவஸ்யமுத்ரிகாம்
மத்ஸ்யாங்கிதாம் கர்பக்ருஹே வ்யதாச்சிரம் ll 28

இதி ஸ்ரீ பாத்மேயபுராணே கஜாரண்ய மாஹாத்மியே
உமாமஹேச்வர ஸம்வாதே விபூதிப்ராகார
மஹிமானுகதனம் நாம சதுர்விம்சோத்யாய:

ஓ, அந்தணர்களே! இங்குள்ள ஜம்புகேச்வரரை தரிசித்தால் எல்லா புண்யங்களையும் செய்த பயனை அடைந்து விடலாம். சோணாக்ஷசோளனும் மத்யஸ்த்தை அடையாளமாக் கொண்ட சிவனுடைய முத்திரையை கர்பகிருஹத்தில் முன்னமேயே செய்தார்.

ஆஸ்திகர்கள் அச்வமேத பயனை அளிக்கும் இந்த விபூதி ப்ராகார பிரதக்ஷிணத்தை நேரில் சென்று செய்ய முடியாவிடில், அங்குள்ள உத்தமர்களைக்கொண்டு பொருளுதவி செய்து பிரதக்ஷிணத்தை செய்வித்து பயனை அடையலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ லலிதா நவரத்ன மாலை

ஞான கணேசா சரணம் சரணம்
ஞான ஸ்கந்தா சரணம் சரணம்
ஞான ஸத்குரு சரணம் சரணம்
ஞானா னந்தா சரணம் சரணம்

காப்பு

ஆக்கும் தொழில் ஐந்தறனாற்ற நலம்
பூக்கும் நகையாள் புவனேஸ்வரிபால்
சேர்க்கும் நவரத்தின மாலையினைக்
காக்கும் கணநாயக வாரணமே

மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

வைரம்

கற்றும் தெளியார் காடேகதியாய்
கணமூடி நெடுங்கன வானதவம்
பெற்றும் தெளியார் நிலையென்னில் அவம்
பெருகும் பிழையேன் பேசத்தகுமோ
பற்றும் வயிரப் படைவாள் வயிரப்
பகைவர்க்கெமனாக எடுத்தவளே
வற்றாத அருட்சுனையே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே (மாதா)

நீலம்

மூலக்கனலே சரணம் சரணம்
முடியா முதலே சரணம் சரணம்
கோலக்கிளியே சரணம் சரணம்
குன்றாத ஒளிக்குவையே சரணம்
நீலத்திருமேனியிலே நினைவாய்
நினைவற்றெளியேன் நின்றேன் அருள்வாய்
வாலைக்குமரி வருவாய் வருவாய்
மாத ஜெய ஓம் லலிதாம்பிகையே (மாதா)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முத்து

முத்தேவரும் முத்தொழியயலாற்றிடவே
முனங்கன்றருளும் முதல்வி சரளம்
வித்தே விளைவே சரணம் சரணம்
வேதாந்த நிவாசினியே சரணம்
தத்தேறிய நாள் தனயன் தாய் நீ
சாகாத வரம் தரவே வருவாய்
மத்தேறு தத்திக்கினை வாழ்வடையேன்
மாத ஜெய ஓம் லலிதாம்பிகையே (மாதா)

பவளம்

அந்தி மயங்கிய வானவி தானம்
அன்னை நடம் செய்யும் ஆனந்த மேடை
சிந்தை நிறம் பவளம் பொழிபாரோர்
தேன் பொழிலா மிது செய்தவள் யாறோ
எந்தை யிடத்தும் மனத்தும் இருப்பாள்
எண்ணுபவர்க்கருள் எண்ணமிருந்தாள்
மந்திர வேத மயப் பொருளானாள்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே (மாதா)

மாணிக்கம்

காணக் கிடையா கதியானவளே
கருதக் கிடையாக் கலையானவளே
பூணக்கிடையாப் பொலிவானவளே
புனையக் கிடையாய் புதுமைத்தவளே
நாணித்திரு நாமமும் நின் துதியும்
நவிலாதவரை நாடாதவளே
மாணிக்க ஒளிக்கதிரே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பியையே (மாதா)

மரகதம்

மரகத வடிவே சரணம் சரணம்
மதுரித பதமே சரணம் சரணம்
சுரபதி பணியத் திகழ்வாய் சரணம்
சுதிஜதிலயமே இசையே சரணம்
ஹர ஹர சிவ என்றடியவர் குழும
அவரருள் பெற அருளமுதே சரணம்
வர நவநிதியே சரணம் சரணம்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே (மாதா)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோமேதகம்

பூமேவிய நான் புரியும் செயல்கள்
பொன்றாது பயன் கன்றா வரமும்
தீமேல் இடினும் ஜெய சக்தி எனத்
திடமாய் அடியேன் மொழியும் திறமும்
கோமேதகமே குளிர்வான் நிலவே
குழல்வாய் மொழியே வருவாய் தருவாய்
மாமேருவிலே வளர் கோகிலமே
மாதா ஜெய் ஓம் லலிதாம்பிகையே (மாதா)

பதுமராகம்

ரஞ்சனி நந்தினி அங்கணி பதும
ராகவிகாஸ வியாபினி அம்பா
சஞ்சல ரோக நிவாரணி வாணி
சாம்பவி சந்த்ர கலாதரி ராணி
அஞ்சன மேனி அலங்க்ருத பூரணி
அம்ருத ஸொரூபிணி நித்ய கல்யாணி
மஞ்சுள மேரு சிருங்க நிவாஸினி
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே (மாதா)

வைடூரியம்

வலையொத்த வினை கலையொத்த மனம்
மருளப் பளையாரொலி யொத்த விதால்
நிலையற் றெளியேன் முடியத்தகுமோ
நிகளம் துகளாக வரம் தருவாய்
அலையற் றசைவற் றநுபூதி பெறும்
அடியார் முடிவாழ் வைடூரியமே
மலையத்துவசன் மகளே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே (மாதா)

பயன்

எவர் எத்தினமும் இசையாய் லலிதா
நவரத்தின மாலை நவின்றிடுவார்
அவர் அற்புத சக்தி எல்லாம் அடைவார்
சிவரத்தினமாய் திகழ்வா ரவரே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே (மாதா)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ வித்யா புத்தகங்கள்

சரியை :

ஸ்ரீ சக்ர நாயகிகள்
ஸ்ரீ வித்யா மகாயாகக்ரமம்
தேவி நவாவரண பூஜை

கிரியை :

சண்டி ஹோம விதானம்
ஸ்ரீ வித்யா ஹோமமம்
(லகு பூஜையுடன்)

யோகம் :

குண்டலினி சக்தி
ஆறாதாரங்களில் அம்பிகை

ஞானம் :

தேவி மானஸ பூஜை
வரிவஸ்யா ரகசியம்

விவரங்களுக்கு

பிரதிபா பிரசுரம்

'லலிதாலயா'

95/1, ஆடம் தெரு, மயிலாப்பூர்,
சென்னை–600 004. போன் : 99413 82852

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரதிபாவின் இதர புத்தகங்கள்

கருணை காமாக்ஷி

ஏன் பள்ளி கொண்டீர்?

தீப தரிசனம்

வாழ்க்கை தத்துவங்கள்

பாராயண மாலா

கண் கண்ட தெய்வம் கருமாரி

தேவி காயத்ரீ

தீர்க்க சுமங்கலி பவ

ஸ்ரீ வித்யா மகாயாகக்கிரமம்

தேவி நவாவரண பூஜை

குஞ்சிதாங்ரி ஸ்தவம்

விவரங்களுக்கு

பிரதிபா பிரசுரம்

'லலிதாலயா'

95/1, ஆடம் தெரு, மயிலாப்பூர்

சென்னை–600 004. போன் : 99413

Atma Guna Sidananda Mayam -

9111980

GIRI MRP : 60.00